கீதாசாரத் தாலாட்டு



உரையாசிரியர்

ஞானகுரு பெ.ராதாகிருஷ்ணன்

கணபதி பதிப்பகம்

பாடியநல்லூர், சென்னை - 600 052.

உ

ஓம் தத் ஸத்

சிவமயம்

கீதாசாரத் தாலாட்டு

(மூலமும், உரையும்)

உரையாசிரியர்

ஞானகுரு

பெ.இராதாகிருஷ்ணன்

வீரபாண்டி, தேனி மாவட்டம்.

கணபதி பதிப்பகம்

1/349, திருப்பூர்க்குமரன் தெரு,

பாடியநல்லூர், சென்னை - 52.

கீதாசாரத் தாலாட்டு

(மூலமும், உரையும்)

முதற்பதிப்பு	:	மார்ச் 2016
உரிமை	:	ஆசிரியருக்கே
ஆசிரியர்	:	ஞானகுரு. பெ.இராதாகிருஷ்ணன்
நூல் பொருள்	:	ஆன்மீகம்
படிகள்	:	1200
பக்கங்கள்	:	152
அளவு	:	டெம்மி 1/8
கணினி அச்சு	:	பிரியங்கா கிராபிக்ஸ்
மொழி	:	தமிழ்
தாள் அச்சு	:	பிரியங்கா கிராபிக்ஸ், பெரம்பூர், சென்னை - 600 011.
வெளியீடு	:	கணபதி பதிப்பகம், பாடியநல்லூர், சென்னை - 600 052.
விலை	:	ரூ. 100

உ
சிவமயம்

கோவிலூர் மடாலயம்
கோவிலூர் - 630 307.
(வழி - மானகிரி)
சிவகங்கை மாவட்டம்

☎ 04565 - 236846

நாள் 05.03.16

ஆசியுரை

கோவிலூர் மடாலயத்தினுடைய வேதாந்த பாரம்பரியம் உலகெங்கும் புகழ்பெற்றது. ஆர்வமுடைய யாவரும் வேதாந்தம் கற்றுக்கொள்வதற்கு ஏதுவாக அழகான தமிழிலே அனைத்து வேதாந்த தத்துவங்களையும் செய்யுள் வடிவிலே தமிழ் வேதாந்த ஞானிகள் உருவாக்கியுள்ளார்கள். அப்படிப்பட்ட நூல்களிலே கல்லூரி / பள்ளி பாடத்திட்டம் போல நூல்களைத் தேர்ந்தெடுத்து கோவிலூர் மடாலயத்திலே பாடம் போதித்து வந்திருக்கிறார்கள். கோவிலூர் மடாலயத்தின் வழியாக ஆயிரக்கணக்கான வேதாந்திகள் உருவாகி உலகெங்கும் வேதாந்த கருத்துக்களை தமிழிலே பரப்பி வந்திருக்கிறார்கள்.

அந்த 16 நூல்களிலே இரண்டாவதாக போதிக்கப் படுகின்ற நூல் "கீதாச்சாரத் தாலாட்டு" ஆகும். இந்நூல் பெயருக்கேற்ப கீதையினுடைய சாரம் முழுவதையும் வடித்துத் தருகின்ற நல் நூல் ஆகும். எளிமையான தாலாட்டு வகையிலான இசைப்பாடல் மூலமாக முமுட்சுக்கள் மனதிலே பதிகின்ற ஆணித் தரமான நூல். கீதையில் போதிக்கப்படுகின்ற கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகியவற்றைப் பற்றியும் இந்நூல் பேசுகின்றது என்றாலும் ஞானயோகத்தின் எல்லாத் தத்துவங்களையும் இந்நூல் தெளிவாக கூறுகின்றது. இதனைப் படிப்பதும் எளிது. புரிந்து கொள்வதும் எளிது. நெஞ்சில் ஏற்றிக் கொள்வதும் எளிது.

இதற்கு நல்லதொரு பதவுரை, பொழிப்புரை எழுதி முமுட்சுக்களுக்கு பயன்படுமாறு நம் அன்பிற்குரிய வேதாந்தி திரு.பெ.ராதாகிருஷ்ணன் அவர்கள் இந்நூலை வழங்கியுள்ளார்கள். திரு.ராதாகிருஷ்ணன் அவர்களும், நம்முடைய கோவிலூர் மடாலயத்தின் மரபிலே குருவிடம் பாடம் கேட்டு சிரவணம் செய்தவர்கள். நம் மடாலயத்தின் பாலும், பேரன்பும் பெருமதிப்பும் உள்ளவர்கள். வேதாந்த தத்துவங்களை தெளிவாக முமுட்சுக்களுக்கு சொல்லக்கூடிய வல்லமை பெற்றவர்கள். அவர்கள் இந்நூலுக்கு விளக்கமாக உரை எழுதியுள்ளார்கள். அவர்களுக்கு நம்முடைய ஆசீர்வாதங்கள்! மேலும் வேதாந்த நூல்களுக்கு விளக்கமும், உரையும் எழுதி உதவவும் நம்முடைய வாழ்த்துக்கள். வேதாந்த மாணவர்கள் நூல்களைப் படித்து பயன் பெறுவார்களாக !

ஸ்ரீ சற்குருநாதன் துணை



முகவுரை

நம் நாட்டில் மனிதர்கள் உயிருடன் இருப்பது ஒரு பக்கம்; அதே சமயம் மற்றவர்களுக்கும் உதவி செய்து கொண்டே வாழ வேண்டும் என்ற மற்றொரு எண்ணமும் முக்கியமாகக் கருதப்படுகிறது. எல்லோரும் மன நிம்மதியுடன் வாழ வேண்டும் என்ற எண்ணம் மிகவும் முக்கியமானது. இதையே, “லோக ஸங்க்ரஹம்” என்றும் அழைப்பர். நம் நாட்டில் வாழ்ந்த பல ரிஷிகள், முனிகள் போன்ற மகான்கள் இப்படியே வாழ்ந்தவர்கள். சாக்ஷாத் பகவான் கிருஷ்ணனும் பகவத்கீதையால், அர்ச்சுனனை நிமித்தமாகக் கொண்டு இத்தகைய உபதேசங்களையே அருளினார். இந்த உபதேசம் “பகவத் கீதை” என்ற பெயருடன் உலகம் முழுவதும் பிரசித்தி பெற்றது. உலகத்திலேயே பல பெரியோர்களால் கையாளப்பட்டு பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. அதே போல் பகவத் கீதையைத் தழுவி பல நூல்களும் எழுதப் பட்டுள்ளன. நம் முன்னோர்கள் அத்தகைய பகவத்கீதா சிந்தனையுடனே வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

இந்த பகவத் கீதையில் 18 அத்யாயங்கள் உள்ளன. மொத்தம் 700 செய்யுள்கள் இருக்கின்றன. பல யோகங்கள் விஸ்தாரமாக (விரிவாக) உபதேசிக்கப் பட்டுள்ளது. ஆயினும் பரமனைப் பெற முக்கியமானது.

"ஸாங்க்ய யோகமே" அல்லது அவரை உண்மையாக அறிய சாதனமானது ஞானமே. அந்த ஞானம் மனிதனின் மனதின் தூய்மையை அனுசரித்துள்ளது. மனதானது நாம் பார்க்கும் பொருள்கள் போல் இல்லாமல், உருவமற்ற நிலையை அடைந்துள்ளது. அதை தூய்மையாக்க வேதத்தில் கூறப்பட்ட தர்மத்தை அனுஷ்டிக்கும் முறை ஒன்றே சாதனமாகிறது. இதற்கே "கர்மயோகம்" என்று பெயர். இத்தகைய கர்ம யோகத்தை ஸ்ரத்தா பக்தியுடன் அனுஷ்டிப்பதும் பகவானையே எப்பொழுதும் மனதில் எண்ணிக் கொண்டிருப்பதும் "பக்தி யோகம்" எனப்படும். பக்தி யோகத்தை அனுசரிப்பவர் (பின்பற்றுபவர்) பக்தர்கள் எனப்படுவார்கள். அந்த பக்தர்களை பகவான் நான்கு விதமாக பிரித்துள்ளார். அவர்கள் 1.ஆர்த்தன் (கவலை வரும்பொழுது பகவானை நினைப்பவன்), 2.ஜிஞ்ஞாசு (ஆவலுடன் கடவுளை அறிந்து கொள்ள முயல்பவன்), 3.அர்த்தார்தி (பணத்துக்காக பகவானை தொழுபவன்), 4. ஞானி (வேறு ஒரு பிரயோஜனம் இல்லாமலேயே பகவானை நினைப்பவன்) இப்படி 4 விதமான பக்தர்களில் ஞானியே மிகச் சிறந்தவன். இந்த மேற்கூறிய கர்ம யோகத்திற்கும், பக்தி யோகத்திற்கும் நடுவில் மனதை நிறுத்த "ஆத்ம சம்யம" யோகமும் ஏற்பட்டுள்ளது. எப்பொழுதும் அலைந்து கொண்டே இருக்கும் சுபாவம் உள்ள மனதை அடக்கி பகவானிடத்தில் சமர்ப்பித்து தன்னை தூய்மையாக்கிக் கொள்வதே ஆத்மசம்யம யோகத்தின் முக்கியக் கருத்து. இதனால் மனிதன் பரமனாகவே ஆகி விடுகிறான்.

இத்தகைய தூய்மையான விஷயத்தை நம் முன்னோர்கள் பலர் தம் வாழ்க்கையில் மேற்கொண்டு ஆனந்த நிலையை அடைந்து உள்ளார்கள். அவர்களின்

எண்ணிக்கைக் கூறமுடிவதில்லை. அவர்களில் ஒருவரானவர் திருவாமாத்தூரில் வசித்த திருவேங்கடநாதர். இவர் பகவான் கிருஷ்ணனைத் தொட்டிலில் இட்டு பாடும் தாலாட்டு மெட்டில் 104 தாலாட்டுப் பாட்டுக்களை அருளியுள்ளார். அவரின் புதல்வியான மதாலஸா எனும் மகள் மேன்மையான (பெண்) கண்ணனை பொம்மையாகச் செய்து பாலகிருஷ்ணனாக பாவித்து இத்தாலாட்டுகளைப் பாடி மிகச் சிறந்ததான நிலையைப் பெற்றுள்ளார். நம் முன்னோர்கள் செய்த பல நூல்கள், பாட்டுகள், செய்யுள்கள் ஆங்காங்கு மறைந்து போய்க் கொண்டு இருக்கின்றன. இத்தருணத்தில், மிக அழகாக, மனதைக் கவரும் முறையில் "பிரேம பக்தி" யுடன் விளங்கிக் கொண்டு உள்ளதும் தத்வங்களை நன்றாக விளக்கிக் கொண்டுள்ளதுமான "கீதாசார தாலாட்டுகள்" மிகவும் அழகாக அமைந்துள்ளன. இவற்றைப் படித்து, அர்த்தத்தை அறிந்து வாழ்க்கையில் மனநிம்மதியைப் பெறலாம். இந்த தாலாட்டுகளையும், அவற்றின் அர்த்தங்களையும் தெளிவான நடையில் எழுதி வாசக லோகத்திற்கு அருளியுள்ளார் திரு.பெ.இராதாகிருஷ்ணன் அவர்கள். இது தமிழ் மக்களுக்கு அவர் செய்த மிகப்பெரிய தொண்டு. இதை வாசித்து அனுபவிப்பதே அவருக்கு மற்றவர்கள் செய்யும் பெரிய உதவி ஆகும். இந்த உரையை அருளிய ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் வாசிக்கும் பக்தர்களுக்கும் லோக குருவான கண்ணன் சகல க்ஷேமங்களையும், மனநிம்மதியையும் அருளட்டும் என்று இறைவனை வணங்கி ஆசீர்வதிக்கிறோம்.

இங்ஙனம்
சிக்ஷை, மீமாம்சை, நியாயம்,
வேதாந்த சிரோண்மணி

கோடா வெங்கடேச சாஸ்திரிகள்
சென்னை - 600 028

உ

கணபதி வணக்கம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

சுப்ரமணியர் வணக்கம்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

குரு வணக்கம்

தந்தை தாயாவானும் சார்கதியிங் காவானும்
அந்தமிலா இன்பம் நமக்காவானும் – எந்தம் உயிர்
தானாகு வானும் சரணாகு வானும் அருட்
கோனாகு வானும் குரு.

சிவபெருமான் வணக்கம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலஉலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

கணபதி முதலிய ஐவர் வணக்கம்

வானவ ரசமாந் தொடர்பினால் உலகோர் வழுத்துறும் வன்னி ஐங்கரனை
வானவ ரதன மணி அறுமுகனை மாசறு கொற்றவாள் இறையை
வானவர் முதுவன் பாலன வலவன் வணங்கு நற்றிரு நெலைமாதை
வானவ ரதனா முத்திரா மேச வள்ளலை வணங்கி வாழ்த்திடுவாம்.

ஓம் தத் ஸத்

சிவமயம்

முகவுரை

அகில உலகத்திலும் தோன்றியது ஏழு விதமான பிறவியும் (1.தாவரம், 2.நீர்வாழ்வன, 3.ஊர்வன, 4.பறப்பன, 5.நடப்பன, 6.மனிதர்கள், 7.தேவர்கள்) நான்கு வகைப் பிறப்பு (1.சராயுஜம் = கருப்பையிலிருந்து தோன்றுவன 2.அண்டஜம் = முட்டையிலிருந்து தோன்றுவன 3.சுவேதஜம் = வியர்வையிலிருந்து தோன்றுவன (பேன் முதலியவை) 4.உத்பீஜம் = விதையிலிருந்து தோன்றுவன) ஆகிய ஜீவராசிகளாம். இவ்வெல்லாப் பிறவிகளிலும் மானிடப் பிறவியே உத்தமம்.

தாவராதி முதல் நாற்கால் பிராணி வரை உள்ள ஐந்து வகையான பிறப்புக்கள் இன்பத்தைக் குறைவாகவும், துன்பத்தை அதிகமாகவும் அனுபவிக்க பிறந்த பிறப்புக்களாம். தேவர்கள் இன்பத்தை அனுபவிக்க பிறந்தவர்கள். இவைகள் அனைத்தும் போக தேகமாம். (அனுபவிக்க எடுத்த உடல்களாம்.) மானிடப்பிறவி மட்டுமே இன்ப துன்பத்தை அனுபவிக்கவும், பாவ புண்ணியத்தைச் சம்பாதிக்கவும், ஞானத்தை அடையவும் தகுதியான பிறப்பாகும். எனவே மனித ஜென்மம் (பிறவி) மேலானதாகும். மனிதப்பிறவி, முமூட்சுத்துவம் (மோட்சமடைய இச்சை), ஞான சற்குரு ஆகிய இம்மூன்றும் கிடைப்பது அரிது.

எல்லா ஜீவராசிகளும் (உயிரினங்கள்) ஞானமடைந்து மோட்சமடையும் வரை பிறந்து கொண்டே இருக்கின்றன. பிறவிகள் மாறி மாறி வருகின்றன என்பதற்கு ஸ்மிருதி பிரமாணம் (வேத அர்த்தத்தை தழுவி செய்யப்பட்ட சாஸ்திரத்தின் வாக்கியம்) "சென்மாந்தரஞ் செய்த வினைகள் உடல் தரும் எனில் செல்காலம் இவன் உண்டலோ, கன்ம அனுபவ நரக சொர்க்கம் எனில் வருகின்ற காலத்தும் இவன்

உண்டலோ" என்பது கைவல்ய நவநீதம். "புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப் பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்" என்பது சிவபுராணம். "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்பது திருக்குறள்.

முதலில் பிறப்பு-இறப்பு; பாவம்-புண்ணியம்; சொர்க்கம்- நரகம்; பந்தம்-மோட்சம் இவைகள் அனைத்தும் இருக்கின்றன என்று சுருதி (வேதம்) சாற்றுகிறது (சொல்கிறது). சுருதிகளிடத்து சிரத்தை (நம்பிக்கை) உள்ளவர்களுக்கே வேதாந்த சாஸ்திரங்கள் பிரயோஜனத்தைக் கொடுக்கும்.

எல்லா ஜீவர்களும் இன்ப, துன்பங்களை அவரவர் முன் செய்த புண்ணிய பாவங்களின் சஞ்சித கர்மங்களினால் (முன்னுள்ள அளவில்லாத பிறவிகளில் மனிதப் பிறவிகளில் மட்டும் செய்த பாவ புண்ணியங்களான கர்ம வினை) உண்டான பிராரப்த கர்ம பலனாக அனுபவித்து கொண்டு வருகின்றனர். பிராரப்த கர்மம் (சஞ்சித கர்மங்களில் ஒரு சில பகுதி மட்டும் இத்தூல தேகத்திற்கு (பருவுடல்) ஈசுவரனால் கொடுக்கப்பட்டது); ஆகாமியம் (இம்மானிட சரீரத்தில் (உடம்பு) சம்பாதிக்கக் கூடிய பாவ புண்ணிய கர்மங்கள்); கர்மம், செயல், வினை, தொழில், காரியம், வியாபாரம் இவைகள் ஒரு பொருளைக் குறிக்கும் சொற்கள்; திரிகரணத்தால் (மனம், வாக்கு, காயம்) செயல் புரிவதை (மனதால் நினைத்தல், வாக்கால் பேசுதல், உடம்பினால் செய்தல்) கர்மம் என்பர்.

மனிதர்கள் உலகப் பொருட்களில் இன்பம் உண்டு என்று எண்ணி உலகப் பொருட்களை அடைய இரவும் பகலுமாக உழைப்பதும், பஞ்ச இந்திரியங்கள் (1.சுரோத்திரம்-காது, 2.துவக்கு-உடம்பு, 3.சட்சு-கண், 4.சிங்குவை-நாக்கு, 5.ஆக்கிரானம்-மூக்கு) மூலமாக பஞ்ச விஷயங்களை (1.சப்தம்-கேட்டல், 2.பரிசம்-தொடு உணர்ச்சி, 3.ரூபம்-உருவம், 4.ரசம்-சுவை, 5.கந்தம்-வாசனை) அனுபவிப்பது மாக உலகத்தில் உழன்று கொண்டிருக்கிறார்கள். பஞ்ச

விஷயங்களில் இன்பம் உண்டு என்று நினைப்பது அறியாமையினால் தான். நாயானது எலும்பைக் கடித்து அதனது தாடையில் எலும்பு குத்தி ரத்தம் வர எலும்பிலிருந்து ரத்தம் வருகிறது என்று எலும்பை திரும்பத் திரும்பக் கடிப்பது போன்றது உலக விஷயங்களில் இன்பம் உண்டு என்று நினைப்பது. பிரியம், மோதம், பிரமோதமாக உலக இன்பங்கள் நமக்குத் தோன்றுகின்றன. (பிரியம்-இஷ்டமான பொருளைப் பார்த்த மாத்திரத்தில் வருகின்ற சந்தோஷத்தை பிரியம் என்று சொல்லப்படும்; மோதம்-அந்த பொருள் கிடைத்தப் பிறகு வருகிற சந்தோஷத்தை மோதம் என்று சொல்லப்படும்; பிரமோதம்-கிடைத்த பொருளை அனுபவிக்கும்போது வருகிற சந்தோஷத்தை பிரமோதம் என்று சொல்லப்படும்.) உலகப் பொருள்களினால் மனம் ஒருநிலைப் படும்போது அம்மனத்தினிடத்தில் ஆத்மாவின் ஆனந்தம் பிரதி பிம்பிக்கின்றது. அப்போது மனமானது இன்பம் அடைகிறது. மனம் அலைந்து கொண்டிருக்கும் போது ஆத்மாவின் ஆனந்தம் மனதில் பிரதிபிம்பிக்கிறதில்லை. அப்போது இன்பம் தெரிவதில்லை. மனம் ஏகாக்கிர (ஒருமைப்பட்ட) நிலையில் இருக்கும்போது மட்டும் ஆன்மாவினது ஆனந்தத் தன்மை மனத்தினிடத்து வெளிப்படும். மன ஒருமைப்பாட்டுக்கு உலகப் பொருட்கள் ஏதுவாக (காரணமாக) ஒருவேளை இருக்கலாமே தவிர, இன்பத்திற்கு ஏதுவாக உலகப் பொருள்கள் இல்லை என்பது முடிவு. உலகப் பொருட்களினால் மனம் ஒருமைப்பாடு அடைந்து அவ்வொருமுகப்பட்ட மனத்தில் ஆன்மாவின் ஆனந்த தன்மை பிரதிபலிப்பதினால் இன்பம் உண்டாகிறதே தவிர உலகப் பொருட்களில் இன்பம் இல்லை என்பது முடிவு.

ஆனந்தமாக இருப்பதற்கு உபாயம் மூன்று :- 1.மன ஒருமைப்பாடு அடைதல், 2.மனம் இல்லாத நிலை, 3.உலகம் துச்சம் (பொய்); பிரம்மம் சத்தியம் என்ற நிலை.

உலகப் பொருட்கள் எதுவும் இல்லாத தூக்கத்தில் ஆனந்தமாக இருக்கிறோம். உலகப் பொருள்களில் இன்பம் இல்லை; ஆன்மா தான் ஆனந்த வடிவம் என்பது வேதாந்த

முடிவு. அஞ்ஞானத்தினால் (அறியாமை) உலகப் பொருள்களில் இன்பம் உண்டு என்று எண்ணுகின்றோம். ஆத்ம ஞானம் அடைந்தவர், "விடயமண் தின்றலைவரோ." என்பது கைவல்லிய நவநீதம்.

மாவின் பணியாரம் இனிப்பதற்குக் காரணம் வெல்லமே தவிர மாவு காரணமில்லை. அதைப் போல், உலகப் பொருட்கள் இன்பமாக தோன்றுவது ஆத்மானந்தத்தால் தவிர உலகப் பொருட்களால் இல்லை என்பது சுருதி, யுக்தி, அனுபவமாம்.

எல்லா மனிதர்களும் பிறந்தது முதல் இறக்கும் வரை துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அத்துன்பங்களை சாஸ்திரங்களில் தாபத்திரயம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. (தாபம், துன்பம், துக்கம், துயரம், கவலை என்பன ஒரு பொருளைக் குறிக்கும் சொற்கள்) திரயம் என்றால் மூன்று என்று அர்த்தம். தாபத்திரயம் என்றால் மூவகையான துன்பங்களாம். 1. அத் ஆத்மீக துக்கம், 2.ஆதி பௌதிக துக்கம், 3.ஆதி தெய்வீக துக்கம். 1.அத்ஆத்மீக துக்கம் = பசி, தாகம், பிறப்பு, இறப்பு, அஞ்ஞானம், நோய் இவைகளால் உண்டாகும் துக்கங்கள். 2.ஆதிபௌதிக துக்கம் = காற்று, அக்கினி, நீர், மண், இடி, பனி இன்னும் அநேக அசேதன (உயிரற்ற, அறிவற்ற) பொருட்களால் உண்டாகும் துக்கங்கள் 3.ஆதி தெய்வீக துக்கம் = மக்கள், மிருகங்கள், சர்ப்பம், திருடர்கள் மற்றும் வேறு உயிரினங்களால் உண்டாகின்ற துக்கங்கள். ஒரு சில நூல்களில் இத்துக்கங்கள் வேறு விதமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. எங்ஙனமாயினும் இம்மூவகை தாபங்களை ஜீவர்கள் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். மானிடப் பிறவியிலேயே இவ்வளவு துன்பம் என்றால் மற்ற பிறவிகளின் துன்பத்தைச் சொல்லவும் வேண்டுமோ!

ரஜோ குணத்தில் உண்டாகின்ற ராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், டம்பம், ஈர்சை, ஆசூயை, தர்ப்பம், அகங்காரம் இவைகளினாலும் மனிதர்களுக்கு நீங்காத துன்பம் உண்டாகிறது.

1. ராகம் = பரதாரம் விரும்புதல்.

2. துவேஷம் = வெறுப்பு.

3. காமம் - 16 வகையான ஐஸ்வரியத்தை மென்மேலும் விரும்புதல்.

4. குரோதம் = தான் சம்பாதித்த பொருளுக்கு விக்கினம் செய்தவர் பேரில் சீற்றம்.

5. லோபம் = அடுத்தவனது பொருளுக்கு ஆசைப்படுதல்.

6. மோகம் = அளவு கடந்த பிரியம்.

7. மதம் = பெரியோர்களை மதியாமை.

8. மாற்சரியம் - தன் செல்வத்தினும் மற்றவன் அதிகம் பெற்றால் பொறாமை.

9. ஈர்சை = பிறர் துன்பமடையவும் தான் அத்துன்ப மடையலாகாது எனவும் விரும்புதல்.

10. அசூயை = தனக்கு வந்த சுகம் போல் பிறர்க்கு வரலாகாது என்பது.

11. டம்பம் = தான் செய்கிற தருமத்தைப் பார்த்து யாவரும் மெச்ச வேண்டும் எனல்.

12. தர்ப்பம் = நானே செல்வத்தில் பெரியவன் எனக்கு சரி ஒருவரும் இல்லை எனல்.

13. அகங்காரம் = பிடிவாதம், யார் எதைச் சொன்னாலும் கேட்காமை.

இப்பிறவியோடு துன்பங்கள் போய்விடும் என்றாலும் பரவாயில்லை. அடுத்தடுத்து பிறவிகளிலும் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றன என்பதை முன்பே விசாரித்தறிந்தோம். எப்பிறவி எடுத்தாலும் துன்பமே. தேவனாய் பிறந்தால் துன்பம் இல்லை எனினும் புண்ணியம் தீர்ந்தவுடன் பூமியில் ஏதேனும் பிறவி எடுத்தாக வேண்டும். "பிணி, பசி, மூப்பு, துன்பம் ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே" என்று ஒரு ஆழ்வாரும் பிறவி வேண்டேன் என்று பிரார்த்தித்துள்ளார். ஆகவே இதுவரை விசாரித்ததில் உலகத்தில் பிறவிகள் தொடர்ந்து மாறி மாறி வருகின்றன. உலகப் பொருட்களில் இன்பம் இல்லை. உலகப் பொருட்கள் துன்பமயமானவை. ஆன்மாதான் ஆனந்த வடிவம். பிரபஞ்சம் (உலகம்) அநிருதசட துக்கம் (நிலையற்றது அறிவற்றது துன்பமயமானது) பிரஹ்மம் அஸ்தி பாதி பிரியம் (சத்து, சித்து, ஆனந்தம்) என்கிறது வேதாந்தம்.

எல்லா சீவர்களும் விரும்புவது துக்க நிவிர்த்தியும், சுகப் பிராப்தியுமாகும். இதனை முக்கிய புருஷார்த்தம் என்பர் மேலோர். அறம், பொருள், இன்பம் ஆகிய இம்மூன்றும் கௌண (முக்கியமல்லாதது) புருஷார்த்தம் ஆகும். அறம், பொருள், இன்பம் ஆகியவைகளை எல்லோரும் எல்லா காலத்திலும், எல்லா இடங்களிலும் விரும்பாமல் ஒருசில நேரங்களிலும், ஒரு சில இடத்திலும் விரும்புவதால் கௌண புருஷார்த்தம் எனப்படும். துக்க நிவிர்த்தி (துன்பத்திலிருந்து விடுபடுதல்) சுகப்பிராப்தியை (இன்ப அடைவு) அனைவரும் விரும்புவதால் முக்கிய புருஷார்த்தமாம். சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்த பிராப்தியே மோட்சமாகும். பெரும்பாலும் மனிதர்கள் சொர்க்கம், வைகுண்டம், சிவலோகம், பிரஹ்ம லோகம் முதலியவற்றின் பிராப்தியை (அடைவு) மோட்சம் என்கிறார்கள். அது வேத விரோதமாம் (முரண்பாடு)

தூல சரீரத்தோடு (பருவுடல்) இருக்கும் போது அடையும் மோட்ச நிலையை ஜீவன் முத்தி என்றும், தூல சரீரம் நாசமான பின் அடையும் மோட்ச நிலையை விதேக முத்தி என்றும் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. எவரொருவர் ஜீவன் முத்தி நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறாரோ அவரே பிராப்த கர்ம முடிவில் விதேக முத்தியை அடைவர். ஜீவன் முத்தி அடையாதவர்கள் விதேக கைவல்லியம் (முத்தி) அடைய மாட்டார்கள் என்பது தாத்பர்யம். (மோட்சம், முத்தி, விடுதலை, அபவர்க்கம், சிரேயசு, பிறவா நிலை, கைவல்யம் ஆகியவைகள் ஒரு பொருளை குறிக்கும் பல சொற்கள்)

அனைவரும் விரும்புவது சர்வ துக்க நிவிர்த்தியும் சுகப் பிராப்தியுமாம். இந்நிலையை அடைவதற்கு எல்லா புருடர்களும் முயற்சி செய்கின்றனர். மோட்சமானது (சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்த பிராப்தி) கர்மத்தால் அடையப் படுவது இல்லை. அடைய முடியாது. பிரஹ்ம ஞானம் ஒன்றினால் மட்டும் மோட்ச மானது அடையப்படும். அடையப்படும் என்பது உப்சாரம். பிரஹ்ம ஞானத்தை அடைவதற்கு குருகிருபை, வேத கிருபை, அந்தக்கரண கிருபை, ஈசுவர கிருபை ஆகிய நான்கும் அவசியம் தேவை. விசாரணை உதயமாயும், ஞானசற்குரு கிடைக்கப் பெறுமாயின் அப்போது ஈசுவர கிருபை கிடைத்துள்ளது என்று அறிந்து கொள்க. சாஸ்திர அநுசாரமாகவும், தனது அனுபவ அனுசாரமாகவும், யதார்த்த (உண்மை) உபதேசம் குரு செய்வாராயின் அப்போது குரு கிருபை கிடைத்துள்ளது என்றறிக. சாஸ்திரத்தின் தாரணாசக்தி (ஞாபக சக்தி) வாய்க்கப் பெறின் வேத கிருபை கிடைக்கப் பெற்றது என்றறிக. வேதாந்த அநுசாரமாகவும், குருவாக்கிய அநுசாரமாகவும் அந்தக்கரணம் செயல்படுமாயின் அந்தக்கரணக் கிருபை கிடைத்துள்ளது என்று அறிக.

ஜீவர்களது அந்தக்கரணத்தில் மூவகையான தோஷங்கள் இருக்கின்றன. 1.மலம், 2.விக்ஷேபம், 3.ஆவரணம் இம்மூவகை தோஷங்களை நிவர்த்தி செய்வதற்கு ஈசுவரன் வேதங்களை மூன்று காண்டங்களாக நமக்கு அருளியிருக்கிறார். முன் சென்மங்களில் செய்த பாவ கர்மங்களினால் சித்தத்தில் (அடிமனதில்) அசுப வாசனை (அசுத்தம்) பொருந்தி இருக்குமாயின் மல தோஷம் உண்டு என்று அறிக. (அசுபவாசனை சித்தத்தில் செய்யக் கூடாத செயல்களில் ஈடுபாடு அல்லது உலக விஷய போகத்தில் ஆசை தோன்றுதல்) மலதோஷத்தைப் போக்க வழி 1.வேதத்தில் சொல்லப் பட்ட (விதிக்கப்பட்ட) கர்ம காண்டத்தில் கூடிய கர்மங்களை நிஷ்காம்யமாக செய்தல் (பலனை கருதாமல் செயல் செய்தல்) 2.எல்லா சீவர்களிடத்தினும் வைக்கப்பட்ட தயை (அன்பு, இரக்கம்) விக்ஷேப தோஷத்தை போக்க உபாயம் ஈஸ்வர நாம உச்சாரணம் (ஜபம்) நிஷ்காமபக்தி முதலியனவாம். நமது யதார்த்த (உண்மை) சொரூபமான ஆத்ம சொரூபத்தை அறிய ஒட்டாமல் மறைப்பது ஆவரணம். ஆவரண தோஷ நிவிர்த்திக்கு உபாயம் பிரஹ்ம ஞானம் அடைதல்.

மலதோஷத்தை நீக்கும் உபாயத்தைக் கர்ம காண்டமும், விக்ஷேப தோஷத்தை நீக்கும் உபாயத்தை உபாசனா காண்டமும், ஆவரண தோஷத்தை நீக்கும் உபாயத்தை ஞான காண்டம்மாக வேதங்கள் மனிதர்களுக்கு போதிக்கின்றது. எனவே யாரொருவர் இம்மூவகை தோஷங்க்ளிலிருந்து விடுபடுகிறாரோ அவரே மோட்ச மடைவர். வேதங்களில் பூர்வ மீமாம்சை, உத்தர மீமாம்சை என்ற இரண்டு பிரிவு உண்டு. பூர்வ மீமாம்சையில் கர்ம காண்டமும், உபாசனா காண்டமும் சொல்லப் பட்டிருக்கிறது.

உத்தர மீமாம்சையில் ஞான காண்டம் போதிக்கப் பட்டுள்ளது. ஆத்ம ஞானம், பிரஹ்ம ஞானம், பிரஹ்ம வித்தை, வேதாந்தம், உத்தர மீமாம்சை, உபநிஷத், இவையனைத்தும் ஒரு பொருளைக் குறிப்பன.

வேதாந்தத்தை ஒரு ஞானாசாரியாரிடத்து சென்று விதி முறைப்படி நடந்து கேட்டுத்தான் அறிந்து கொள்ள முடியும். மலம், விக்ஷேபம் என்ற இரண்டு தோஷமும் இல்லாமல் ஆவரண தோஷம் மாத்திரம் உள்ள அதிகாரி ஞானாசாரியரிடம் சென்று உபதேசம் கேட்டு (மகா வாக்கியம்) தெரிந்து கொண்டானேயானால் விரைவில் ஞான நிலையை அடைந்து பக்குவம் அடைவான்.

வேதமும், வேதத்திற்குள்ளே உள்ள உபநிஷத்தும் (ஞான சாஸ்திரம்) ஈசுவரனால் உண்டாகப் பட்டது (அபௌருஷியம்) குரு பரம்பரையாக வந்த ஞான குருவினிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டுமேயல்லாமல் தானாக ஆத்ம ஞானம் உண்டாகாது. இந்த ஞான உபதேசத்தை (அத்துவிதம்) மகாவிஷ்ணு, பிரம்மாவுக்கும்; பிரம்மா வசிஷ்டருக்கும்; வசிஷ்டர் சக்திக்கும், சக்தி பராசரருக்கும்; பராசரர் வியாசருக்கும்; வியாசர் சுக தேவருக்கும்; சுக தேவர் ஸ்ரீகௌடபாதாசாரியருக்கும்; ஸ்ரீகௌடபாதாசாரியார் ஸ்ரீ கோவிந்த பாதாசாரியாருக்கும்; ஸ்ரீகோவிந்த பாதாசாரியார் ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகளுக்கும் அருளியுள்ளார்கள்.

இந்த வேதாந்த சாஸ்திரமானது பூர்வம் சம்ஸ்கிருத பாஷையில் மட்டும் பெரும்பாலும் இருந்து வந்துள்ளது. சம்ஸ்கிருதத்தில் உபநிஷத்துக்கள், பிரம்ம சூத்ரம், ஸ்ரீமத் பகவத் கீதை என்ற (மூன்று) பிரஸ்தானதிரயங்கள் இருந்து

வருகின்றன. அநேக ஞான சாஸ்திரங்கள் சம்ஸ்கிருதத்தில் இருக்கின்றன. அவைகளில் இம்மூவகை முக்கிய மானவைகள். இந்த ஞான சாஸ்திரங்களை (நூல்) சம்ஸ்கிருத பாஷாக் ஞானம் தெரிந்தவர்கள் மட்டும்தான் அறிந்து கொள்ள முடியுமே தவிர மற்ற பாஷை (மொழி) தெரிந்தவர்கள் அறிந்து கொள்ள முடியாது. சம்ஸ்கிருத பாஷையும் தெரிந்து, வேதாந்தமும் தெரிந்து ஞான குருவினிடம் உபதேசம் பெற்ற ஞானகுருவினிடம் உபதேசம் கேட்டுத் தான் தெரிந்து கொள்ள வேண்டுமேயல்லாமல் தானாக அறிந்து கொள்ள முடியாது. சம்ஸ்கிருத பாஷை தெரிந்த ஞான சற்குரு கிடைப்பதும் அரிது. தமிழ் மக்களாகிய நாம் சமஸ்கிருத பாஷாக் ஞானம் அடைவதும், அதன் மூலம் வேதாந்தத்தைத் தெரிந்து கொள்வதும் மிகவும் கடினம்.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்களாகிய நம்முடைய புண்ணிய வசத்தால் 1818 ம் ஆண்டு காரைக்குடியின் மேற்கே 2கி.மீ தொலைவில் அமைந்துள்ள கோவிலூர் மடத்தை தவத்திரு. ஆண்டவர் சுவாமிகள் ஸ்தாபித்தார். சுவாமியின் பூர்வாச்ரம பெயர் முத்துராமலிங்கம். முத்துராமலிங்க ஆண்டவர் சுவாமிகள் சிக்கல் அருகே உள்ள பொருள்வைத்தசேரி என்னும் திருத்தலத்தில் உகந்தலிங்க சுவாமிகளிடம் வேதாந்த சாஸ்திரங்களை தமிழில் முறையாக பயின்றார். ஆண்டவர் சுவாமிகள் கோவிலூர் மடத்தில் நாள்தோறும் ஞானவேள்வி (சிரவணம்) நடத்தி வந்துள்ளார்கள், கோவிலூர் மடத்தில் கிருகஸ்தர்களும் (இல்லறத்தார்கள்) வேதாந்தத்தை தமிழில் கற்று ஞானிகளாய் இருந்திருந்திருக்கிறார்கள்.

கோவிலூர் மடத்தில் முறைப்படி 16 சாஸ்திரங்கள் (ஞான நூல்கள்) தமிழில் சிரவணம் நடைபெற்றுக் கொண்டு வந்தது. முதலில் ஒன்பது நூல்களும் பின்பு ஏழு நூல்களுமாக சிரவணம் (பாடம்) நடத்தப்பட்டு வந்துள்ளது.

பதினாறு நூல்களின் பெயர்கள் :-

1. நாநா சீவ வாதக்கட்டளை
2. கீதாச்சாரத் தாலாட்டு
3. சசிவன்ன போதம்
4. மகாராஜா துறவு
5. வைராக்கிய சதகம்
6. வைராக்கிய தீபம்
7. இலட்சணா விருத்தி
8. வேதாந்த சூடாமணி
9. கைவல்ய நவநீதம்
10. விவேக சூடாமணி
11. அஞ்ஞவதைப் பரணி
12. பஞ்சதசி
13. ஈசுவர கீதை
14. பிரம்ம கீதை
15. பகவத் கீதை
16. ஞானவாசிட்டம்

வேதாந்தத்தை தெளிவாக அறிந்து கொள்ள இந்த பதினாறு நூல்களையும் குருபரம்பரையாக வந்து கொண்டிருக்கின்ற ஞான சற்குருவினிடம் முறையாக சிரவணித்து (கேட்டு) தெரிந்து கொள்ள வேண்டும். தானாக இந்நூல்களை படித்தால் ஓரளவு பிரயோஜனம் உண்டு. தவறாக அர்த்தம் எடுத்துக் கொண்டால் பாவமும் வரக்கூடும். இப்பதினாறு சாஸ்திரங்களில் (நூல்களில்) ஒன்றான "கீதாச்சாரத் தாலாட்டு" என்ற சாஸ்திரத்திற்கு குருவருளும், திருவருளும் துணை கொண்டு உரை செய்துள்ளோம். பிழையிருப்பின் உலகம் பொறுக்க.

– சுபம் –

திரு. பெ.ராதாகிருஷ்ணன்
ஞானகுரு
வீரபாண்டி, தேனி மாவட்டம்.

சிவமயம்

நூன்முகம்

மகாபாரதத்தில் பகவான் கிருஷ்ணர் அர்ஜுனனை நிமித்தமாகக் கொண்டு உலகத்தார் அனைவரும் ஞானம் பெற்று மோட்சம் அடையும்படி "ஸ்ரீமத் பகவத்கீதை" என்ற பொக்கிஷத்தை அருளியுள்ளார். ஸ்ரீமத் பகவத்கீதையானது 700 சுலோகங்களாக சம்ஸ்கிருத பாஷையில் அமைந்துள்ளது. பகவத் கீதையின் தாத்பரியத்தை தமிழில் வசன வடிவமாகவும், செய்யுள் வடிவமாகவும் மொழி பெயர்த்திருக்கின்றனர் முன்னோர்கள். சேம நகர் பட்டர் பகவத் கீதையை தமிழில் 545 பாக்களாக மொழி பெயர்த்துள்ளார். அந்நூலுக்கு "பரமார்த்த தரிசனம்" என்று பெயர்.

பரமார்த்த தரிசனத்தை மூலமாகக் கொண்டு திருவாமாத்தூரில் எழுந்தருளியிருந்த திருவேங்கட நாதர் என்னும் வித்வத் சிரேஷ்டர் (அறிவில் மேலானவர்) கர்மம், பக்திகளை விட்டு ஞானார்த்தத்தை மட்டும் கிரகித்து பாலகிருஷ்ணனை தொட்டிலில் இட்டு தாலாட்டுவது போன்று தாலாட்டு சாஸ்திரமாக 104 செய்யுள்களில் இயற்றியுள்ளார். அதற்கு "கீதாச்சாரத் தாலாட்டு" என்று பெயரிட்டுள்ளார்.

திருவேங்கட நாதருக்கு அறிவிலும் அழகிலும் இரு புதல்விகள் இருந்தனர். இவர்களுள் ஒருத்திக்கு குழந்தைப் பேறு இல்லாமல் வருத்தமுற்று இருந்தனள். அன்பு மகளின் ஏக்கம் காணச் சகியாத திருவேங்கட நாதர் அழகிய கண்ணனை பொம்மையாக செய்து கொடுத்து, "இப்பாலகிருஷ்ணனை தொட்டிலில் இட்டு அருமை மைந்தனாகவே கருதித் தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி மகிழ்ச்சி பெறுக" என்று ஆசி கூறினார்.

தாலாட்டுப் பாடுவதற்காக இந்த கீதாச்சாரத் தாலாட்டு என்ற சாஸ்திரத்தை இயற்றி தனது மகள் மதாலசாவுக்கு கொடுத்து அருளியுள்ளார். மதாலசாவானவள் பொம்மையான பாலகிருஷ்ணனை, கிருஷ்ணனாகப் பாவித்து தொட்டிலில் இட்டு தாலாட்டுப் பாடி வந்துள்ளாள். அவளுக்கு அதன் பின்பு புத்திரப் பேறு உண்டாயிற்று என்பது வரலாறு.

(பிரபந்தம், கிரந்தம், சாஸ்திரம், நூல் இவைகள் ஒரு பொருள்கிளவி)

பதிப்புரை

"யான் பெற்ற இன்பம்
பெருக வையம்"

என்ற தேனமுது மொழிக்கிணங்க கீதாச்சார தாலாட்டு என்னும் இவ்வுரைநூல் மிகவிரிவாக, தெளிவாக அர்ப்பணிப்பு உணர்வுடன் வரையப்பட்ட உரை என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

உரையாசிரியரின் இரண்டாம் படைப்பாக வெளிவரும் இந்நூலை வேதாந்த உலகிற்கு சமர்ப்பிப்பதில் மட்டற்ற ஆனந்தத்தையும், மகிழ்வையும் பெற அருளிச் செய்த இறைக்கு எங்கள் போற்றுதல்களை சமர்ப்பிக்கிறோம்.

எல்லாம் வல்ல பரம்பொருள் நல்வழி வகுக்குமாக !

மகிழ்வுடன்
வணக்கமும், நன்றியும் சமர்ப்பிக்கும்

கணபதி பதிப்பகத்தார்
பாடியநல்லூர்,
சென்னை - 600 052.
கைபேசி : 94440 14117

ஓம் தத் ஸத்
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கீதாசாரத் தாலாட்டு மூலமும், உரையும்

காப்பு

மங்கலம் என்பது விக்கின நாசத்திற்கு அனுகூலமான வியாபாரமாம். நூல் விக்கினமில்லாமல் நன்கு முடியும் பொருட்டு செய்யும் காரியம் மங்கலமாம். அம்மங்கலம் வஸ்து நிர்த்தேச ரூபமங்கலம், நமஸ்கார ரூபமங்கலம், ஆசீர்வாத ரூபமங்கலம் என மூவகைப்படும். சகுனம் அல்லது நிர்க்குண வஸ்துவின் கீர்த்தனம் (துதி) அல்லது இயல்பு உரைத்தல் வஸ்து நிர்த்தேச ரூபமங்கலம் எனப்படும். இறைவனை அல்லது குருவை மனம் வாக்கு காயம் என்ற திரிகரணங் களினால் வழிபடல் வஸ்து நமஸ்கார ரூபமங்கலம். தன் பொருட்டாவது (நூல் விக்கினமின்றி நிறைவேறும் பொருட்டாவது) அல்லது சீடனுக்கு நல்ல கதி உண்டாகட்டும் என்றாவது அல்லது இந்நூலை பார்ப்பவரிடத்து நாஸ்திக பிராந்தி உண்டாகாது இருக்கட்டும் என்றாவது செய்யும் மங்கலம் ஆசிர்வாத ரூப மங்கலம் எனப்படும்.

இந்நூலாசிரியர் நூல் இனிது நிறைவேறும் பொருட்டு இஷ்ட தெய்வ நமஸ்கார ரூபமங்கலத்தை அங்கீகரிக்கின்றார்.

ஐவகைப் பொருளு நான்குகரணமுங் குணங்கள் மூன்றுஞ்
செய்வினை இரண்டுமொன்றி யாவருந் திகைப்ப நின்ற
பொய்யிருள் அகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள்
கைவ ளராழிச் செங்கட் கண்ணனைக் கருத்துள் வைப்பாம்

இதன் பதப்பொருள் :

<u>ஐவகைப் பொருளும் :</u> ஐந்து விதமான பிருதிவியாதி ஐந்து பூதங்களும் இந்தப் பூதங்களில் தோன்றிய தூல சரீரமும் சுரோத்திராதி ஞானேந்திரியங்கள் ஐந்தும், வியானாதி வாயுக்கள் ஐந்தும், வாக்காதி கர்மேந்திரியங்கள் ஐந்தும்.

நான்கு கரணமும் : அந்தக்கரணம் நான்கும்

குணங்கள் மூன்றும் : சத்துவாதி குணத்திரயங்களும்

செய்வினை இரண்டும் : திரிகரணங்களால் செய்யப்படுகின்ற புண்ணிய பாவங்களாகிய இரண்டு கர்மங்களும்.

ஒன்றி : இவையனைத்தும் பொருந்தி

யாவரும் : (ஞானியையும், ஈசுவரனையும் தவிர மற்ற எல்லா சீவர்கள்) அனைவரும்.

திகைப்ப நின்ற : மயங்கும்படி (சுவாசிரய சுவவிஷயமாக) நிற்கின்ற

பொய்யிருள் : (அநிர்வசனீய) அவித்தை அந்தகாரமானது

அகல : நீங்குதற் பொருட்டு

ஞானப்பொருள் கதிர் விரித்த : பிரஹ்ம ஞானமென்னும் கீதாசாஸ்திர ஞானார்த்தங்களாகிய கிரணங்களால் சகல உலகின் கண்ணும் பரப்பிய.

புத்தேள் : சூரியனாகிய

கைவளர் ஆழி செம்கண் கண்ணனை : திருக்கரத்தில் பிரகாசிக்கின்ற சக்கரத்தையும் சிவந்த கண்களையும் உடைய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை

கருத்துள் வைப்பாம் : சிந்தையின் கண் வைத்து தியானிப்பாம்.

சுவாசிரய சுவ விஷயம் : சூரியனால் தோன்றிய மேகம் சூரியனை மறைப்பது போல ஆத்மாவினிடத்திலே தோன்றிய அவித்தையானது ஆத்மாவை மறைப்பதாம்.

அநிர்வசனீயம் : இப்படிப்பட்டது என்று சொல்ல முடியாதது.

அவித்தை : அஞ்ஞானம், அறியாமை, மாயை, பிரகிருதி, ஆவரணம் இவைகள் ஒரு பொருட்கிளவி

பொழிப்புரை :

பிருதிவியாதி பூதங்கள் என்ற பிருதிவி, நீர், நெருப்பு, காற்று, ஆகாயங்களான ஐந்து தூல பூதங்களும், இத்தூல பூதங்களில் தோன்றிய தூல சரீர தத்துவம் ஆறும் (சருமம் (தோல்), உதிரம் (இரத்தம்), மாமிசம் (சதை), சனாயு (நரம்பு), அஸ்தி (எலும்பு), மஜ்ஜை (மூளை), (சுரோத்திரம் (காது), துவக்கு (உடம்பு), சட்சு (கண்), சிங்குவை (நாக்கு), ஆக்கிராணம் (மூக்கு) என்ற ஞானேந்திரியம் ஐந்தும், (வாக்கு (வசனம்), பாணி (இடுதல், ஏற்றல்) பாதம் (நடத்தல்), பாயுறு (மல ஜலம் கழித்தல்), உபஸ்தம் (சுகத்தை பண்ணுதல்) என்ற கர்மேந்திரியங்கள் ஐந்தும்; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அந்தக்கரணம் நான்கும்; சத்துவம், ரஜசு, தமசு என்ற குணங்கள் மூன்றும், மனது, வாக்கு, காயம் என்ற திரிகரணங்களால் செய்யப் படுகின்ற புண்ணிய, பாவமாகிய இரண்டு கர்மங்களும் இவையனைத்தும் சேர்ந்து (ஞானியையும் ஈசுவரனையும் தவிர) மற்றைய எல்லா சீவர்களையும் ஒன்றற்கொன்று வேறுபாடு தெரிய வொட்டாமல் மயங்கும்படி செய்கின்றது அவித்தையாம். இந்த அவித்தையான இருள் நீங்குவதற்கு பிரஹ்ம ஞான ஸ்வரூபம் என்னும் கீதா சாஸ்திரார்த்தங்களாகிய கதிர்களை சகல உலகத்திற்கும் பரப்பிய சூரியனாக திருக்கரத்தில் பிரகாசிக்கின்ற சக்கரத்தையும் சிவந்த கண்களையும் உடைய ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை மனதின் கண் வைத்து தியானிப்பாம்.

விளக்கம் :

பூதங்கள்-5, தூலசரீரம்-6, சூட்சும சரீரம்-20, (ஞானேந்திரியம்-5, அந்தக்கரணம்-5, கர்மேந்திரியம்-5, வாயுக்கள்-5) காரண சரீரம்-5 (பிரஹ்மம், மாயை, ஈசுவரன், அவித்தை, ஜீவன்) ஆக 36 தத்துவம் வேதாந்தத் தத்துவமாம். 36 தத்துவத்தில் உண்மை எது? பொய் எது? என்று தெரிய ஒட்டாமல் மறைப்பது அவித்தை என்று சொல்லப் பட்ட ஆவரணமாம். பிரஹ்மம் ஒன்றே சத்தியம். 35 தத்துவமும் மித்தை (பொய்) என்பது வேதாந்த சித்தாந்தமாம்

இங்கு அந்தக்கரணத்தில் உள்ளத்தை நீக்கி அந்தக்கரணம் நான்கு என்றார். ஒரு சில சாஸ்திரங்களில் அந்தக்கரணம் இரண்டு என்பர். சட இருளை போக்குவது சடசூரியப் பிரகாசம். அது போல அவித்தையாகிய இருளை போக்குவது பிரஹ்ம ஞானம் எனும் அறிவுப் பிரகாசமாம்.

சிறப்புப் பாயிரம்

மாதையர் கோன் வேத நவில் வாய் வேங்கட நாதன்

காதையுறப் பார்த்தனுக்குக் கண்ணன் அருள் – கீதைக்

கருத்துயர் தாலாட்டாகக் கட்டுரைத்தான் யாரும்

கருத்துயர் தீர்ந்து எய்தக் கதி.

இதன் பதப்பொருள் :

மாதையர் கோன் : திருவாமாத்தூரில் (உள்ள மக்களுக்கு) தலைவராயும்

வேத நவில் : வேதங்களை அத்தியயனம் செய்கின்ற

வாய் வேங்கட நாதன் : வாக்கினை யுடையவராயுள்ள ஸ்ரீவேங்கட நாதன் (எனும் நாமம் உடையவன்)

காதையுற : (யுத்தத்தில் எதிரிகளை) கொல்லும்படியாக

பார்த்தனுக்கு : அர்ஜுனனுக்கு

கண்ணன் அருள் கீதை : கண்ணபிரான் உபதேசித்த பகவத் கீதையின்

கருத்து : (ஞானார்த்த ரூப) தாத்பரியத்தினை

யாரும் : மோட்ச இச்சையுடைய எவரும்

கருதுயர் தீர்ந்து : பிறவி துன்பத்தினின்றும் விடுபட்டு

கதி எய்த : மோட்சமடைய

உயர் தாலாட்டாகக் கட்டுரைத்தான் : மேன்மை பொருந்திய தாலாட்டு பிரபந்தமாக தொகுத்தளித்தார்.

பொழிப்புரை :

திருவாமாத்தூர் என்ற திருத்தலத்தில் உள்ள மக்களுக்கு தலைவராயும், வேதங்களை ஓதுகின்ற வாக்கினை யுடையவராயும் உள்ள ஸ்ரீவேங்கடநாதன் என்ற மகான், யுத்தத்தில் எதிரிகளை கொல்லுதலை செய்யும்படி அர்ச்சுனனுக்கு பகவான் உபதேசித்த பகவத் கீதையை, மோட்சமடைய இச்சையுள்ள யாவரும் பிறவித் துன்பத்திலிருந்து நீங்கி மோட்சமடைய மேன்மை பொருந்திய "கீதாச்சாரத் தாலாட்டு" பிரபந்தமாக தொகுத்தளித்தார்.

விளக்கம் :

அர்ஜுனன் அறியாமையால் யுத்தம் பண்ணாமலிருக்க, பகவானின் உபதேசத்தால் அறியாமை நீங்கவே யுத்தம் செய்தான். பகவானால் செய்யப்பட்ட ஞானோபதேசமானது அஞ்ஞானத்தை நீக்கி பிறவியை போக்க வல்லது எனும் பொருள் தோன்ற "கருதுயர் தீர்ந்து எய்தக் கதி" என்றார். கீதை = வாக்கு.

நூல்

1. சீராரும் பரமார்த்த தெரிசனத்தை அருள் செய்ய
   பேராரும் தேசிகனாய்ப் பெருமானே வந்தவரோ.

இதன் பதப்பொருள் :

பெருமானே : பெருமையில் சிறந்தவரே

சீராரும் பரமார்த்தத் தெரிசனத்தை : சிறப்பு பொருந்திய பரம்பொருளின் சாட்சாத் காரத்தை

அருள் செய்ய : (அர்ஜுனனுக்கு) அனுக்கிரகத்தோடு ஞானோபதேசம் செய்விக்க

பேராரும் தேசிகனாய் : பெருமை பொருந்திய மூர்த்தமாக

வந்தவரோ : எழுந்தருளி வந்த பகவானோ (நீர்)

பொழிப்புரை :

பெருமையில் சிறந்தவரே சிறப்புப் பொருந்திய பரம்பொருளின் சாட்சாத்காரத்தை அர்ஜுனனுக்கு அனுக்கிரகத்தோடு ஞானோபதேசம் செய்விக்க, பெருமை பொருந்திய குருவடிவாய் வந்தருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

இந்நூலானது பாலகிருஷ்ணனை தொட்டிலிலிட்டு தாலாட்டு பாடுவது போல் அமைந்துள்ளது. பகவானே கிருஷ்ணபரமாத்மாவாக வந்தருளியுள்ளதால் பகவானின் பெருமையை குறிக்க "பெருமானே" என்றார்.

மோட்ச நிலையை அடைவிக்கும் பிரஹ்மஞானமானது (பரமார்த்த தரிசனம்) மற்ற புண்ணிய நிஷ்காமிய கர்மங்களை விட சிறந்ததாய் இருப்பதால் "சீராரும்" என்றார்.

ஞான சற்குருவே பிரஹ்ம ஞானத்தை உபதேசம் பண்ண யோக்கியமுள்ளவராயிருப்பதால் குருவே சிறந்தவர். அப்படிப்பட்ட குரு வடியாய் அர்ஜுனன் மூலமாக உலகத்தோர் ஞானமடையும் பொருட்டு உபதேசம் செய்து உலகத்தை உய்விக்கச் செய்வதால் "பேராரும்" என்றார்.

பகவானும், ஞானகுருவும், பிரஹ்ம ஞானமும் பெருமை பொருந்தியது என்பது கருத்து

2. திருத்தேரில் சாரதியாய்ச் சேர்ந்திருந்தும் கீதையினால்

அருச்சுநர்க்கு மெய்ஞ்ஞானம் அனைத்தும் உரை செய்தவரோ.

இதன் பதப்பொருள் :

திருத்தேரில் சாரதியாய் : அழகிய ரதத்தில் பாகனாய்

சேர்ந்திருந்தும் கீதையினால் : பொருந்தியிருந்தும் (தமது) வாக்கினால்

அர்ச்சுனர்க்கு மெய்ஞ்ஞானம் : அர்ஜுனனுக்கு உண்மையான தத்துவ ஞானத்தையும்

அனைத்தும் : (அதற்கு சாதனமாயுள்ள) யாவற்றையும்

உரை செய்தவரோ : உபதேசம் செய்தருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

அழகு பொருந்திய சிறந்த ரதத்தில் தேரோட்டியாக கிருஷ்ண பரமாத்மா பொருந்தியிருந்தும் தனது வாக்கால் அர்ஜுனர்க்கு பிரஹ்ம ஞானத்தையும், பிரஹ்ம ஞானத்திற்கு சாதனமான நிஷ்காமிய கர்மம், பக்தி என்ற பூர்வ மீமாம்சையையும் சேர்த்து உபதேசம் செய்த பகவானோ (நீர்) என்றார்.

3. செம்சமரில் பந்து சநச் சேதம் வரும் என்றிரங்கி
அஞ்சினவன் பயம் தீர்த்தே அமர்செய்யச் சொன்னவரோ.

இதன் பதப்பொருள் :

செம்சமரில் : தர்ம நீதியான யுத்தத்தில்

பந்துசநச்சேதம் வரும் : உறவினர்களாகிய மக்களுக்கு அழிவுண்டாகும்

என்றிரங்கி : என நினைத்து பரிதவித்து

அஞ்சினவன் : பயந்த அர்ச்சுனனை

பயம் தீர்த்து : (கர்மம், பக்தி, ஞானம்) என்றவற்றால் அவனது பயத்தை நீக்கி

அமர் செய்ய : யுத்தம் செய்யும்படி

சொன்னவரோ : கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

தர்ம நீதியான யுத்தத்தில் உறவினர்களாகிய மனிதர்களுக்கு நாசமுண்டாம் என நினைத்து பரிதபித்து பயந்த அர்ச்சுனனை கர்மம், பக்தி, ஞானம் இவைகளை போதித்து ஞானமடையச் செய்து பயத்தைப் போக்கி யுத்தம் செய்யும்படி கூறியருளிய பகவானோ நீர்.

விளக்கம் :

பாரத யுத்தமானது துரியோதனது மண்ணாசை யினால் பாண்டவர்களுக்கு அவர்களது பங்கை கொடுக்காத தனால் வந்தது. அதை யுத்தம் செய்து பெறுவது தர்மமே என்பதை "செம்சமர்" என்றார். பிறந்த அனைத்தும் இறக்கும் என்ற நியதிப் படியும் செயலுக்குக் கர்த்தா பகவானான நானே, நீ கருவியே என்ற நியதிப்படியும், தேகங்கள் நாசமடையினும் ஆத்மா நாசமடைவதில்லை என்ற நியதிப்படியும் நீ அஞ்சற்க என்பதை "அஞ்சினவன் பயம் தீர்த்தே" என்றார்.

4. சுற்றம் அறில் சோகம் எனச்சொல்லினை கற்றறிந்தவன் போல்
   கற்றுணர்ந்த பேர் அதனால் கலங்கார்காண் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

சுற்றம் அறில் : உறவினர்கள் நாசமடையில்

சோகம் எனச் : துக்கம் என்று

அறிந்தவன் போல் சொல்லினை : (நூற் பொருளை) உணர்ந்தவன் போல கூறினாய்

கற்றுணர்ந்த பேர் : (குரு முன்பாகச் சாஸ்திரங்களை) கேட்டு, (சிந்தித்து தெளிந்த) ஆத்ம அனுபூதி பெற்றவர்கள் (ஞானிகள்)

அதனால் : உறவினர்கள் நாசமடைவதனால்

சற்று கலங்கார் : சிறிதும் மயங்க மாட்டார்கள் என்றருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

சுற்றத்தவர்கள் நாசமடைவதினால் துக்கம் உண்டாம் என்று நூற் பொருளை உணர்ந்தவன் போல கூறினாய். குரு முன்பாக சாஸ்திரங்களை கேட்டு சிந்தித்து தெளிந்த ஆத்ம அநுபவ ஞானிகள் உறவினர்கள் நாசமடைவதினால் சிறிதும் மனச்சஞ்சலம் அடைய மாட்டார்கள் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

அறியாமையிலிருந்த பார்த்தன் அறிவாளி போல பேசியதை "அறிந்தவன் போல்" என்றார். குரு முன்பாக ஞான சாஸ்திரங்களை கேட்டு சிந்தித்து தெளிந்த ஞானவான்களை "கற்றுணர்ந்த பேர்" என்றார்.

5. கலங்காரோ இறப்புவரில் கற்றுணர்ந்த பேரேனும்
 மலங்காமல் நான் இருக்கும் வகை யுரையும் எனவினவ.

இதன் பதப்பொருள்

கற்றுணர்ந்த : குரு முகமாக அத்யாத்ம வித்தையை கேட்டு பிரஹ்மத்தை சாட்சாத்கரித்த

பேரேனும் இறப்புவரில் : ஞானிகளாயினும் மரணம் வந்தால்

கலங்காரோ : மயங்க மாட்டார்களா (அப்படி இருக்குமாயின்)

நான் மயங்காமல் : அடியேன் மயக்கமடையாமல்

இருக்கும் வகை : இருக்கும்படியான உபாயத்தினை

உரையும் என வினவ : உபதேசம் செய்ய வேண்டும் என்று அர்ஜுனன் பகவானைக் கேட்க

பொழிப்புரை :

குரு முன்பாக பிரஹ்ம ஞானத்தைக் கேட்டு பிரஹ்மத்தை சாட்சாத்கரித்த (தெரிசித்த) ஞானிகளாயினும் தனக்கு

மரணம் வரில் மயங்க மாட்டார்களா! அப்படி மயக்க மடையாமல் இருப்பதற்கு உபாயம் இருக்குமாயின் அடியேனும் மயக்கமடையாமல் இருப்பதற்கு அவ்வுபாயத்தினை உபதேசித்தருள வேண்டும் என்று அர்ஜுனன் பகவானை வினவ.

விளக்கம் :

அர்ஜுனன் அஞ்ஞானிகளுக்குள்ளே சிலர் உறவினர் களின் மரணத்தைப் பற்றி மயங்காமல் தனது தேகத்திற்கு மரணம் வரின் கலங்குவதை கருத்தில் கொண்டு, "கலங்காரோ இறப்புவரில்" என்றான்.

6. நீயும் நானும் புவிமேல் நிருபர்களும் மெய்யுணர்வால்
   ஆயுங்கால் பிறந்திறப்பது யார்க்குமிலை என்றவரோ.

இதன் பதப்பொருள் :

மெய் உணர்வால் : உண்மையான ஞானத்தினால்

ஆயும் கால் : விசாரித்து பார்க்குமிடத்து

நீயும் நானும் : அர்ஜுனனாகிய நீயும், கிருஷ்ணனாகிய நானும்

நிருபர்களும் : அரசர்களும்

புவிமேல் யார்க்கும் : உலகிலுள்ள மற்றைய எவர்க்கும்

பிறந்திறப்பது இலை என்றவரோ : ஜனனமும் மரணமும் இல்லை என்று உபதேசித்தருளிய பகவானோ நீர்.

பொழிப்புரை :

பொய்யான விஷய ஞானத்தை விட்டு மெய்யான ஆத்ம ஞானத்தினால் விசாரித்து பார்க்குமிடத்து அர்ஜுனனாகிய நீயும், கிருஷ்ண பரமாத்மாவாகிய நானும், அரசர்களும், இப்பூமியின் கண்ணுள்ள மற்றைய எவர்க்கும் (அனைவருக்கும்) ஜனனம் மரணம் யதார்த்தமாக இல்லை என்று உபதேசித்தருளிய பகவானோ (நீர்.)

விளக்கம் :

அநாத்ம விஷய ஞானம். ஆத்ம ஞானம் என்கிற இரண்டு ஞானத்திலும் ஆத்ம ஞானமாகிய தன்னையறியும் ஞானத்தினால் விசாரித்து பார்க்குமிடத்து எனும் கருத்துக்கு இயைய "மெய் உணர்வால் ஆயுங்கால்" என்றார். உலகின் கண் அனைத்து ஜீவர்களும் எனும் பொருட் தோன்ற "புவிமேல் ஆர்க்கும்" என்றார்.

7. ஈங்கெவர்க்கும் பிறந்திறப்ப தில்லை என்றீர் இவ்வுலகில்
நீங்கு பவம் ஆர்க்கிதனை நிச்சயமாய்ச் சொல்லும் என.

இதன் பதப்பொருள் :

ஈங்கு எவர்க்கும் : இப்புவியில் எல்லா ஜீவர்களுக்கும்

பிறந்திறப்பது இல்லை : ஜனித்து மரிப்பது யதார்த்தமாக இல்லை

என்றீர் : என்று கூறினீர்

இவ்வுலகில் நீங்கு பவம் : இப்புவியில் இறப்பதும் பிறப்பதும்

ஆர்க்கிதனை : எவர்க்கு? இவ்விஷயத்தினை

நிச்சயமாய்ச் சொல்லும் என : உண்மையாய் (தெளிவாய்) கூற வேண்டும் என்று அர்ஜுனன் பகவானை வினவ.

பொழிப்புரை :

இப்புவியில் எல்லா ஜீவர்களுக்கும் பிறப்பும் இறப்பும் வாஸ்தவமாக இல்லை என்று கூறியருளினீர். பின்பு இவ்வுலகில் பிறப்பதும் இறப்பதும் எவர்க்கு? இவ்விஷயத்தினை தெளிவாகக் கூற வேண்டுமெனக் கிருஷ்ண பரமாத்மாவைப் பார்த்து அர்ஜுனன் கேட்க.

விளக்கம் :

உலகில் இன்ன ஊரில் இன்னார் பிறந்தார். இன்ன ஊரில் இன்னார் இறந்தார் என்று எல்லா மனிதரைப் போல் அர்ஜுனனும் கேள்விப் பட்டும், பார்த்திருந்தும், அறிந்திருந்த

தனால் பகவான் பிறந்து இறப்பது யார்க்கும் இல்லை என்று சொல்ல, அதைக் கேட்டு சந்தேக மடைந்தவனாய் சந்தேக நிவிர்த்தியின் பொருட்டு கிருஷ்ணனைப் பார்த்து "நிச்சயமாய் சொல்லுமென" என்றான்.

8. இத்தரையில் பிறந்திறப்பது எடுத்த உடற்கடுத்த பொறி
நித்தியமாகிய ஆத்மா நின் சொரூபம் என்றவரோ

இதன் பதப்பொருள் :

இத்தரையில் பிறந்திறப்பது : இப்புவியின் கண் ஜனித்து மரிப்பது

எடுத்த உடற்கு : (ஆன்மா) தரித்த தேகத்திற்கும்

அடுத்த பொறி : தேகத்திலுள்ள பொறி புலன்களுக்குமாம்

நின் சொரூபம் : உன்னுடைய (உண்மையான) ஸ்வரூபம்

நித்தியமாகிய ஆத்மா : நாசமில்லாத ஆத்ம ஸ்வரூபமாம்

என்றவரோ : என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

இப்புவியின் கண் பிறந்து இறப்பது ஆன்மா தரித்திருக்கக் கூடிய தேகத்திற்கும் தேகத்தின் கண்ணுள்ள பொறி புலன்களுக்குமாம். உன்னுடைய உண்மையான வடிவம் நாசமின்றிய ஆத்ம ஸ்வரூபமாம் என்று அர்ஜுனனுக்கு உபதேசம் பண்ணின பகவானோ (நீர்)

விளக்கம் :

உடலானது வஸ்திரத்தை தரித்திருப்பதைப் போல ஆத்மாவானது உடலை தரித்திருக்கின்றது என்பதை "எடுத்த உடற்கு"என்றார் நாசமடையாமல் முக்காலங்களிலும் ஆத்மா இருப்பதால் "நித்தியமாகிய ஆன்மா" என்றார்.

முக்காலம் : பிறப்பதற்கு முன், இப்போதும் இறந்த பின்னும் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்ற மூன்றவத்தையிலும் உலக உற்பத்திக்கு முன்னும், உலக உற்பத்தியான பின்னும், உலக நாசத்திற்குப் பின்னும்.

9. அங்கம் உயிர் இந்தியம் நானன்றி வேறெனைக் காணேன்
   இங்கு யான் வேறுண்டேல் எனக்கறிய புகலும் என.

இதன் பதப்பொருள் :

நான் : எனது சொரூபம்

அங்கம் உயிர் இந்திரியம் அன்றி = தூல சரீரமும், பிராணனும், ஞானேந்திரியங்களும் கர்மேந்தியங்களும் அந்தக்கரணமும் அல்லாமல்.

வேறெனைக் காணேன் : அந்நியமாக ஆன்மா என்னும் ஒன்றைக் கண்டிலேன்

இங்கு யான் : இவ்விடத்து நான் என்னும் ஆன்மா

வேறுண்டேல் : தூல, சூட்சும சரீரங்களுக்கு அந்நியமாக இருக்குமாயின்

எனக்கறிய : அடியேன் அறிந்து கொள்ளும்படியாக

புகலும் என : கூறியருளுக என்று அர்ஜுனன் கேட்க

பொழிப்புரை :

எனது சொரூபம் சரீரத்திரயம் (தூலம், சூட்சுமம், காரணம்) அல்லாமல் இவைகளுக்கு வேறாக ஆன்மா எனும் ஒன்றைக் கண்டிலேன். இவ்விடத்து நான் என்னும் ஆத்மா தூல, சூட்சும, காரண சரீரங்களுக்கு அந்நியமாக இருக்குமாயின் அடியேன் அறிந்து கொள்ளும் படியாக கூறியருளும் என்று அர்ஜுனன் விண்ணப்பிக்க.

விளக்கம் :

பிரத்தியட்ச பிரமாணத்தால் அறியக்கூடிய தூல சரீரமும், அனுமானப் பிரமாணத்தால் சூட்சும. காரண சரீரங்களும்

தெரிகின்றனவேயல்லாமல் இவைகளுக்கு வேறாக நான் எனும் ஆத்மா விளங்கவில்லை எனும் கருத்தினை “அங்கமுயிர் இந்திய நானன்றி வேறெனைக் காணேன்” என்றார்.

10. மெய்யுயிர் இந்தியங்கள் அல்லால் வேறறியேன் என்றவனைப்
பைய அவையால் அறியப்படானும் நீ என்றவரோ

இதன் பதப்பொருள் :

மெய் உயிர் : தூல சரீரமும், பிராணனும்

இந்தியங்கள் அல்லால் : ஞானேந்திரிய, கர்மேந்திரியங்களும் தானாக விளங்குகின்றவே யன்றி

வேறறியேன் : இவ்விரண்டு உடம்புக்கும் அந்நியமாக எனது வடிவத்தை அறியவில்லை

என்றவனை : என்று கூறிய பார்த்தனைப் பார்த்து

பைய அவையால் : மெல்ல தூல சூட்சும சரீரங்களால்

அறியப்படானும் : உணரப்படாதவனும் அவைகளை அறிபவனும்

நீ என்றவரோ : உனது சொரூபம் என்றருளிச் செய்த பகவானோ (நீர்.)

பொழிப்புரை :

தூல சூட்சும சரீரங்கள் எனது வடிவமாக (நானாக) தெரிகின்றனவேயல்லாமல் இதற்கன்னியமாக என்னை (எனது யதார்த்த சொரூபத்தை) அறியவில்லை என்று கூறிய அர்ஜுனனைப் பார்த்து மெல்ல தூல சூட்சும சரீரங்களால் அறியப்படாதவனும் சரீரத்திரயங்களை அறிபவனுமாயும் இருப்பவனே நீ (உனது சொரூபம்) என்றருளிச் செய்த பகவானோ (நீர்)

விளக்கம் :

செயற்கரிய செயலை தகுதியற்ற ஒருவன் “அக்காரியத்தை நான் எளிதாக செய்து முடிப்பேன்” என்று சொல்பவனை உலகத்தார் அவனை நோக்கி “பைய” உன்னால்

அக்காரியத்தைச் செய்ய முடியாது என்று சொல்வது போல, அர்ஜுனனைப் பார்த்து பகவான் சுலபமாக ஆன்மாவை அறிய முடியாது என்பதை உணர்த்துவதற்கு "பைய" என்றார்.

ஆன்மாவை தெரிந்து கொள்வது சுலபமானதும் கூட அதே சமயம் மிகமிகக் கடினமானதுங் கூட. அக நாட்டமுடையார்க்கு சுலபம். பகிர்முக நாட்டமுடையவர்க்கு கடினம்.

பைய = மெல்ல

11. தேகம் வேறாகில் அதைச் சேர்ந்ததிவண் ஏதெனவே
சோகமே விளை கருமத் தொடர்ச்சியினால் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

தேகம் வேறாகில் : சரீரம் ஆத்மாவிற்கு வேறாக இருக்குமாயின்

இவண் அதை சேர்ந்தது : இவ்விடத்து ஆத்மாவை அச்சரீரம் சம்பந்தித்தது

ஏதெனவே : யாது காரணம் என அர்ஜுனன் கேட்க

சோகமே விளை கரும : துன்பத்தையே உண்டாக்குகின்ற முன்செய்த கருமங்களின்

தொடர்ச்சியினால் என்றவரோ : சம்பந்தத்தினால் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

சரீரம் ஆத்மாவுக்கு விலட்சணமாக (வேறாக) இருக்குமாயின் இவ்விடத்து ஆத்மாவை சரீரம் வந்து சம்பந்தித்தது யாது காரணத்தினால் என அர்ஜுனன் பகவானைக் கேட்க, அதற்கு துக்கத்தையே உண்டாக்குகின்ற முன் பிறவிகளில் திரிகரணங்களால் செய்யப்பட்ட சஞ்சித கர்மத்தின் சேர்க்கையினால் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

திரிகரணம் = மனது, வாக்கு, காயம்.

12. தேகமெடா முன் கருமச் செயல் வருமாறே தெனவே
 யேகமா மரமும் வித்தும் எனு முறை போல் என்றவரோ

இதன் பதப்பொருள் :

தேகம் எடாமுன் : சரீரம் எடுப்பதற்கு முன்னால்

கருமச்செயல் : கருமங்களாகிய செயல்கள்

வருமாறு ஏதெனவே : வந்ததற்கு யாது காரணம் என்று அர்ஜுனன் வினவ

வித்தும் மரமும் : விதையும், விதையை உண்டாக்கிய மரமும்

ஏகமாம் எனும் முறை : என்று சொல்லுகின்ற ஒன்றாகிய திருஷ்டாந்தம்.

போல என்றவரோ : போல என்று கூறியருளிய பகவானோ

பொழிப்புரை :

சரீரம் இருந்தால் தான் திரிகரண செயல்களாகிய கர்மங்கள் செய்திருக்க முடியும். அக்கரும பலத்தினால் தான் மறு பிறவியாகிய வேறு சரீரம் உண்டாகும். அப்படியிருக்க முதலில் தேகம் எப்படி உண்டாயிற்று என வினவில் அதற்கு முன்னுள்ள தேகத்தினால் செய்த வினையினால் எனின்; 'கர்மம் முதலா? தேகம் முதலா? என்ற அர்ஜுனனது வினாவிற்கு பகவான் முதலில் மரம் தோன்றியதா? அல்லது விதை தோன்றியதா? என்று எப்படிச் சொல்ல முடியாதோ அதைப் போல முதலில் தோன்றியது கர்மமா, அல்லது தேகமா என்று சொல்ல முடியாது என்றார்.

விளக்கம் :

இதனை பீஜ அங்குர நியாயம் என்பர்

நியாயம் = திருஷ்டாந்தம் = உதாரணம்

பீஜம் = விதை; அங்குரம் = மரம்முளை

அநாதி இரண்டு வகை : 1.நித்திய அநாதி 2.கற்பித அநாதி

அநாதி என்றால் உற்பத்தி யில்லாதது என்று அர்த்தம்

நித்திய அநாதி = மூன்று காலத்திலும் அழியாமல் இருப்பது அது. பிரஹ்மம்

கற்பித அநாதி = உண்மைப் பொருளை அறியுமிடத்து கற்பித பொருள் இல்லாமல் போவதற்கு கற்பித அநாதி என்று பெயர்.

மாயை, மாயையினால் உற்பத்தியான ஜக ஜீவ பரம் மூன்றும் கற்பித அநாதி. பிரஹ்மத்தை அறியும்போது மாயையும், மாயையில் உண்டான ஜக ஜீவ பரம் இல்லாமல் போவதால் இவைகள் கற்பித அநாதி.

ஜக ஜீவ பரத்தினால் உண்டான தேகமும், தேகத்தினால் உண்டான கருமமும் கற்பித அநாதியானதால் காரணம் காணமுடியாது. திருஷ்டாந்தம் - ரச்சு = நித்திய அநாதி; பாம்பு = கற்பித அநாதி. (ரச்சு = கயிறு)

13. காயமும் தானும் பிறிதேல் கன்மமெவர் செய்ததெனத்
தீய உடற்கலது கன்ம செயல் தனக்கேது என்றவரோ.

இதன் பதப்பொருள் :

காயமும் தானும் : தேகமும் ஆத்மாவும்

பிறிதேல் : வெவ்வேறாய் இருக்குமாயின்

கன்மம் எவர் : கருமம் எவர்

செய்ததென : செய்தனர் என பார்த்தன் வினவ

கன்ம செயல்: கர்மமும் கருமத்தினால் உண்டாகின்ற நல்வினை தீவினைகளும்

தீய உடற்கலது : குற்றம் பொருந்திய தேகத்திற்கே அல்லாமல்

தனக்கேது என்றவரோ : ஆன்மாவாகிய தனக்கு எப்படி உண்டாம் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

தேகமும் ஆத்மாவும் வெவ்வேறாய் இருக்குமாயின் செயல்கள் செய்தது யாவர் என அர்ஜுனன் கேட்க கருமமும்

கர்மத்தினால் உண்டாகிய நல்வினை தீவினைகள் குற்றம் பொருந்தி தேகத்திற்கே அன்றி ஆன்மாவுக்கு இல்லை என்று கூறியருளிய பகவானோ (நீர்)

14. படம் கருமம் உடற்செய்யிற் பலமுறுவதார்க்கெனவே
அடர் பலமும் உடற்கேயாம் அறிவார்க்கேது என்றவரோ.

இதன் பதப்பொருள் :

படர் கருமம் : விரிந்த கர்மங்கள்

உடல் செய்யில் : தேகம் இயற்றுமாயின்

பலமுறுவது யார்க்கெனவே : அதனால் உண்டான பிரயோஜனத்தை அடைவது யார் என அர்ஜுனன் கேட்க

அடர் பலமும் : நெருங்கிய பிரயோஜனமும்

உடற்கேயாம் : சரீரத்திற்கேயாகும்

அறிவார்க்கேது என்றவரோ : அறிவு ரூப ஆத்மாவிற்கு இல்லை என்று கூறியருளிய ப்கவானோ (நீர்)

பொழிப்புரை :

விரிந்த கர்மங்களை தேகம் இயற்றுமாகில் அதனாலுண்டான பிரயோஜனத்தை அடைவது யார் என்று அர்ஜுனன் வினவ நெருங்கிய

பிரயோஜனத்தை அடைவது தேகமேயாம். அறிவு சொரூபமான ஆத்மாவிற்கு அன்று என்று கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

பெண் தேனீ மலரிலிருந்து தேனை எடுத்து வந்து தேனடையில் சேர்க்க, ஆண் தேனீ தேனை பருகுவது போல தேகம் கர்மம் செய்யுமாயின் அந்தக் கர்ம பலனை ஆன்மா அனுபவிக்கின்றதோ என்ற சந்தேகம் அர்ஜுனனுக்கு எழவே, "பலமுறுவது யார்க்கெனவே" என்றான்.

15. வெய்ய வினை உடற்கென்றால் மெய் இங்கே விழ ஆன்மா
ஐயம் அற நரக சொர்க்கம் அநுபவிப்பது ஏதெனவே.

இதன் பதப்பொருள் :

வெய்ய வினை : கொடிய கர்ம பலன்கள்

உடற்கென்றால் : தேகத்திற்கு எனக்கூறின்

மெய் இங்கே விழ : தூல சரீரம் இவ்வுலகிலே நாசமடைய

ஆன்மா நரக : ஆத்மா நரகத்தில் துக்கத்தையும்

சொர்க்கம் : சொர்க்கத்தில் சுகத்தையும்

அநுபவிப்பது ஏது : நுகர்வது யாது காரணம்

ஐயமற எனவே : என்று அடியேனது சந்தேகம் நீங்கும் பொருட்டு அருளுக என பார்த்தன் கேட்க

பொழிப்புரை :

கொடிய தீவினை கர்ம பலன்களும், நல்வினை கர்ம பலன்களும் தேகத்திற்கு எனக்கூறின் தூலசரீரம் இவ்வுலகிலேயே நாசமடைய ஆத்மா தீவினையின் பலனால் நரகத்தில் துக்கத்தையும், நல்வினையின் பலனால் சொர்க்கத்தில் சுகத்தையும் அனுபவிப்பதற்கு காரணம் யாது? இந்த சந்தேகத்தை நிவிர்த்தி செய்ய வேண்டும் என அர்ஜுனன் பகவானை கேட்க

விளக்கம் :

வினை என்றால் நல்வினை தீவினை இரண்டையும் குறிக்கும். வினைகள் என்றாலே பிறவியைக் கொடுக்கக் கூடியது. தீய கர்மம் இரும்பு விலங்கு போன்றது. நற்கருமம் பொன் விலங்கு போன்றது. இவ்விரு வினையும் விலங்கு போன்றிருப்பதால் "வெய்ய வினை" என்றார்.

16. அநுபவமே இலை அது வீண் ஆரோபிதம் நிகழ்த்தில்
தநுகரணச்செயல் தனதாச் சார்வது போல் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

அது நிகழ்த்தில் : ஆத்மாவுக்கு நரக சொர்க்க துக்க சுக அனுபவம் சொல்லுமிடத்து

அநுபவமே இலை : யதார்த்த (உண்மையான) அநுபவமே இல்லை (பின்னர்)

தநு கரணச்செயல் : தூல சரீரத்தினதும் அந்தக்கரணாதி களினதும் ஆகிய தொழில்கள்

தனதாக சார்வது போல் : (ஆத்மாவாகிய) தன்னுடையதாகப் பொருந்தி தோன்றுவது போல

வீண் ஆரோபிதம் : வியர்த்தமான (பயனற்ற) கற்பனைத் தோற்றம்

என்றவரோ : என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

ஆத்மாவுக்கு (நரக சொர்க்கம்) துக்க, சுக அனுபவம் உண்டு என்று கூறுமிடத்து அது உண்மையான சுருதி, யுக்தி, அனுபவ தாத்பரியம் (கருத்து) அன்று. என் சரீரம் பருத்தது, என் சரீரம் இளைத்தது என்று சொல்ல வேண்டியதை நான் பருத்தேன் நான் இளைத்தேன் என்று சொல்வது போலும் என் மனம் நினைக்கிறது; மறக்கிறது என் கண் பார்க்கிறது என் கை செய்கிறது என்று சொல்ல வேண்டியதை நான் நினைக்கிறேன். நான் மறக்கிறேன்; நான் பார்க்கிறேன்; நான் செய்கிறேன் என்று சொல்கிறோம். தூல சரீரத்தினதும் சூட்சும சரீரத்தினதுமாகிய செயல்கள் ஆத்மாவாகிய தன்னுடைய செயல்களாகப் பொருந்தி தோன்றுவது போல பயனில்லாத கற்பனைத் தோற்றம் என்று கூறிய பகவானோ (நீர்)

விளக்கம் :

தூல சரீரத்தினது தன்மையும், செயல்பாடுகளும், சூட்சும சரீரத்தினது தன்மையும் செயல்பாடுகளும் எப்படி ஆத்மாவிடத்து கற்பனையாகத் தோற்றுகின்றதோ அதைப் போல

தூல சரீரம் இறந்த பின் ஆன்மா நரக சொர்க்கத்தை அடைந்து துன்ப இன்பங்களை அனுபவிப்பது என்று சொல்வது பயனற்ற கற்பனையால் என்றார்.

ஆரோபிதம் = கற்பனை = அத்தியாசம் = மாயத்தோற்றம்

தநு = சரீரம் = தேகம் = உடல்

17. மற்றுடலின் செய்கை தன்மேல் வருமயக்கம் ஏதெனவே,
முற்றுணர் வொன்றில்லாத மோகம் என்று சொன்னவரோ.

இதன் பதப்பொருள் :

மற்றுடலின் : ஆத்மாவான தனக்கு வேறாக உள்ள சரீரங்களின்

செய்கை தன் மேல் : தொழில்கள் ஆத்மாவாகிய தன்னிடத்து

வரு மயக்கம் ஏதெனவே : வந்து தோற்றுகின்ற பிராந்திக்கு யாது காரணம் என்று அர்ஜுனன் வினவ

முற்றுணர்வு ஒன்றில்லாத : பூரணமான ஞானத்தை அடையாத

மோகம் என்று : மயக்கத்தினால் என்று

சொன்னவரோ : உபதேசித்த பகவானோ (நீர்)

மோகம், மயக்கம், பிராந்தி ஒரு பொருட் கிளவி

பொழிப்புரை :

ஆத்மாவாகிய தனக்கு வேறாக உள்ள தூலாதி சரீரங்களின் செயல்கள் ஆத்மாவாகிய தன்னிடத்து ஆத்மாவினுடைய செயல்களாக வந்து தோற்றுகின்ற பிராந்தியானது எப்படி உண்டாயிற்று என்று அர்ஜுனன் வினவ, பூரணமான ஆத்ம ஞானத்தை அடையாத மயக்கத்தினால் என்று உபதேசித்த பகவானோ (நீர்)

விளக்கம் :

ஆத்மா சரீரத்திற்கு வேறானதாகையால் "மற்றுடலின்" என்றார். உலக அறிவு, தேக அறிவு, சாஸ்திர அறிவு இவைகள் அற்ப அறிவு எனப்படும். ஆத்மாவை பற்றிய அறிவு பேரறிவு. இதனையே "முற்றுணர்வு" என்றார்.

18. அறிவு தேகம் தனக்கோ ஆன்மாவிற்கோ எனவே
பிறிவு செயல் அசித்துடலம் பிரமம் அறிவு என்றவரோ

இதன் பதப்பொருள் :

அறிவு தேகம் தனக்கோ : (அறிவு ரூப) ஞானமானது சரீரம் தனக்கா

ஆத்மாவிற்கோ எனவே : ஆத்மாவிற்கா என்று அர்ஜுனன் வினவ

பிறிவு செயல் : உடலையும், ஆத்மாவையும் வேறு பிரித்து விசாரித்துப் பார்த்தால்

உடலம் அசித்து : சரீரம் ஜடமாம்

பிரமம் அறிவு என்றவரோ : ஆத்மாவாகிய பிரமம் ஞான ஸ்வரூபமாம் என்றருளிச் செய்த பகவானோ (நீர்)

பொழிப்புரை :

அறியக் கூடிய தன்மை சரீரத்திற்கு இருக்கின்றதா? அல்லது ஆத்மாவிற்கு இருக்கின்றதா? என்று அர்ஜுனன் கேட்க, சரீரத்தையும், ஆத்மாவையும் வேறு பிரித்து பார்த்தால் சரீரம் ஜடமாம். ஆத்மா ஞான ஸ்வரூபமாம் என்றருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

தூலாதி சரீரங்கள் எல்லாம் ஒன்றாய் இருப்பதாலும், அந்தக் கரணம் (மனது) ஐந்து விஷயங்களை அறிவதாலும் அர்ஜுனனுக்கு ஆன்மா அறிவு ஸ்வரூபமா? அல்லது மனது அறிவு ஸ்வரூபமா? என்ற சம்சயம் (சந்தேகம்) உண்டாகி "அறிவு தேகம் தனக்கோ ஆத்மாவிற்கோ" என்றான்.

அறிவு = ஞானம் = சித்து = சேதனம் = சைதன்னியம்

சைதன்னியம் = எது ஞானவடிவாய் இருந்து கொண்டு தேகாதி பிரபஞ்சங்களை அறிகின்றதோ எதை தேகாதி பிரபஞ்சங்கள், மனம், இந்திரியங்கள் அறிய மாட்டாவோ அது சைதந்நியம்.

ஜடம் : தன்னை அறியாததும் பிறவற்றை அறியாததுமாகிய தேகாதி, பிரபஞ்சம் ஜடம்.

19. தேகம் அசித்தாகில் இந்தச் செயல் வருவது ஏதெனவே,
ஏக பரம் சோதியின் முன் இருக்கையினால் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

தேகம் அசித்தாகில் : சரீரம் ஜடமாய் இருக்குமாயின்

இந்தச் செயல் : அந்தக்கரணத்தின் செயல்களும், ஞானேந்திரிய, கர்மேந்திரியங்களின் செயல்களும்.

வருவது ஏதெனவே : வந்து பொருந்துதல் எப்படி என்று அர்ஜுனன் வினவ

ஏக பரம் சோதியின் முன் : ஒன்றாயும் வியாபகமாயுமுள்ள பிரஹ்ம பிரகாசததின் சந்நிதியில் (முன்னிலையில்)

இருக்கையினால் : தேகம் இருக்கின்றமையினால்

என்றவரோ : என்றருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

சரீரம் அறிவற்றதாய் (சடமாய்) யிருக்குமாயின் தூல சரீரத்தினது செயல்களும், சூட்சும சரீரத்தினது செயல்களும் நிகழ்வது எப்படி என்று அர்ஜுனன் வினவ ஒன்றாயும் வியாபகமாயும் உள்ள பிரஹ்மப் பிரகாசத்தின் சந்நிதியில் தேகம் இருக்கின்றமையினால் தூலாதி சரீரங்கள் செயல்படக் கூடும் என்று சொன்ன பகவானோ (நீர்)

சடம் = அசேதனம் = அசித்து = அறிவற்றது

விளக்கம் :

"பரம்" என்பது இங்கு பிரஹ்மத்தைக் குறிக்கின்றது. பிரஹ்மம் என்றால் பெரும் பொருள். அது சர்வ சாட்சியாக இருக்கின்றது. "சோதி" என்பது அறிவுப் பிரகாசத்தைக் குறிக்கின்றது. எப்படி சட சோதி புற இருளைப் போக்குகின்றதோ

அதைப் போல சித்சோதி அஞ்ஞான இருளைப் போக்குகின்றது. பிரஹ்மமானது அறிவு சொரூபமாக இருப்பதால் "பரம் சோதி" என்றார்.

20. இருக்கினும் அசேதனத்துக்கு இச்செயல் உண்டோ எனவே,
உருக்குபடாக் காந்த முன்னில் ஊசி நிகர் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

இருக்கினும் : சரீரம் ஆத்மாவின் சந்நிதியில் இருந்தாலும்

அசேதநத்திற்கு : கல் போன்ற ஜட சரீரத்திற்கு

இச்செயல் : ஞானேந்திரிய கர்மேந்திரிய கிரியைகள்

உண்டோ எனவே : இருக்கின்றனவா? என்று அர்ஜுனன் வினவ

உருக்கு படா : காய்ச்சுதல் இல்லாத

காந்த முன்னில் : காந்த சந்நிதியில்

ஊசி நிகர் என்றவரோ : சடமாகிய ஊசி ஒட்டும் தன்மை போல ஆத்மாவின் சந்நிதியில் சரீரமும் கிரியைகள் செய்யும் தன்மையாதல் கூடும் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

சரீரம் ஆத்மாவின் சந்நிதியில் இருப்பினும் ஜடமாகிய கல் போன்றிருக்கின்ற சரீரத்திற்கு ஞானேந்திரிய கர்மேந்திரிய கிரியைகள் உளவாமோ? என்று அர்ஜுனன் கேட்க, காய்ச்சுதல் இல்லாத காந்தத்தின் சந்நிதியில் ஊசி ஒட்டும் தன்மை போல ஆத்மாவின் சந்நிதியில் சரீரமும் கிரியைகள் செய்யும் தன்மையாதல் கூடும் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

21. சொன்ன செயலுடற்கானால் சுக துக்கம் யார்க்கெனவே
அன்ன சுக துக்கமுந்தான் அவ்வுடற்கே என்றவரோ.

இதன் பதப்பொருள் :

சொன்ன செயல் : முன் சொல்லிய இந்திரியக் கூட்டங்களின் (மனம், வாக்கு, காயம்) செயல்கள்

உடற்கானால் சுக துக்கம் ; சரீரத்திற்காயின் இன்பமும், துன்பமும்

யார்க்கெனவே : யாவர்க்கு என்று அர்ஜுனன் வினவ

அன்ன சுக துக்கமும் : அவ்விதமான இன்பமும் துன்பமும்

அவ்வுடற்கே என்றவரோ : அச்சரீரத்திற்கேயாம் என்று உபதேசித்தப் பகவானோ (நீர்)

பொழிப்புரை :

முன் சொல்லிய செயல்கள் சரீரத்தினது எனின், அச்சரீரங் களினால் செய்த பாவ புண்ணிய கர்மங்களினால் உண்டாகின்ற இன்ப துன்பங்களை அனுபவிப்பது யார்? என்று அர்ஜுனன் கேட்க, அவ்விதமான இன்ப துன்பங்கள் அச்சரீரத்திற்கேயாம் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

கர்மம் புரிவதும் தேகம் தான். கர்ம பலனாகிய இன்ப துன்பங்களை அனுபவிப்பதும் தேகம் தான் என்றார்.

22. சேதனமாம் ஆன்மாவை சேராத துக்க சுகம்
ஓது சடமாம் உடலை உற்றிடுமோ சொல்லும் என.

இதன் பதப்பொருள் :

சேதனமாம் ஆன்மாவை : அறிவு வடிவாகிய ஆத்மாவினை

சேராத துக்க சுகம் : வந்து பொருந்தாத இன்பமும் துன்பமும்

ஓது சடமாம் உடலை : அறிவற்ற பொருள் என்று சொல்லப் படக்கூடிய சரீரத்தை

உற்றிடுமோ சொல்லும் என : சம்பந்தித்திடுமோ? அடியேனுக்கு கூறியருளும் என்று அர்ஜுனன் கேட்க

பொழிப்புரை :

அறிவு சொரூபமாக இருக்கின்ற ஆத்மாவினை வந்து அணுகாத (பொருந்தாத) துன்பமும் இன்பமும் அறிவற்ற

தன்மை பொருந்தியதாய் சொல்லப் படுகின்ற சரீரத்தை முன் சொல்லிய அந்த இன்ப துன்பமானது எப்படி வந்து பொருந்தும்? இவ்விஷயத்தின் அடியேனுக்கு கூறியருளுக என அர்ஜுனன் பகவானை வினவ.

விளக்கம் :

கல் போன்றிருக்கின்ற சடப்பொருளான இச்சரீரத்திற்கு இன்ப, துன்பம் வந்து சம்பந்திக்கக் கூடுமோ என்பதை "உற்றிடுமோ" என்றார்.

23. பூதம் ஐந்தோடு ஐந்து உயிர்கள் புலன்கள் பத்து மனமுதல் நான்கு
ஈது இரு மெய் இதில் மனத்துக்கு இன்ப துக்கம் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

பூதம் ஐந்தோடு : ஸ்தூல பஞ்சபூதத்திலிருந்து தோன்றிய ஸ்தூல சரீர தத்துவம் ஆறும்

ஐந்து உயிர்கள் : வியானாதி வாயுக்கள் ஐந்தும்

புலன்கள் பத்து : ஞானேந்திரியம் ஐந்தும், கர்மேந்திரியம் ஐந்துமாக பத்தும்

மனமுதல் நான்கும் : மனம், புத்தி, சித்தம், அகங்காரமாகிய அந்தக் கரணம் நான்கு தத்துவமும்

ஈது இருமெய் : இவைகளே இருபுத்தைந்து தத்துவங்களாம் இவையே ஸ்தூல, சூட்சுமமாகிய இரண்டு சரீரங்களாம்.

இதில் மனத்திற்கு : இவ்விரண்டு சரீரத்தில் மனதிற்கு

இன்ப துன்பம் என்றவரோ : இன்ப துன்பம் என்றருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

தூல பஞ்ச பூதத்திலிருந்து உற்பத்தியான தூல சரீர தத்துவம் ஆறும்; சூட்சும பஞ்ச பூதத்திலிருந்த உற்பத்தியான வியானாதி வாயுக்கள் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும், கர்மேந்திரியம் ஐந்தும், மனாதி அந்தக் கரணம் நான்கும் ஆக

இருபத்தைந்து தத்துவங்கள் தூல சூட்சும சரீரங்களாம். இவ்விரண்டு சரீரங்களில் மனம் மட்டும் தான் இன்ப துன்பங்களை அனுபவிக்கக் கூடியது. என்று அருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

"மெய்" என்பது இவ்விடத்து சரீரத்தைக் குறிக்கின்றது. "இரு மெய்" என்பது தூல சூட்சும சரீரத்தை குறிக்கின்றது. "பூதம் ஐந்தோடு" என்றது தூல பஞ்ச பூதத்தினால் உற்பத்தியான தூல சரீர தத்துவம் ஆறையும் கொள்க. இதனது விரிவு பாயிரத்தில் கூறப்பட்டுள்ளது.

24. இந்த இருவகைத் தநுவிற்கு ஏதுவேது என வினவ,
முந்திய காரணமதனால் மூன்று தநு என்றவரோ.

இதன் பதப்பொருள் :

இந்த இருவகைத் தநுவிற்கு : தூல, சூட்சும என்ற இரண்டு சரீரங்கள் தோன்றுவதற்கு

ஏதுஏது என வினவ : யாது காரணம் என்று அர்ஜுனன் பகவானைக் கேட்க

முந்திய காரணம் அதனால் : முன் தோன்றிய அஞ்ஞானமாகிய காரண சரீரம் முதல் சரீரமாம். காரண சரீரத்தோடு தூல சூட்சும சரீரமும் சேர்ந்ததினால்

மூன்று தநு என்றவரோ : மூன்று சரீரம் என்றருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

தூல சூட்சுமம் என்ற இரண்டு சரீரங்கள் தோன்றுவதற்கு யாது காரணம் என்று அர்ஜுனன் பகவானைக் கேட்க, முன் தோன்றிய அஞ்ஞானமாகிய காரண சரீரம் முதல் சரீரமாம். காரண சரீரத்தோடு முன் கூறிய தூல சூட்சும சரீரமும் சேர்ந்து மூன்று சரீரம் என்று அருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

தூல சூட்சும சரீரமாகிய இரண்டு சரீரங்களுக்கும் முன்பு தோன்றியது காரண சரீரமாம். எனவே “முந்திய” என்றார். இங்கு “காரணம்” என்பது காரண சரீரத்தைக் குறிக்கின்றது. அஞ்ஞானமே காரண சரீரமாம். தூலம், சூட்சுமம் தோன்றுவதற்குக் காரணமாயிருப்பதால் காரண சரீரமாம். காரண சரீரமாகிய அஞ்ஞானம் நீங்கி விட்டால் அச்சீவனுக்கு பிறவி இல்லை.

தனு = தேகம் = உடல் = சரீரம்

25. மனம் அறியும் துக்க சுக வரவு என்றீர் அம்மனமும்
 வினவில் அசேதனம் அலவோ விரித்தெனக்கு விளம்பும் என

இதன் பதப்பொருள் :

துக்க சுக வரவு : துன்ப இன்பங்களின் சேர்க்கையினை

மனம் அறியும் என்றீர் : மனது உணரும் என்று கூறினீர்

அம்மனமும் வினவில் : அம்மனமும் விசாரிக்கும் போது

அசேதனம் அலவோ : ஜடம் அல்லவா?

விரித்தெனக்கு : ஜடமாகிய மனம் இன்ப துன்பங்களை எவ்வாறு அறிதல் கூடும் என்பதனை அடியேனுக்கு விளக்கமாக

விளம்பும் என : கூறும் என அர்ஜுனன் வினவ.

பொழிப்புரை :

இன்ப துன்பங்களை உணரும் அனுபவ அறிவு மனதுக்குத் தான் உண்டு என்று முன்பு கூறினீர். அம்மனமும் விசாரிக்கும் போது ஜடம் அல்லவா! ஜடமாகிய மனம் இன்ப துன்பங்களை எவ்வாறு அறிதல் கூடும்? என்பதனை அடியேனுக்கு விளக்கமாக கூறியருளும் என்று அர்ஜுனன் பகவானை கேட்க.

26. அம்மனத்தில் ஆன்மா அபேதம் போல் தோன்றுதலால்
விம்மு துக்க சுகத்தை மனம் மேவும் என்று சொன்னவரோ.

இதன் பதப்பொருள் :

அம்மனத்தில் : முற்கூறிய ஜடமாகிய மனத்தின் கண்

ஆன்மா : அறிவு ரூபமாகிய ஆன்மா

அபேதம் போல தோன்றுதலால் : ஒன்றானது போல விளங்குதலால்

விம்மு துக்க சுகத்தை : மிகுந்த துன்ப இன்பங்களை

மனம் மேவும் : மனதுக்கு வந்து பொருந்தும்

என்று சொன்னவரோ : என்று உபதேசித்தப் பகவானோ (நீர்)

பொழிப்புரை :

முற்கூறிய ஜடமான மனதும் அறிவு ரூபமான ஆத்மாவும் வேறுபாடற்றது போல விளங்குதலால் மிகுந்த இன்ப துன்பங்கள் மனதுக்கு வந்து பொருந்தும் என்றருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

பேதம் என்றால் வேறுபாடுடையது. அபேதம் என்றால் வேறு பாடற்றது. ஆன்மாவும் மனதும் ஒன்றானது போல் இருப்பதால் இன்ப துன்பங்களை மனம் அறிதல் கூடும் என்பது கருத்து.

27. அந்த மனோ துக்க சுகம் அதனிடத்து நில்லாமல்
வந்திலங்கும் ஆன்மாவை மருவியதென் சொல்லுமென.

இதன் பதப்பொருள் :

அந்த மனோ துக்க சுகம் : முன்கூறிய அம்மனத்தினது துன்ப இன்பங்கள்

அதனிடத்து நில்லாமல் : அம்மனத்தினிடத்தே இல்லாமல்

வந்திலங்கும் ஆன்மாவை : அம்மனத்தின் கண் ஒன்றாக வந்து பொருந்திப் பிரகாசிக்கின்ற ஆத்மாவினை

மருவிய தென் சொல்லுமென : தழுவிய எப்படி என்று கூறும்? என பகவானை அர்ஜுனன் வினவ

பொழிப்புரை :

முன் கூறிய அம்மனத்தினிடத்திலுள்ள துன்ப இன்பங்கள் அம்மனத்தினிடத்தே இல்லாமல் மனத்தினிடத்து ஒன்றாக பொருந்தி பிரகாசிக்கின்ற ஆத்மாவினை அந்த துன்ப இன்பங்கள் வந்து சேர்ந்தது எப்படி? என்று பகவானை அர்ஜுனன் வினவ.

விளக்கம் :

துக்கத்தை அனுபவிக்கும்போது அதனது வருத்தம் நமக்கு நன்றாக தெரியும். துக்கம் வருவதற்கு முன்பு சுகமாய் இருந்ததை நாம் அப்போது அறிவதில்லை. துக்கம் வந்த பின்பு தான் முதலில் சுகமாய் இருந்தோம் என்பதை அறிகிறோம். ஆதலால் துக்க அனுபவம் போல் சுக அனுபவம் தெரிவதில்லை. எனவே "துக்க சுகம்" என்றார். நிழலின் அருமை வெய்யிலுக்கு சென்ற பின்பு தான் தெரியும் என்பதைப் போல்.

28. வெய்ய கனலின் சூடு மேல் வைத்த சட்டியினூடு
உய்ய புனலூடு வந்து அங்கு ஒன்றுதல் போல் என்றவரோ

இதன் பதப்பொருள் :

வெய்ய கனலின் சூடு : மிகுந்த அக்கினியின் உஷ்ணம்

மேல் வைத்த : அக்கினியின் மீது வைக்கப்பட்டுள்ள

சட்டியினூடு உய்ய : பாத்திரத்தினிடத்து விடப்பெற்ற

புனலூடு அங்கு வந்து : நீரிடத்து நெருங்கி

ஒன்றுதல் போல் : சேர்தல் போல

என்றவரோ : எனக் கூறிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

உஷ்ணம் மிகுந்த அக்கினியின் மீது வைக்கப் பட்டுள்ள பாத்திரத்தின் கண் ஊற்றப்பட்டுள்ள நீரினிடத்து அக்கினியின் உஷ்ணத் தன்மை நெருங்கி சேர்தல் போல் எனக் கூறிய பகவானோ (நீர்)

விளக்கம் :

பாத்திரத்தின் கண் விடப்பட்ட நீருக்கும் அடுப்பில் எரிகின்ற அக்கினியின் உஷ்ணத்திற்கும் சம்பந்தம் இல்லையாயினும் பாத்திரத்திற்கும் அக்கினிக்கும் சம்பந்தம் இருப்பதாலும், பாத்திரத்திற்கும் நீருக்கும் சம்பந்தம் இருப்பதாலும், நெருப்பினது உஷ்ணத் தன்மை நீரினிடத்து வந்து சேர்வது போல, மனதிற்கு வருகின்ற இன்ப துன்பங்கள் மனதோடு சம்பந்தத்திருக்கின்ற ஆத்மாவிடத்தும் அவ்வின்ப துன்பங்கள் வந்து பொருந்தும் என்பது கருத்து.

ஆத்மா இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றது என்பது உபச்சாரம்.

29. சித்தாகும் ஆன்மாவுஞ் செடமாகும் சித்தமுந்தான்
ஒத்தாங்கு இரண்டும் ஒன்றாய் உற்ற வகை சாற்றும் என.

இதன் பதப்பொருள் :

சித்தாகும் ஆன்மாவும் : அறிவு ரூபமாகிய ஆன்மாவும்

செடமாகும் சித்தமுந்தான் : அறிவற்றதாகிய மனமுமான

இரண்டும் ஒத்து ஆங்கு : இரண்டும் வேறுபாடின்றி

ஒன்றாய் உற்றவகை : ஒற்றுமையாய் சேர்ந்த விதம்

சாற்றும் என : சொல்லும் என அர்ஜுனன் வினவ

பொழிப்புரை :

அறிவு ரூபமாகிய ஆத்மாவும் அறிவற்றதாகிய மனமுமான இரண்டும் அக்காலத்திலிருந்தே வேறுபாடின்றி ஒற்றுமையாய் சேர்ந்த விதம் எவ்வாறு? இதனை அடியேனுக்கு சொல்லும் என அர்ஜுனன் பகவானை வினவ.

விளக்கம் :

அந்தக்கரணம் சூட்சம பஞ்ச பூதத்தில் சத்துவ குணத்தில் ஒவ்வொரு மாத்திரையாக எடுத்து ஒன்றாகக் கூட்டி வைத்தது. அந்தக்கரணம் = உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் உள்ளமானது சகல கேள்விக்கு இடம் மட்டும் கொடுப்பதாலும் செயல் படுவது இல்லையாலும் அதனை (உள்ளம்) வேதாந்திகள் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. அந்தக்கரணம் நான்கு என்பர். சித்தத்தை மனதிலும், அகங்காரத்தை புத்தியில் ஒடுக்கி மனம், புத்தி என இரண்டாக கூறுவதும் உண்டு. எனவே இங்கு சித்தத்தை மனம் எனப் பொருள் கொள்ளப்பட்டது. அடுத்த செய்யுளில் "ஒல்லையில்" என்பதால் அநாதியைக் குறிக்கின்றது. எனவே ஆங்கு என்ற பதம் அக்காலத்திலிருந்து எனப்பொருள் கொள்ளப்பட்டது.

30. வல் இரும்பு கனலுடனே மருவியது போல் மனமும்
ஒல்லையில் ஆன்மாவுடனே உற்றது காண் என்றவரோ

இதன் பதப்பொருள் :

வல் இரும்பு கனலுடனே : கடினமான இரும்பு அக்கினியுடன்

மருவியது போல் ஒல்லையில் : சேர்ந்தது போல் அநாதியாகவே

மனமும் ஆத்மாவுடனே : சடமாகிய மனமும் அறிவு ரூப ஆத்மாவோடு

உற்றது காண் என்றவரோ : ஒன்றாகப் பொருந்தியது என்று அருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

கொல்லன் பட்டரையில் வைத்துக் காய்ச்சப்பட்ட கடினத் தன்மையுள்ள இரும்பினிடத்து அக்கினியின் சுபாவமான உஷ்ணம், சிவப்பு நிறம் இரண்டும் வந்து சேர்ந்தது போல அநாதியாகவே சடமாகிய மனமும் அறிவு ரூபமாகிய ஆத்மாவோடு ஒன்றாகப் பொருந்தியது என்றருளிச் செய்த பகவானோ (நீர்)

இங்கு ஆத்மாவை இரும்புக்கும், அக்கினியை மனதுக்கும் உவமானமாகக் கூறப்பட்டுள்ளது. அக்கினியின் சுபாவம் இரும்பினிடத்து பொருந்தியது போல மனதின் சுபாவம் ஆன்மாவிடம் பொருந்தியது.

இதனை காய்ச்சிய இரும்புத் துண்டு நியாயம் என்பர்.

31. உற்றது எதனால் எனவே உள்ளம் அவிவேகம் உறப்
பற்றிய தன் மேலும் அதன் பண்பு வந்தது என்றவரோ

இதன் பதப்பொருள் :

உற்றது எதனால் எனவே : மனமும் ஆத்மாவும் ஒன்றாகப் பொருந்தியது என்காரணத்தினால் என்று பார்த்தன் வினவ

உள்ளம் அவிவேகம் உற : மனம் அவிசாரத்தினைப் பொருந்தியதாய் இருப்பதால் தான் என்றும்

பற்றிய தன் மேலும் : பொருந்திய ஆத்மாவான தன்னிடத்தும்

அதன் பண்பு வந்தது என்றவரோ : மனதின் தர்மங்களான சுக, துக்க, ராக துவேஷாதி சுபாவங்கள் வந்து பொருந்தின என்று அருளிச் செய்த பகவானோ (நீர்)

பொழிப்புரை :

மனம் ஆத்மாவிடம் பொருந்தியது யாது காரணம்? என்று அர்ஜுனன் வினவ மனம் விசாரம் (பகுத்தறிவு) இன்மையால் தான் வந்தது என்றார். அங்ஙனம் ஆத்மாவிடம் மனம் சேர்ந்தால் மனதின்

தர்மங்களாகிய சுக, துக்க, ராகம், துவேஷாதி சுபாவங்கள் ஆத்மாவாகிய தன்னிடத்தும் வந்து பொருந்தியது என்று அருளிச் செய்த பகவானோ (நீர்)

விளக்கம் :

அந்தக்கரணத்தின் சுபாவம் சுகம், துக்கம், ஞானம், கிரியை, ராக, துவேஷாதிகளாம். இத்தன்மைகள் ஆத்மாவிடம் வந்து சேர்ந்ததை அதன் பண்பு வந்தது என்றார்.

அவிவேகம், அவிசாரம், பகுத்தறிவு இன்மை, ஆராய்வின்மை, அஞ்ஞானம், அறியாமை, ஆவரணம், மாயை என்பன ஒரு பொருட் கிளவி.

பண்பு, குணம், இயல்பு, சுபாவம், தன்மை என்பன ஒரு பொருட்கிளவி.

ராகம் = விருப்பு; துவேஷம் = வெறுப்பு

32. அடுத்த குணம் போமோபின் ஆன்மாவை விட்டெனவே,
எடுத்த செம்பூ நிறம் படிகத்து ஏறுதல் போல் என்றவரோ

இதன் பதப்பொருள் :

ஆத்மாவை அடுத்த குணம் : ஆத்மாவினை அணுகிய மனதினது பண்புகள்

பின் விட்டுபோமோ எனவே = உண்மை அறிவு உதித்த பிறகு ஆத்மாவை விட்டு நீங்குமா? என அர்ஜுனன் வினவ.

எடுத்த செம்பூ நிறம் = தரித்த செம்பரத்தை மலரின் சிவப்பு நிறம்

படிகத்து ஏறுதல்போல் என்றவரோ = வெண்மையான படிகக்கல்லில் பொருந்தி தோன்றுதல் போல் என்று அருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

ஆத்மாவினை அணுகிய மனதினது சுகதுக்காதி பண்புகள் உண்மை அறிவு உதித்த பிறகு ஆத்மாவை விட்டு நீங்குமோ என அர்ஜுனன் வினவ. செம்பரத்தை பூவினது சிவப்பு நிறமானது அருகில் வைத்த வெண்மை நிறமுடைய படிக கல்லில் பொருந்தி படிகக் கல்லே சிவப்பு நிறமாகத் தோன்றுதலுக்கு ஒப்ப என்றருளிய பகவானோ (நீர்)

இதனை ரக்த ஸ்படிக திருஷ்டாந்தம் என்பர்

(சிவப்பு படிக திருஷ்டாந்தம்)

விளக்கம் :

அவிவேகத்தினால் ஆத்மாவிடம் பொருந்திய மனதினை சுகதுக்காதி தர்மங்கள் விவேகம் வந்த பின்பு நீங்குமோ என்பதனை "பின் விட்டு நீங்குமோ" என்றார். எப்படி வெண்மை நிறமுள்ள படிகக்கல் செம்பரத்தை பூவின் சம்பந்தத்தால் சிவப்பு நிறமாக அத்தியாசமாக (கற்பனை) தோன்றுவது போல மனதின் தர்மங்கள் ஆத்மாவிடம் தோன்றுவது ஒரு கற்பனைத் தோற்றமே என்று விளக்கியுள்ளார்.

33. சுத்த படிகம் போல் சொரூபமாய்த் தானிருக்க
மெத்தவும் ஆசாமலின மேவிய தென் சொல்லும் என

இதன் பதப்பொருள் :

சுத்த படிகம் போல் : களங்கமின்றிய பளிங்கினைப் போல

சொரூபமாய்த்தான் இருக்க : ஆத்மாவாகிய நான் சச்சிதானந்த வடிவமாய் இருக்க

மலினம் : ஆசையாகிய களங்கம்

மெத்தவும் மேவியது : மிகவும் ஆத்மாவினை பொருந்தியது

என் சொல்லும் என் : யாது காரணம் கூறும் என அர்ஜுனன் வினவ

பொழிப்புரை :

அழுக்கில்லாத பளிங்குக் கல்லைப் போல பரிசுத்த ஆத்மாவாகிய தான் சச்சிதானந்த சொரூபமாய் இருக்க, ஆசையாகிய அழுக்கு மிகவும் வந்து ஆத்மாவினை பொருந்தியது யாது காரணம் கூறியருளுக என அர்ஜுனன் பகவானைக் கேட்க

விளக்கம் :

31வது செய்யுளில் "பற்றிய தன் மேலும் அதன் பண்பு வந்தது" என்றது போல இங்கு "ஆசா மலினம் மேவியது என்

சொல்லும் என" என்று அர்ஜுனன் வினா அமைந்துள்ளது. சச்சிதானந்த சொரூபமாகிய ஆத்மாவை ஆசையாகிய அழுக்கு சம்பதித்தது என்பது உபச்சாரம்

உபச்சாரம் = ஒன்றின் தன்மையை மற்றொன்றில் சொல்வது

34. அநாதியாம் வாசனையால் அடைந்தது ஆசாமலினம்
மநோ பந்தம் இருக்கின் முத்தி வாராது என்று உரைத்தவரோ.

இதன் பதப்பொருள் :

அநாதியாம் வாசனையால் : பழமையான வாசனையால்

ஆசாமலினம் அடைந்தது : ஆசையாகிய களங்கம் ஆத்மாவினை பொருந்தியது

மனோபந்தம் இருக்கின் : மனதின்கண் பந்தம் (முடிச்சு) இருக்குமாயின்

முத்தி வாராது என்று : மோட்சம் சித்திக்காது என்று கூறி

உரைத்தவரோ : அருளியப் பகவானோ (நீர்)

பொழிப்புரை :

பழமையான வாசனையால், ஆசையாகிய களங்கம் ஆத்மாவினை பொருந்தியது. மனதின் கண் முடிச்சு (கிரந்தி) இருக்குமாயின் மோட்சம் கிட்டாது என்றருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

அநாதி என்றால் ஆதியில்லாதது என்று பொருள். அநாதி இரண்டு 1. நித்திய அநாதி 2. கற்பித அநாதி

நித்திய அநாதி = எது எப்போதும் இருக்கின்றதோ அது நித்திய அநாதி அது பிரஹமம்.

கற்பித அநாதி = எது உண்மை அறியுமிடத்து இல்லாமல் போகிறதோ அது கற்பித அநாதி அது தேகாதி பிரபஞ்சம்

கயிறைக் கண்ட வுடன் பாம்பு இல்லாதது போல

பாம்பு கற்பித அநாதியாம் கயிறு நித்திய அநாதியாம்.

வாசனை கற்பித அநாதியாம்

வாசனை = திட பாவனையால் முன்பின் விசாரிக்காதிருத்தல்

பூர்வத்தில் (முதலில்) மனதில் பதிந்துள்ள பொருட்களைக் கொள்ளுதல் வாசனை எனப்படும்.

வாசனை 2 = 1. ஜன்ம வாசனை 2.பழக்க வாசனை

வாசனை 2 = 1.அசுத்த வாசனை 2.சுத்த வாசனை

அசுத்த வாசனை 4 = 1.மலினவாசனை 2.தேகவாசனை 3.லோக வாசனை 4.சாஸ்திர வாசனை இவைகள் பந்தத்திற்கு ஏது; சுத்த வாசனை முத்திக்கு ஏதுவாம்.

பந்தம், முடிச்சு, கிரந்தி, கட்டு இவை ஒரு பொருட் கிளவி

35. பந்தம் எது முத்தி எது பகுத்துரைக்க வேண்டும் என் தன்
சிந்தை தெளிய என்று திருத்தாளினை வணங்க.

இதன் பதப்பொருள் :

பந்தம் எது முத்தி எது : பந்தம் என்றால் என்ன? மோட்சம் என்றால் என்ன?

பகுத்து என் சிந்தை தெளிய : இவற்றினைப் பிரித்து அடியேனது சித்தம் தெளிவடையும் படி

உரைக்க வேண்டும் என்று : கூறியருள வேண்டும் என அர்ஜுனன் விண்ணப்பிக்க

திருத்தாளினை வணங்க .: அழகிய பாதங்களை நமஸ்காரம் செய்ய

பொழிப்புரை :

பந்தம் என்பது யாது? மோட்சம் என்பது யாது? இவைகளை பிரித்து அடியேனது சித்தம் சந்தேகம் நீங்கி தெளிவடையும்படி கூறியருள வேண்டும் என அர்ஜுனன் பகவானின் அழகிய திருவடிகளை வணங்கி விண்ணப்பஞ் செய்ய.

விளக்கம் :

முத்தி, மோட்சம், விடுதலை, கைவல்லியம், பிறவாநிலை என்பவைகள் ஒரே அர்த்தத்தைக் குறிக்கும் சொற்கள். சிந்தை என்பது சித்தம் ஐயப்படும் பொருளையும் (மனம்) துணியப் படும் பொருளையும் (புத்தி) அகங்கரிக்கப்படும் பொருளையும் (அகங்காரம்) சிந்திப்பதற்குரிய கருவியே சித்தம். சந்தேக விபரீதங்களின்றி விளங்க "தெளிய" என்றார்.

முத்தி இரண்டு வகை : 1.பதமுத்தி 2.ஜீவன்முத்தி

பத முத்தி – 4

1. சாலோகம், 2. சாமீப்பியம், 3.சாரூப்பியம், 4.சாயுச்சியம்.

இவைகள் (பதமுத்திகள்) கர்மம் உபாசனைகளால் (பக்தி) அடையப் படுவது ஜீவன் முத்தி என்பது ஆத்ம ஞானத்தினால் அடையப் படுவது.

சாலோகம் : இறைவனது லோகத்தில் வசித்தல் (அரசன் குடிமக்கள் தொடர்பு போல்)

சாமீப்பியம் : இறைவனது அண்மையில் வசித்தல் (அரசனது வேலையாட்கள் போல்)

சாரூப்பியம் : இறைவனது ஒத்த உருவம் அடைதல் (அரசனது தம்பி போல்)

சாயுச்சியம் : இறைவனை ஒத்த விபூதிகளை (எண்வகை சித்திகள்) அடைதல் (அரசனது மூத்த மகன் போல்)

36. தேகாதி தான் எனவே சேர் அபிமானங்கள் பந்தம்
ஆகாத மானம் விடில் அரிய முத்தி என்றவரோ

இதன் பதப்பொருள் :

தேகாதி தான் எனவே : தூல சரீரம் முதல் காரண சரீரம் வரையுள்ள (பஞ்ச கோசங்கள்) முதலியவற்றை தனது (ஆத்ம) சொரூபம் என்று.

சேர் அபிமானங்கள் பந்தம் : வருகின்ற வாசனா வடிய பற்றுகளே பந்தம்

ஆகாத மானம் விடில் : முக்திக்கு அனுகூலமாகாத அபிமானத்தை நீங்கிவிடில்

அரிய முத்தி என்றவரோ : அடைதற்கரிய மேலான மோட்சமாம் என்றருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

தூல, சூட்சும, காரண சரீரங்களாகிய பஞ்ச கோசங்களை நான் என்று வருகின்ற வாசனை வடிவ பற்றுகளே பந்தம். மோட்சத்திற்கு அனுகூலமாகாத (தடைகளான) அந்த அபிமானத்தை விட்டு விடுதலே அடைதற்கரிய மேலான மோட்சமாம் என்று அருளிச் செய்த பகவானோ (நீர்)

விளக்கம் :

பஞ்ச கோசங்கள்

1. <u>தூல சரீரம் :</u> 1. அன்னமய கோசம்

2. <u>சூட்சும சரீரம் :</u> 2. பிராணமய கோசம் (பிராணன்+கர்மேந்திரியம்) 3. மனோமய கோசம் (மனம்+ஞானேந்திரியம்) 4. விஞ்ஞானமய கோசம் (புத்தி+ஞானேந்திரியம்)

3. <u>காரண சரீரம் :</u> 5. ஆனந்தமய கோசம் (அஞ்ஞானம்)

அன்னமயம் = நான் பருத்தேன் நான் இளைத்தேன் முதலியன

பிராணமயம் = நான் பலவான் நான் பலமில்லாதவன் முதலியன

மனோமயம் = நான் சங்கற்பவான் நான் விகற்பவான் முதலியன (நான், எனது என்பதை உடையதாயும் காமக்குரோதாதிகளை உடையதாயுமுள்ளது)

விஞ்ஞான மயம் = நான் புத்தி மான், நான் அறிவிலி முதலியன

ஆனந்த மயம் = நான் சுகி, நான் துக்கி முதலியன

அபிமானம் = வேறு ஒன்றை தன்னுடையதாக நினைத்தல். பகிர்முகமாகச் சென்று அடைய முடியாததாயும் அந்தர் முகமாகச் (உள்நோக்கி) சென்று அடைய வேண்டியதாயும் இருப்பதால் "அரிய முத்தி" என்றார். இங்கு முத்தி என்பது ஜீவன் முத்தியை குறிக்கின்றது.

37. அபிமானம் வரும் வகையும் ஆங்கதனைத் தீர் வகையும்
 தபியாமல் நான் அறியத் தயவாகக் கூறும் என.

இதன் பதப்பொருள் :

அபிமானம் வரும் வகையும் : தேகாதிகளில் நான் என்று பற்று வருகின்ற தன்மையும்

அதனைத்தீர் வகையும் : அவ்வபிமானத்தினை நிவிர்த்திக்கக் கூடிய உபாயத்தினையும்

தபியாமல் நான் அரிய : துன்பம் அடையாமல் அடியேன் தெரிந்து கொள்ளும் பொருட்டு

தயவாகக் கூறும் என : கிருபையோடு கூறியருளுக என்று அர்ஜுனன் வினவ.

பொழிப்புரை :

தேகத்தை நான் என்றும் மனைவி, மக்கள், பொருள் முதலியவற்றை எனது என்றும் வருகின்ற பற்றினையும், அப்பற்றினை நிவிர்த்திக்கக் கூடிய உபாயத்தினையும், துன்பம் அடையாமல் இருக்கும் பொருட்டு அடியேன் தெரிந்து கொள்ளும் படி கிருபையோடு கூறியருளுக என்று அர்ஜுனன் விண்ணப்பிக்க.

விளக்கம் :

அபிமானம் வரும் விதத்தினையும் அதனை நிவிர்த்தி செய்வதற்கான உபாயமும் அறியாததால் பந்தம் உண்டாயிற்று. பந்தத்தால் பிறவியும், பிறவியினால் தேகம், தேகத்தினால் துன்பமும் உண்டாகிறது. அதனை அறிந்து கொண்டு அபிமானத்தை விட்டு, அபிமானத்தை விட்டுவிட்டால்

பந்த நிவிர்த்தியும் பந்த நிவிர்த்தியால் பிறவி இன்மையும், பிறவி இன்மையால் தேகம் இல்லாமையும் தேகமில்லாமையால் துன்பம் இல்லை. எனவே தாபம் இல்லாமல் இருக்கும் பொருட்டு உபதேசித்தருள வேண்டும் எனுங்கருத்துக் கிணங்க "தபியாமல்" என்றார்.

38. மறந்திடும் அஞ்ஞானத்தால் மானம் வந்தது அஞ்ஞானம்
இறந்துவிடின் மானமும் போம் என்ன உரை செய்தவரோ.

இதன் பதப்பொருள் :

மறந்திடும் அஞ்ஞானத்தால் : தனது சொரூபத்தினை மறக்கின்ற மறதி என்னும் அறியாமையினால்

மானம் வந்தது : தேகாதிகளில் நான் எனது எனும் அபிமானம் வந்து பொருந்தியது

அஞ்ஞானம் இறந்துவிடின் : அவ்வஞ்ஞானம் நாசமாயின்

மானமும் போம் : அந்த அபிமானமும் நீங்கிவிடும்

என்ன உரை செய்தவரோ : என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

தனது யதார்த்த (உண்மையான) சொரூபத்தை மறக்கின்ற மறதி என்னும் அறியாமையினால் அபிமானமாகிய தேகாதிகளில் நான் எனது என்கிற புத்தி வந்து பொருந்தியது. அந்த அஞ்ஞானம் நாசமாயின் அபிமானமும் நீங்கிவிடும் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

39. அந்த முறை அஞ்ஞானம் அணுகுவதும் போவதுவும்
சந்தயம் இலாதறியத் தயவாகக் கூறும் என

இதன் பதப்பொருள் :

அந்த முறை அஞ்ஞானம் : முன் சொல்லியபடியே அந்த அறியாமை

அணுகுவதுவும் போவதுவும் : வந்து பொருந்துவதையும், விட்டு நீங்குவதையும்

சந்தயம் இலாதறிய : நான் சம்சயம் இல்லாமல் உணரும் பொருட்டு

தயவாகக் கூறும் என : கிருபையோடு உபதேசத்தருனாக என அர்ஜுனன் வினவ.

பொழிப்புரை :

முன் சொல்லிய படியே அந்த அறியாமை வந்து பொருந்து வதனையும், விட்டு நீங்குவதையும் அடியேன் சந்தேகம் இல்லாமல் அறிந்து கொள்ளும் பொருட்டு கிருபையோடு உபதேசித்தருளுக என அர்ஜுனன் வினவ.

சம்சயம், சந்தேகம், ஐயம், சந்தயம் என்பன ஒரு பொருட் சொற்கள்.

40. அஞ்ஞானம் வந்தது அநாதியது சொல்வதல்ல
மெய்ஞ்ஞானத்தாலே விடும் என்று உரைத்தவரோ.

இதன் பதப்பொருள் :

அஞ்ஞானம் : ஆன்மாவை மறைக்கும் அந்த அறியாமை

வந்தது அநாதி : வந்தது பழமையானதாம்

அது சொல்வதல்ல : அது இப்படிப்பட்டது என்று சொல்லமுடியாது

மெய்ஞ்ஞானத்தாலே விடும் : சற்குருவின் உபதேசத்தினால் உண்டான தத்துவ ஞானத்தினால் அறியாமையானது நீங்கும்.

என்று உரைத்தவரோ : என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

ஆன்மாவை மறைக்கும் அறியாமையானது பழமையான தாகவே வந்து பொருந்தி இருக்கின்றது. அவ்வஞ்ஞானம் இப்படிப் பட்டது என்றும், எப்படி தோன்றிற்று என்றும் கூறமுடியாத அவாச்சிய வடிவமாகும். ஞான சற்குருவின்

உபதேசத்தாலும், ஞான சாஸ்திரத்தினாலும் அந்தக் கரணத்தின் கண் உண்டான விசார ஜன்னிய ஞானத்தினால் அஞ்ஞானம் நீங்கும் என்றருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

"அதனை இன்னது என்று உரைத்திடப் படாமையால் அவாச்சிய வடிவாகும்" என்பது கைவல்லிய நவநீதம். தீப்பெட்டி யினிடத்து நெருப்புத் தன்மை இருப்பினும் குச்சியினை உரசினால் மட்டுமே நெருப்பு உண்டாவதைப் போல, குருஉபதேசத்தாலும் ஞான சாஸ்திரத்தினாலும் உண்டான ஆத்ம அநாத்ம விசாரணை யினால் உண்டான "விசார ஜன்னிய ஞானமானது" அஞ்ஞானத்தை நீக்கும். குருவாக்கியம், சாஸ்திர ஞானம் இவைகள் "பரோட்ச ஞானம்" அந்தக் கரணத்தினிடத்து விசாரணையினால் உண்டாகின்ற ஞானம் "அபரோட்ச ஞானம்"

41. இரவி எதிர் அடுத்து வந்த இருள்போல் அஞ்ஞானம்
வரவிதியோ சோதிதன்பால் வந்த வகை ஏதெனவே

இதன் பதப்பொருள் :

இருள் இரவி எதிர் : அந்தகாரம் சூரியனது முன்னர்

அடுத்து வந்த போல : நெருங்கி வந்துள்ளது என்பது எப்படி கொஞ்சமேனும் பொருந்தாதோ அதைப் போல

சோதி தன்பால் : அறிவுப் பிரகாச வடிவமாக இருக்கின்ற ஆத்மாவாகிய தன்னிடத்து

அஞ்ஞானம் வரவிதியோ : அறியாமை வந்து சேர்வது முறையோ, முறையாகாது.

வந்த வகை ஏதெனவே : அங்ஙனம் இருக்க சுயம் பிரகாச வடிவ ஆத்மாவை அஞ்ஞானம் வந்து சேர்ந்தது எப்படி? என்று அர்ஜுனன் வினவ.

பொழிப்புரை :

இருள் சூரியனது முன்னர் நெருங்கி வந்துள்ளது என்பது எப்படி கொஞ்சமேனும் பொருந்தாதோ அதைப் போன்று அறிவுப் பிரகாச வடிவமாக இருக்கின்ற ஆத்மாவினிடத்து அறியாமை வந்து சேர்வது முறையோ! முறையன்று. அங்ஙனம் இருக்க சுயம் பிரகாச ஆத்மாவை அஞ்ஞானம் வந்து சேர்ந்தது எப்படி? என்று அர்ஜுனன் வினவ.

விளக்கம் :

இருளுக்கு விரோதம் பிரகாசம். அறியாமைக்கு விரோதம் அறிவு. சுயம்பிரகாச அறிவு ரூப ஆத்மாவிடம் அறியாமை வந்து பொருந்தியது பிரகாசத்திடம் இருள் வந்து நெருங்கியது போல் இருக்கின்றது. இருளும் பிரகாசமும் சேர்ந்திருப்பது எவ்வாறு ஒவ்வாதோ அதைப் போல் அறிவும் அறியாமையும் பொருந்தா தல்லவா என்பது அர்ஜுனனது சங்கை (கேள்வி) புற இருளைப் போக்குவது சடசோதி (சூரியன், சந்திரன், நட்சத்திரம், தீபம் முதலியன) அறியாமை இருளைப் போக்குவது அறிவுப் பிரகாச ஆத்மா. எனவே ஆத்மா சோதி அதாவது சித்சோதி (அறிவுப் பிரகாசம்) எனவே இதனை "சோதி தன்பால்" என்றார்.

42. அந்த அறிவு வந்தால் அஞ்ஞானம் இல்லை அப்பால்
சந்ததமும் ஆனந்த சாகரம் காண் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

அந்த அறிவு வந்தால் : சுயம்பிரகாச அறிவு ரூப ஆத்மாவில் அஞ்ஞானமாகிய இருள் வந்து அணுகாது என்ற ஞானம் திடமாய் உண்டாகுமாயின்.

அஞ்ஞானம் இல்லை : அறியாமை என்பது உன்னிடத்தில் இல்லை

அப்பால் : பிரஹ்ம ரூப ஆத்மாவினிடத்து அஞ்ஞானம் உண்மை யாக ஒருபோதும் இல்லை என்ற திடஞானம் உண்டான பின்

சந்ததமும் ஆனந்த சாகரம் காண் : சதா காலமும் ஆனந்த கடல் வடிவம் நினது சொரூபம் என்பதை நீ அறிவாய்

என்றவரோ : என்றருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

சுயம் பிரகாச அறிவு ரூப ஆத்மாவில் அஞ்ஞான மாகிய இருள் வந்து அணுகாது என்ற ஞானம் உனக்கு திடமாய் உண்டாகுமாயின் அறியாமை என்பது யதார்த்தமாக ஆத்மாவினிடத்தில் ஒரு போதும் இல்லை என்ற அறிவுண்டாம். இந்த அறிவு உண்டான பிறகு சதா காலமும் நினது சொரூபம் ஆனந்தக்கடல் வடிவம் என்பதை நீ அறிந்து ஆனந்தமாயிருக்கலாம் என்பதை தெரிந்து கொள் என்று அருளிச் செய்த பகவானோ (நீர்)

விளக்கம் :

விஷய இன்பங்கள் ஓர்போது இருந்து ஓர்போது இல்லாமல் போவதைப் போல் இராமல் எப்போதும் ஆனந்தமாய் இருப்பதால் "சந்ததம்" என்றார். விஷய இன்பங்களில் வருகின்ற பிரியம் மாறும்

ஆத்மாவினிடத்தில் வரும் பிரியம் மாறாமல் இருப்பதலால் அது மிகப் பிரியம். எது இன்பத்தைக் கொடுக்கிறதோ அதனிடத்துப் பிரியம். எது துன்பத்தைக் கொடுக்கிறதோ அதனிடம் வெறுப்பாம். எனவே எப்போதும் இடைவிடாது ஆத்மாவினிடத்து மிகப் பிரியம் இருப்பதால் அந்த ஆனந்தத்தை கடலுக்கு நிகராக "சாகரம்" என்றார்.

43. வேதாந்தத்தால் குருவால் மெய்ஞ்ஞானம் வந்தவுடன்
தீதான துக்க சுகம் தீராதது ஏதெனவே

இதன் பதப்பொருள் :

வேதாந்தத்தால் : அத்யாத்ம சாஸ்திர சிரவணத்தினாலும்

குருவால் : திட அபரோட்ச ஞானம் உடைய ஆசிரியர் உபதேசத்தினாலும்

மெய்ஞ்ஞானம் : உண்மையான ஆத்ம ஞானம்

வந்தவுடன் : வந்த அந்த க்ஷணத்திலே அஞ்ஞானம் நாசமடையுமாயின்

தீதான துக்க சுகம் : கொடுமையான துன்ப, இன்பங்கள்

தீராதது ஏதெனவே : நிவிர்த்தியாகாதது யாது காரணம் என அர்ஜுனன் வினவ.

பொழிப்புரை :

அத்யாத்ம சாஸ்திரத்தை குருமுகமாக கற்பதினாலும் திட அபரோட்ச ஞானம் உடைய ஆச்சாரியார் உபதேசத்தினாலும் உண்மையான பிரஹ்ம ஞானம் வந்த அந்த நேரத்திலேயே அஞ்ஞானம் நாசமடையுமாயின் கொடுமையான துன்ப இன்பங்கள் நிவிர்த்தியாகாதது யாது காரணம் என அர்ஜுனன் வினவ.

விளக்கம் :

மெய்ஞ்ஞானம் என்பது ஆத்ம ஞானம். அதாவது தனது யதார்த்த நிலையின் ஞானம். சுகமானது அனுபவிக்கும் போது இன்பமாயும், அனுபவித்து முடித்தவுடன் தீர்ந்து போய்விட்டதே என்ற ஏக்கமும், அடுத்து எப்போது அனுபவிப்போம் என்ற துன்பமும், அடுத்துக் கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற வருத்தமும் உண்டாவதால் சுகத்தையும் துக்கத்துடன் சேர்ந்து "தீதான துக்க சுகம்" என்றார்.

முதல் செய்யுளில் "அந்த அறிவு வந்தால் அஞ்ஞானம் இல்லை அப்பால் ஆனந்தம்" என்று பகவான் சொல்ல "மெய்ஞ்ஞானம் வந்தவுடன் தீதான சுக்க துகம் தீராதது ஏன்" என்று அர்ஜுனன் வினவ.

44. பற்றறுமோ துக்க சுகம் பரோட்ச ஞானத்தாலே
அற்றமாம் அவ்விரண்டும் அபரோட்சத் தென்றவரோ.

இதன் பதப்பொருள் :

பரோட்ச ஞானத்தால் : சாஸ்திர ஞானத்தினால்

துக்க சுக பற்று அறுமோ : துன்ப இன்பங்களின் சேர்க்கை நிவிர்த்தி யாகுமா? நிவிர்த்தியாகாது.

அபரோட்சத்து அவ்விரண்டும் : அபரோட்ச ஞானத்தினால் அந்த இன்ப துன்பங்கள் அற்றமாம் என்றவரோ = நாசமாகும் என்றருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

வேதாந்த சாஸ்திரத்தை கற்பதும், குருமுகமாக சாஸ்திரத்தை கேட்பதுமாகிய பரோட்ச ஞானத்தினால் இன்ப துன்பங்களின் சம்பந்தம் நீங்குமா! நீங்காது. அபரோட்ச ஞானத்தினால் இன்ப துன்பங்கள் நாசமாகும் என்று கூறிய பகவானோ (நீர்)

45. பரோட்சம் அபரோட்சம் எது பகுத்து உரைக்க வேண்டும் என்தன்,
திரோதமாம் புத்தி நன்றாய் தெளியும் படிக்கு எனவே

இதன் பதப்பொருள் :

பரோட்சம் : பரோட்ச ஞானம் என்பது யாது?

அபரோட்சம் : அபரோட்ச ஞானம் என்பது யாது?

என் திரோதமாம் புத்தி : அடியேனது மறைப்புடையதாகிய புத்தி

நன்றாய் தெளியும் படிக்கு : சந்தேகமில்லாமல் தெளிவை அடையும்படி

பகுத்து உரைக்க வேண்டும் : இந்த இரண்டின் தன்மைகளையும் பிரித்துக் கூறியருளல் வேண்டும்

எனவே : என்று அர்ஜுனன் வினவ

பொழிப்புரை :

பரோட்ச ஞானம் என்பது யாது? அபரோட்ச ஞானம் என்பது யாது? அடியேனது மறைப்புடையதாகிய புத்தி சந்தேக

மில்லாமல் தெளிவை அடையும்படிக்கு இந்த இரண்டின் இயல்புகளையும் பிரித்துக் கூறியருளல் வேண்டும் என்று அர்ஜுனன் வினவ.

46. பகர்ந்த சத்த ஞானம் பரோட்சம் அனுபவத்தால்
அகம் பிரமம் எனும் ஞானம் அபரோட்சம் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

பகர்ந்த சத்த ஞானம் : குருவின் ஞான உபதேச அறிவும், வேதாந்த சாஸ்திரத்தின் அறிவும்

பரோட்சம் : பரோட்ச ஞானமாம்

அநுபவத்தால் : விசார தியான அப்பியாச முதிர்ச்சியால்

அகம் பிரமம் எனும் : நானே பிரஹ்மம் என்று உண்டாகின்ற

ஞானம் அபரோட்சம் : அறிவு அபரோட்ச ஞானம் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

குருவின் வேதாந்த சாஸ்திரோக்த (சாஸ்திரத்திற்கு பொருத்தமான) உபதேச ஞானம், வேதாந்த சாஸ்திரத்தின் ஞானமும் பரோட்ச ஞானமாம். விசார தியான அப்பியாசத்தினால் (பயிற்சி) உண்டான பக்குவத்தால் நானே பிரஹ்மம் என்று உண்டாகின்ற விசார ஜன்னிய ஞானம் அபரோட்ச ஞானமாம் என்றருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

வேதமானது சப்த வடிவமாக இருப்பதால் வேதத்தினால் (சாஸ்திரம்) அறியப்படும் ஞானம் சத்த ஞானம் என்பர் பெரியோர். ஆகமம், சுருதி, வேதம், எழுதாக்கிளவி என்றும் கூறலாம். "குரவன் வாக்கியத்தால் தன்னை குறிகொளல் பரோட்ச ஞானம்" என்பது கைவல்லிய நவநீதம். எனவே இங்கு "பகர்ந்த" என்ற பதம் குரவன் உபதேச ஞானத்தை குறிக்கின்றது.

சொர்க்கம் இருக்கிறது. பத்தாமவன் இருக்கிறான் (பத்தாமவன் திருஷ்டாந்தத்தில்) என்பது போல பிரம்மம் இருக்கிறது என்ற ஞானம் பரோட்ச ஞானமாம். எது ஆத்மா எது அநாத்மா என்று குருமுகமாக கேட்டதைக் கொண்டு விசாரித்தல் விசாரமாம். விசாரித்துத் தெரிந்த பின்னர் அந்த வஸ்துவையே (ஆத்மா) இடைவிடாமல் அர்த்தத்தோடு கூடி நினைப்பது தியானம். அதாவது நானே பிரஹ்மம் பிரஹ்மமே நான் என்று மாறி மாறி நினைப்பது இதனை ஓதப்புரோதப்பாவம் என்பர். இந்த விசார தியான அப்பியாசத்தினால் (பயிற்சி) உண்டாவது விசார ஜந்திய (உற்பத்தி) ஞானம். அந்தக் கரணத்தின் கண் உற்பத்தியான விசார ஞானத்தின் பரிபக்குவத்தால் நான் பிரஹ்மம் என்று உண்டாகின்ற அந்த ஞானம் அபரோட்ச ஞானம் எனப்படும்.

பிரம்மம் என்பது பெரும் பொருள். அதாவது சஜாதீய, விஜாதீய, சுவகத பேதம் இல்லாமல் இருப்பது; சர்வ சாட்சியாக இருப்பது. பிரம்மம்; ஆகாயம் போல வியாபக வஸ்து எனவே அது பெரிய பொருள்.

சஜாதீயம் : ஓரினப் பேதம் (உதாரணம்) மரத்திற்குள்ள பேதம் (மா,பலா)

விஜாதீயம் : வேற்றினப்பேதம் (உதாரணம்) மரத்திற்கும் கல்லிற்கும் உள்ள பேதம்

சுவகதம் : உறுப்புகளின் பேதம் (உதாரணம்) மரத்தின் இலை, காய், கிளை இவைகளுக்குள்ள பேதம். (பேதம் – வேற்றுமை)

பிரம்மத்திற்கு வேறாக சத்து வஸ்து (சத்தியப் பொருள்) இல்லாத படியினால் பிரம்மத்திற்கு "சஜாதீய" பேதம் இல்லை. பிரம்மத்திற்கு வேறாக மாயை இருக்கிறது என்றால் அம்மாயை பிரம்மத்தினுடைய சக்தியாம். எனவே மாயை பிரம்மத்திற்கு அந்நியமாக இல்லை. எனவே பிரம்மத்திற்கு "விஜாதீய" பேதமில்லை. பிரம்மத்திற்கு அவயவம் (உறுப்பு) இல்லாத படியினால் பிரம்மத்திற்கு சுவகத பேதமில்லை. பிரம்மம் ஜக ஜீவ பரம் ஆகிய அனைத்தினுக்கும் சாட்சியாக இருப்பதால் சர்வ சாட்சியாம்.

47. தான் பிரமம் என்றறிந்தும் தது வைத் தான் என்ற புத்தி,
ஏன் போக இல்லை அதை எனக்கறிய புகலும் என.

இதன் பதப்பொருள் :

பிரம்மம் தான் : சச்சிதானந்த சொரூபமாகிய பரம் பொருளே எனது நிச சொரூபம்

என்றறிந்தும் : என்று யான் அபரோட்சமாக உணர்ந்திருந்தும்

ததுவைத்தான் என்ற : இத்தூலாதி சரீரங்களே நான் என்ற

புத்தி : தேகாத்ம புத்தி

ஏன் போக இல்லை : யாது காரணத்தினால் நீங்கவில்லை

அதை எனக்கறிய : அக்காரணத்தினை அடியேன் அறிந்து கொள்ளும் வண்ணம்

புகலும் என : கூறியருளுக என அர்ஜுனன் வினவ.

பொழிப்புரை :

சச்சிதானந்த சொரூபமாகிய பரம்பொருளே எனது நிச வடிவம் என்று யான் அனுபவத்தில் உணர்ந்திருந்தும் சரீரத்திரயங்களில் (தூல, சூட்சும, காரணம்) நான் என்ற தேகாத்ம புத்தி யாது காரணத்தினால் நீங்க வில்லை. அக்காரணத்தினை அடியேன் அறிந்து கொள்ளும்படி உபதேசித்தருளுக என அர்ஜுனன் வினவ.

48. கேள்வியினால் மனனத்தால் கிளர்ந்த யோகங்களினால்
ஆள் பிரமத்து அனுபவம் வந்து அது தீரும் என்றவரோ

இதன் பதப்பொருள் :

கேள்வியினால் மனனத்தால் : சிரவணத்தினாலும் மனனத்தினாலும்

கிளர்ந்த யோகங்களினால் : விளங்குகின்ற நிதித்தியாசத்தினாலும்

பிரம்மத்து : பிரத்தியபின்ன பிரம்மமானது

ஆ(ன்)ழ் அநுபவம் வந்து : அழுந்திய (அதாவது திடமான) திட அபரோட்ச ஞானம் உண்டாகிய பின்

அது தீரும் : தேகம் நான் என்ற அறிவு (தேகாத்ம புத்தி நிவிர்த்தியாகும்

என்றவரோ : என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

சிரவணத்தினால் மனனத்தினால் விளங்குகின்ற நிதித்தியா சத்தினாலும் பிரத்தியபின்ன பிரம்மமானது அழுந்திய (திடமான) திட அபரோட்ச ஞானம் உண்டாகிய பின் தேகம் நான் என்ற அறிவு (தேகாத்ம புத்தி நிவிர்த்தியாகும் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

சிரவணம் இருவகை

1. குருமுகமாக கேட்கும் மகாவாக்கிய உபதேசம்

2. தாத்பரியத்தை நிச்சத்தலில் கூறப்பட்டிருக்கும் ஆறுலிங்கமாகிய யுக்திகளால் வேதாந்த வாக்கியங்களுக்கு அத்விதீயப் பிரஹ்மத்தில் தாத்பரியத்தை நிச்சயித்தலாகிய பலத்தை உடையதான வேதாந்த வாக்கியங்களின் விசாரம்.

ஆறுலிங்கங்கள் :

1. உபக்கிரம - உபசம்ஹாரம் = உபக்கிரமம் என்பது நூலின் ஆரம்பம். உபசம்ஹாரம் என்பது நூலின் முடிவு. ஆரம்பத்தில் சொல்லிய அர்த்தத்தையே முடிவிலும் சொல்வது உபக்கிரம உபசம்ஹாரமாகிய ஏக ரூபமாகிய (ஒன்றான) முதலாவதாகிய லிங்கம்.

2. அப்பியாசம் = ஒரே அர்த்தத்தை மறுபடியும் மறுபடியும் வெவ்வேறு வசனங்களில் சொல்வது அப்பியாசமாம். யாசகன் தன் பிரயோஜனமான ஒரே கருத்தை வெவ்வேறு வசனங்களால் வெளியிடுவது போல் வெவ்வேறு யுக்திகளால் அத்வைதப் பிரஹ்மத்தைப் பிரதிபாதிப்பதே அப்பியாசம்.

3. அபூர்வதை = பிரஹ்மம், உபநிஷத்துக்கள் தவிர மற்ற பிரமாணங்களால் அறியப்படாது என்றும், சுயம்பிரகாச மாயிருத்தலால் அந்நிய பிரமாணங்களை அபேக்ஷிக்கிற தில்லை என்றும் பிரதி பாதிப்பதே அபூர்வதை இது மூன்றாவது லிங்கம்.

4. பலம் = ஜன்மாதி அனர்த்த நிவிர்த்தி பிரஹ்ம பிராப்தியுமாகிய துக்க நிவிர்த்தி ஆனந்த பிராப்தி பிரயோஜனமே அத்வைதப் பிரஹ்ம ஞானத்துக்கு பயன் என்று சொல்வது பலம் என்ற நான்காவது லிங்கமாம்.

5. அர்த்தவாதம் = பேத ஞானத்தின் நிந்தை வடிவினதும் அபேத ஞானத்தின் ஸ்துதி வடிவினவுமானதுவும் அர்த்தவாதம் எனப்படும்.

6. உபபத்தி = பிரதி பாதிக்கப்படும் அத்வைத அர்த்தத்திற்கு சாதகமான திருஷ்டாந்தங்கள் உபபத்தி என்னும் ஆறாவது லிங்கமாகும்.

இந்த ஆறு லிங்கங்களாலும் வேதாந்த வாக்கியங்களின் அத்வைத அர்த்தத்தை நிச்சயிப்பதே சிரவணம் எனப்படும்.

மகா வாக்கியம் : நான்கு வேதங்களிலும் ஒவ்வொன்றிலும் ஒரு வாக்கியமானது சாரத்தை கடைந்து எடுத்து கொடுக்கப் பட்டுள்ளது அதற்கு மகாவாக்கியம் என்று பெயர்.

ரிக் வேதம் = பிரஞ்ஞானம் பிரஹ்மம்

யஜுர் வேதம் = அகம் பிரஹ்மாஸ்மி

சாம வேதம் = தத்துவமசி

அதர்வண வேதம் = அயம் ஆத்மா பிரஹ்மம்

தாற்பரியம் = முடிவான கருத்து = கொள்கை = லட்சியம் = நோக்கம்

லிங்கம் - குறி = அடையாளம் புகை கண்ட இடத்தில் அக்கினி உண்டு என்பதில் புகை லிங்கமாம்

யுக்தி = அனுமானம்

அத்விதீய பிரஹ்மம் = ஒன்றாகிய (இரண்டற்ற) அகண்ட சச்சிதானந்த பொருள்

பிரதி பாதித்தல் = சொல்லுதல்

பிரமாணம் = (பிரமையின் கரணம் பிரமாணம்) அறிவைப் பெறுவதற்கான கருவி பிரமாணம் எனப்படும்.

பிரமாணம் - 8

1. பிரத்தியட்சம், 2.அனுமானம், 3.உபமானம், 4.ஆகமம்

5.அர்த்தாபத்தி, 6.அனுபலப்தி, 7.சம்பவம், 8.ஐதீகம்

அபேக்ஷித்தல் : சார்ந்திருத்தல்

அனர்த்தம் : தீங்கு, துன்பம்

பிரஹ்ம பிராப்தி : பிரம்மத்தை அடைதல் (இது உபச்சாரம்)

பேதம் - 3

1. சஜாதீய பேதம் (ஓரினப்பேதம்)

2. விஜாதீய பேதம் (வேற்றினப்பேதம்)

3. சுவகத பேதம் (உறுப்புக்களின் பேதம்)

ஓரினப்பேதம் : மரத்திற்கு மரம் வேறுபாடு (மாமரம், பலாமரம் போல)

வேற்றினப் பேதம் : மரத்திற்கும் கல்லிற்கும் உள்ள வேறுபாடு போல

சுவகத பேதம் : மரத்தின் கிளை, இலை, பூ, காய், பழம் இவைகளுக் குள்ள வேறுபாடு போல இம்மூன்று வகையான பேதங்கள் இல்லாமல் இருப்பது பிரம்மம்.

பேதம் - 5

1. ஜீவ ஈசுர பேதம், 2.ஜீவ சட பேதம், 3.ஈசுர சட பேதம்

4. ஜீவ ஜீவ பேதம், 5.சட சட பேதம்

இந்த பேதங்களைக் (வேற்றுமை) கண்டித்தும், அபேத ஞானமே (ஒரே பொருள் உள்ளது எனும் ஞானம்) சரியானது எனும் வாக்கியங்களே அர்த்த வாதம், எனும் ஐந்தாவது லிங்கமாம்.

வேதாந்தமானது (உபநிஷத்) இந்த ஆறு லிங்கங்கள் மூலமாக நமக்கு அறிவிக்கும் வஸ்து (பொருள்) அத்வைத பிரஹ்மமாம். (ஆறு லிங்கங்களும் உபநிஷதங்களுக்கு வேறாகிய கர்ம காண்டத்தைப் போதிக்கும். வேதத்திற்கு தாத்பரியம் கர்ம பலனில் ஆகும். குரு முகமாக கேட்கும் மகா வாக்கியமே ஞானத்திற்கு நேரடி சாதனமாம் யாருடைய அந்தக் கரணத்தில் மலம் (பாவம்) விக்ஷேபம் (சஞ்சல தன்மை) என்ற இரண்டு தோஷங்களும் (அழுக்கு) இல்லையோ அந்த ஜீவனுக்கு குருவானவர் மகாவாக்கிய உபதேசம் செய்வாராயின் அப்போதே அபரோட்ச ஞானம் உண்டாகும். இதற்கு முதல் சிரவணமாகிய மகா வாக்கிய உபதேசம் மட்டுமே போதும்.

மனனம் :

ஜீவப்பிரஹ்மங்களின் அபேதத்துக்குச் சாதகமான யுக்திகளாலும் பேதத்திற்கு பாதகமான யுக்திகளாலும் அத்விதீயப் பிரஹ்மத்தைச் சிந்தனை செய்தல் மனனம் என்று சொல்லப் படுகிறது.

நிதித்யாஸனம் :

அநாத்மாகார விருத்தியின் மறைப்பின்றிய பிரஹ்மாகார விருத்தியின் ஸ்திதி நிதித்தியாஸனம் எனப்படும். திரிபுடியின் விளக்கத்தோடு கூடிய சவிகற்ப சமாதியே நிதித்யாஸனமாம்.

நாம ரூபத்தோடு (பெயர், உருவம்) கூடிய பிரபஞ்சத்தின் (உலகம்) நினைவில்லாமல், தனது யதார்த்த நிலையின் (பிரஹ்மம்) நினைவுடன் இருக்கும் நிலையை நிதித்தியாசனம் என்பர். நிதி என்றால் பொருள். அதாவது வஸ்து. அதாவது பிரஹ்மம். ஆசனம் என்றால் இருக்கை. இடைவிடா பிரஹ்மத்தின் அந்தக் கரணத்தின் விருத்தியின் இருக்கைக்கு நிதித்தியாசனம் என்று பெயர். நிதித்தியாசனத்தின்

பரிபாக அவஸ்தையே சமாதி. சமாதி வேறு சாதனமாயிராது நிதித்தியாசனத்தில் அடங்கும். காண்பான் காட்சி காணப்படும் பொருள் (அந்தக்கரணம், அந்தக் கரணத்தின் பிரஹ்மாகார விருத்தி ரூப ஞானம், பிரஹ்மம்) எனும் திரிபுடி விளக்கத்தோடு கூடிய சவிகற்ப சமாதி நிதித்தியாசனம் என்றும், அதன் அப்பியாச (பயிற்சி) வாயிலாக உண்டாகும் (திரியுடியின் விளக்கமின்றிய) நிர்விகற்ப சமாதியை சமாதி என்றும் அறிக.

நிதித்தியாசனம் சாதனம் என்றும் சாட்சாத்காரம் (சமாதி) சாத்தியம் என்றும் அறிக.

நிதித்தியாசனமானது மரத்தின் கிளையை வளைத்து கொண்டு இருக்கும் போது வளைந்தது போலும் கையை விட்டவுடன் நிமிர்வது போலும் இருக்கும். சாட்சாத்காரம் இயல்பாகவே மரத்தின் கிளை வளைந்தது போல் இருக்கும்.

எவ்வளவுக்கு எவ்வளவு வேதாந்த சிரவணம் செய்கிறமோ அவ்வளவுக்கவ்வளவு மனனம் உண்டாம். எவ்வளவுக்குகவ்வளவு மனனம் பண்ணுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நிதித்தியாசனம் உண்டாம். எவ்வளவுக்கெவ்வளவு நிதித்தியாசனம் பண்ணு கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு சாட்சாத்கார நிலை கிட்டும்.

சிரவணம் = கேட்டல் = தத்துவம் அறிதல்

மனனம் = சிந்தித்தல் = சந்தேகம் நீங்குதல்

நிதித்யாசனம் = தெளிதல் = விபரீதம் போகுதல்

1. அசம்பாவனை : 1. பிரமாணகத சந்தேகம் 2. பிரமேயகத சந்தேகம்

பிரமாணகத சந்தேகம் : வேதாந்த வாக்கியம் அத்விதீய பிரஹ்மத்தை சொல்கிறதா? அல்லது அந்நிய அர்த்தத்தை சொல்லுகிறதா என்று ஆகமப்பிரமாணத்தில் சந்தேகம் உண்டாகிறது.

பிரமாணகத சந்தேக நிவிர்த்தி : சிரவணத்தில் இரண்டாவதாக சொல்லப்பட்ட லிங்க தாத்பரிய சிரவணம் பிரமாண கத சந்தேகத்தை நிவிர்த்தி செய்யும்.

பிரமேய கத சந்தேகம் : ஜீவப் பிரஹ்மங்களின் பேதம் சத்தியமா? அபேதம் சத்தியமா? என்பது பிரமேய கத சந்தேகம்.

பிரமேய கத சந்தேக நிவிர்த்தி : இது மனனத்தால் நிவிர்த்தியாம்

ஜீவப்பிரஹ்ம அபேதத்தின் சாதக யுக்திகள் :

1. ஜீவ பிரஹ்ம அபேதம் சாத்தியம் உதாரணம் கடமட உபாதிகளை நீக்கின் கடாகாச மகாகாசங்களுக்கு அபேதம் இருத்தல் போல புத்தியும் மாயையுமாகிய உபாதிகளை யொழிக்கின் ஆத்மாவுக்கும் பிரஹ்மத்திற்கும் அபேதம் இருக்கின்றது. கடாகாச மடாகாசங்களுக்குப் பெயர் மாத்திரத்தால் பேதமுண்டு. பரமார்த்தமாயில்லை. ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் அபேதமில்லையாயினும் அவற்றின் அதிஷ்டான லக்ஷியார்த்தமாகிய கூடஸ்தனுக்கும் பிரஹ்மத்திற்கும் பெயர் மாத்திரத்தால் பேதமுண்டு. பரமார்த்தமாயில்லை.

பரமார்த்தம் = யதார்த்தம் = உண்மை நிலை

“இங்கு நாநா என்பது சிறிதுமில்லை” என்றல் முதலிய சுருதிகளின் பேதம் நிஷேதிக்கப் பட்டிருக்கின்றது.

ஜீவப் பிரஹ்ம பேதத்தின் பாதக யுக்திகள் :

1. ஜீவப் பிரஹ்மங்களின் பேதம் மித்தையாம். பிம்பப் பிரதி பிம்பங்களின் பேதம் மித்தையாவது போல.

2. அநேக கடாகாசங்களுக்கு ஒன்றற் கொன்றுள்ள பேதம் மித்தையாவது போல ஜீவர்கள் ஒருவரோடு ஒருவர்க்குள்ள பேதம் மித்தையாம்.

3. சாக்கிர சொப்பனங்களில் உபாதியிருத்தலால் ஜீவப்பிரஹ்மங்களின் பேதம். தோற்றுகின்றது. அங்ஙனமே சுழுத்தியில் உபாதிகள் இல்லாமையால் பேதம் தோற்றுகிறதில்லை. ஆதலால் ஜீவப்பிரஹ்மங்களுக்குப் பாரமார்த்திக பேதம் இல்லை என்னும் நிச்சயம் உண்டாகிறது. இன்னும் அநேக பேதத்தின் பாதக யுக்திகள் சொல்லலாம்.

விபரீத பாவனை :

தேகாதிகள் சத்தியம் ஜீவப்பிரஹ்ம பேதமும் சத்தியம் என்பது விபரீத பாவனை.

விபரீத பாவனை நிவிர்த்தி :

இது நிதித்தியாசனத்தினால் நிவிர்த்தியாம் குருமுகமாக கேட்கும் தத்துவமசி மகாவாக்கிய உபதேசத்தால் அபரோட்ச பிரஹ்ம ஞானம் உண்டாம். அசம்பாவனை, விபரீத பாவனைகள் இல்லாமல் இருக்கும் அபரோட்ச ஞானமே திட அபரோட்ச பிரஹ்ம ஞானமாம். சிரவண, மனன, நிதித்தியாசனங்களினால் அசம்பாவனை விபரீத பாவனை நீங்கும்.

தேகத்திலுள்ள நான் என்னும் (தேகாத்ம) புத்தியை நீக்கி இதைப் போலப் பிரஹ்ம அபின்னமாகிய ஆத்மாவில் எப்போது ஞானம் உண்டாகுமோ, அப்போது திட அபரோட்ச ஞானம் பூரணமாம். பேதம் = வேறுபாடு உடையது; அபேதம் = வேறு பாடற்றது (ஒன்றானது) கடாகாசம் = குடத்திற்குள் வளைபட்ட ஆகாசம்; மடாகாசம் = மடத்திற்குள் வளைப்பட்ட ஆகாசம்.

49. ஆதியாம் சித் சொரூபம் ஆகாத தான் இனிமேல்
சோதி மநநாதியினால் சொரூபம் ஆமோ எனவே

இதன் பதப்பொருள் :

ஆதியாம் சித் சொரூபம் : முதன்மையாகிய சேதன ரூப பிரஹ்மமாய்

ஆகாத தான் : ஆகாத ஆத்மாவாகிய நான்

மநநாதியினால் இனிமேல் : சிரவண, மனன, நிதித்தியாசனமாகிய விசாரம் வந்த பிறகு

சோதி சொரூபம் ஆமோ : சேதன ரூபப் பிரஹ்மம் ஆவேனோ

எனவே : என்று அர்ஜ்னன் வினவ.

பொழிப்புரை :

முன்பு அறிவு வடிவ பிரஹ்மமாய் இராத ஆத்மாவாகிய தான் சிரவண, மனன, நிதித்தியாசனமாகிய விசாரம் வந்த பின்பு சேதனரூப பிரஹ்மம் ஆவேனோ என்று அர்ஜுனன்

விளக்கம் :

ஆத்மாவாகிய தான் முன்பிருந்தே சேதன ரூப பிரஹ்மமாக இல்லாதிருந்து சிரவண, மனன, நிதித்தியாசனமாகிய விசார ரூப அப்பியாசத்தினால் அறிவு ரூப பிரஹ்மம் ஆவேனோ என்பது அர்ஜுனனது ஐயம். பிரஹ்மம் சுபாவ சித்தமா? அல்லது கருமத்தினால் அடையப் படுவதா? என்பது சந்தேகம். சுபாவ சித்தம் என்பது என்றும் அடையப் பட்டதின் அடைவு ஒப்பப்பட்டிருக்கிறது. கழுத்திலுள்ள ஆபரணத்தைப் போல முதலில் ஆபரணம் காணப் படாமலிருந்து பின்பு காணப்பட்டு அடையப்பட்டது போல இருப்பது சுபாவசித்தமாம். செய்கையினால் அடைவது என்பது கருமத்தினால் செய்யப்பட்டு அடையும் பலனைப் போலவாம். ஒரு கருமத்தினால் அடையப்பட்ட பொருள் அநித்தியமாம். பிரஹ்மம் நித்திய வஸ்துவாகையால் கருமத்தினால் அடையப்படாதப் பொருளாம்.

சித்து = அறிவு = சேதனம் = சைதன்னியம் = சித்சோதி

சுபாவம் = இயல்பு

ஐயம் = சந்தேகம் = சம்சயம்

நித்தியம் = எக்காலத்திலும் இருப்பது

50. எப்போதும் சின்மயம் தான் எனல் மறந்து தேடுவது
செப்புமிடற்று அணி இருக்க தேடுதல் போல் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

தான் எப்போதும் சின்மயம் : ஆத்மாவாகிய நான் முக்காலத்திலும் அறிவு சொரூபம்

எனல் மறந்து தேடுவது : என்பதனை மறந்து தான் எவ்வாறு அறிவு சொரூபம் ஆவன் என்று விசாரிப்பது

செப்பும் இடற்று : அழகின் பொருட்டு அணிவதற்காக சொல்ல படுகின்ற கண்டமாகிய இடத்தில்

அணி இருக்க : ஆபரணமானது அணியப்பட்டிருக்க

தேடுதல் போல் என்றவரோ : ஆபரணத்தை காணவில்லை என்று எண்ணி விசாரித்தல் போலவாம் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

ஆத்மாவாகிய நான் முக்காலத்திலும் அறிவு சொரூபம் என்பதனை மறந்து நான் எங்ஙனம் அறிவு சொரூபமாவேன்? என்று விசாரிப்பது அழகின் பொருட்டு அணிவதற்காக சொல்லப் படுகின்ற கழுத்தினிடத்தில் ஆபரணம் அணியப்பட்டிருக்க ஆபரணத்தை காணவில்லை என்று எண்ணி விசாரித்தல் போலவாம் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

இதனை கண்ட சாமீகர திருஷ்டாந்தம் (கழுத்து பொன் நகை நியாயம்) என்பர்.

விளக்கம் :

"எப்போதும்" என்பது முக்காலத்தைக் குறிக்கின்றது. உலக உற்பத்திக்கு முன், உலக உற்பத்தியானப்பின், உலக நாசத்திற்குப் பின்னுமாகிய மூன்று காலத்திலும், சாக்கிரம் (நனவு) சொப்பனம் (கனவு) சுழுத்தி (தூக்கம்) யாகிய மூன்று காலத்திலும், சரீர உற்பத்திக்கு முன், சரீரம் தோன்றிய பின், சரீரம் அழிந்த பின்னுமாகிய மூன்று காலத்திலும் அழியாமல் இருப்பதால் "எப்போதும்" என்றார். "தேச கால வஸ்து பரிச்சேத ரகித பிரஹ்மம்" என்பது சுருதிவாக்கியம்

51. தேடிய பின் தேகபுத்தி தீர்ந்துபோய்ச் சித்சொரூபம்
கூடுவனோ யான் என் குறை தீரச் சொல்லும் என.

இதன் பதப்பொருள் :

தேடிய பின் : சிரவண மனன நிதித்தியாசங்களினால் விசாரித்து தெளிந்த பின்னர்

தேக புத்தி : சரீரத்திரயங்களில் நான் என்ற தேகாத்ம எண்ணமானது

தீர்ந்து போய் : விட்டு நீங்கி

சித் சொரூபம் : சேதன ரூபப் பிரஹ்மத்தினை

யான் கூடுவனோ : நான் அடைவேனோ

என்குறை தீரச் : எனது மனத்தின் கண்ணுள்ள சந்தேகம் நீங்கும்படி

சொல்லும் என : கூறியருளும் என அர்ஜுனன் வினவ.

பொழிப்புரை :

சிரவண மனன நிதித்தியாசனங்களினால் தன்னை (தனது யதார்த்த சொரூபத்தை) விசாரித்து தெளிந்த பின்னர், சரீரத்திரயங்களில் நான் என்ற புத்தி (தேகாத்ம புத்தி) விட்டு நீங்கி சேதன ரூபப்பிரஹ்மத்தினை நான் அடைவேனோ என்ற எனது சந்தேகம் நீங்கும் வண்ணம் கூறியருளும் என அர்ஜுனன் வினவ.

விளக்கம் :

கருமத்தினைச் செய்து கருமப் பலனை அடைவது போல சிரவண மனன நிதித்தியாசனங்களை அப்பியாசம் செய்து பிரஹ்ம மானது அடையப்படும் பொருளாக இருக்கின்றதா என்ற கருத்தினை "கூடுவனோ" என்ற பதம் குறிக்கின்றது. பிரஹ்மம் சச்சிதானந்த சொரூபம். அங்ஙனம் இருக்க இங்கு அநேக செய்யுள்களில் சித் சொரூபம் என்று சித்தை மாத்திரம் சொல்வதற்குக்

காரணம் சத்தே சித்தாகும் சித்தே ஆனந்தமாகும். "ஒத்தே தோன்றிய சத்துஞ் சித்தும் நல்ல சுகமாகும்" என்பது கைவல்லிய நவநீதம். குளிர், இளகல், வெண்மை என்பதனால் நீர் மூன்று பிரிவாகவா உள்ளது? இல்லையே ஒளி, தபனம், செம்மை என்ற பதங்களினால் அக்கினி மூன்று பிரிவாகவா உள்ளது? இல்லையே. அதைப்போல சத்து, சித்து, ஆனந்தம் என்று சொல்வதால் பிரஹ்மம் மூவகையன்று. ஒரே வஸ்துவாம் எனவே சித் சொரூபம் என்றாலே சத்து சித்து ஆனந்தத்தையும் நாம் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

தேகாத்ம புத்தி = தேகத்தில் நான் என்ற அபிமானம்

52. வந்த உடல் வேறாயும் வாசனையால் தான் எனலால்
சந்தயம் என் தன் சொரூபம் தான் ஆதற்கு என்றவரோ.

இதன் பதப்பொருள் :

வந்த உடல் வேறாயும் : சஞ்சித கர்மங்களினால் உண்டான சரீரம் ஆத்மாவாகிய தனக்கு அந்நிய மாயிருந்தும்

வாசனையால் தான் எனலால் : ஜன்மாந்தர வாசனையினால் சரீரத்தை தான் (ஆத்மா) என்று கூறுகின்ற படியினால்

தன் சொரூபம் : தனது யதார்த்த சொரூபமாகிய பிரஹ்ம ரூபமே

தான் ஆதற்கு : தனது உண்மையான நிலை என்று நிலைத்து நிற்பதற்கு

சந்தயம் என் : என்ன சந்தேகம் உளது? இல்லை

என்றவரோ : என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

முன்னுள்ள அநேக மானிட பிறவிகளில் மனோ வாக்கு காயங்களினால் செய்யப் பட்டுள்ள புண்ணிய பாவங்களாகிய சஞ்சித கர்மங்களினால் உண்டான இந்த சரீரத்திற்கு வேறாக உள்ள அசங்க சிதாத்மாவாக தான் இருந்தும் ஜன்மாந்தர வாசனை பழக்க வாசனை இவைகளால்

தேகமே நான் (ஆத்மா) என்று எண்ணுகிற படியினால் தனது யதார்த்த சொரூபமாகிய பிரஹ்ம சொரூபமே தனது உண்மையான சொரூபம் என்று நிலைத்து நிற்பதில் என்ன சந்தேகம் உளது? (அதாவது சந்தேகம் இல்லை என்பது கருத்து) என்று கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

இந்த சரீரமானது முன் எத்தனையோ மனித பிறவிகளில் பாவ, புண்ணியங்களை செய்து அந்தக் கரணத்தின் கண் வாசனை வடிவமாக சேமிக்கப் பட்டுள்ள சஞ்சித கர்மங்களின் ஒரு பகுதியாக இருக்கின்றமையால் "வந்தவுடல்" என்றார். நமது யதார்த்த (உண்மையான) ஸ்வரூபம் ஆத்ம ஸ்வரூபம். சரீரமானது நமது உண்மையான ஸ்வரூபமன்று; பொய்யானது. சரீரம் என்னுடையது. சரீரம் நான் அல்ல. தான் அல்லாத சரீரத்தை நான் என்று சொல்லுகிறோம். தனது யதார்த்த வடிவமாகிய ஆத்ம சொரூபத்தை நான் என்று சொல்வதில் என்ன சந்தேகம்? சந்தேகம் இல்லை என்பது கருத்து.

வாசனை = சம்ஸ்காரம் = அந்தக்கரணத்தின் கண் அடங்கியுள்ள எண்ணங்கள்

ஜன்மாந்தர வாசனை = முன் அனேக மானிட பிறவிகளில் செய்து அந்தக்கரணத்தின் கண் பொருந்தியுள்ள எண்ணங்கள்.

அசங்க = ஒட்டாதது (ஆகாயம் போல)

சிதாத்மா = சித்+ஆத்மா = (அறிவு ஸ்வரூபமாகிய ஆத்மா

பழக்க வாசனை = இந்த பிறவியில் பழக்கத்தினால் அந்தக் கரணத்தின் கண் பொருந்தியுள்ள எண்ணங்கள் பிறவிதோறும் தூல சரீரங்கள் அழிந்து கொண்டும் உற்பத்தியாகிக் கொண்டும் வரும். சூட்சும, காரண சரீரங்கள் அழியாமல் ஒவ்வொரு பிறவிக்கும் வரும்.

53. தநுவைத் தான் எனும் பிரமை சத்த ஞாநத்தில் அறாது
அநுபவ மெய்ஞ்ஞானத்தால் அறும் வகை ஏது உரையும் என.

இதன் பதப்பொருள் :

தநுவைத்தான் = சரீரத்தினை தனது யதார்த்த சொரூபமாகிய ஆத்மா

எனும் பிரமை = எனும் அபரோட்ச பிராந்தியை

சத்த ஞானத்தில் அறாது: = குரு, சாஸ்திர மூலமாக உண்டான பரோட்ச ஞானமானது நிவிர்த்தி செய்யாது.

அநுபவ மெய்ஞ்ஞானத்தால் : நிவிர்த்தி செய்யாது திட அபரோட்ச பிரஹ்ம ஞானத்தால்

அறும் வகை ஏது உரையும் என : நீங்குகின்ற காரணம் யாது என்பதை கூறியருளும் என அர்ஜுனன் வினவ.

பொழிப்புரை :

சரீரத்தினை தனது யதார்த்த சொரூபம் (ஆத்மா) என்ற அபரோட்ச பிராந்தியை குரு சாஸ்திர மூலமாக உண்டான பரோட்ச ஞானம் நிவிர்த்தி செய்யாது. திட அபரோட்ச பிரஹ்ம ஞானத்தினால் நீங்குகின்ற காரணம் யாது என்பதை கூறியருளும் என அர்ஜுனன் வினவ.

விளக்கம் :

சொர்க்கம் இருக்கிறது. கடவுள் இருக்கிறார். பிறவி இருக்கிறது. பாவ புண்ணியமுண்டு என்பது பரோட்சம் தசபுமான் கதையில் பத்தாமவன் இருக்கிறான் என்பது பரோட்சம் அங்ஙனம் குரவனது அவாந்தர வாக்கியமாகிய "சத்திய ஞானநந்தம் பிரஹ்மம்" எனும் வாக்கியமானது பரோட்சம் ஞானத்தை உண்டு பண்ணக் கூடியது. இதனையே இங்கு "சத்த ஞானம்" என்றார். "அநுபவ மெய்ஞ்ஞானம்" என்பது திட அபரோட்ச ஞானமாம்

பிரத்தியட்சமாக தோன்றும் இந்த சரீரத்தை நான் என்று சொல்வதற்கு காரணம் மயக்கம். இம்மயக்கத்தினையே "பிரமை" என்றார். இதனையே அபரோட்ச பிராந்தி என்பர்.

குரவனது உபதேச மகா வாக்கியமானது அபரோட்ச ஞானத்தை உண்டு பண்ணக் கூடியது.

குரவனது அவாந்தர வாக்கியமானது பரோட்ச ஞானம்

குரவனது உபதேச மகாவாக்கியமானது அபரோட்ச ஞானம்

பிரஹ்மம் இல்லை என்பது அச்சாதாவரணம் = பரோட்ச பிராந்தி; பிரஹ்மம் தெரியவில்லை என்பது அபாநாவரணம் = அபரோட்ச பிராந்தி; பரோட்ச ஞானம் பரோட்ச பிராந்தியை போக்கும். அபரோட்ச ஞானம் அபரோட்ச பிராந்தியை போக்கும். சரீரம், தநு, உடல், தேகம் ஒரு பொருட் சொற்கள் பிரமை, பிராந்தி, மயக்கம், மோகம், கலக்கம், விபரீதம் என்பன ஒரு பொருட் சொற்கள்.

54. விளக்கு விளக்கெனும் அதனால் வெய்ய இருள் போய் விடுமோ
துளக்கம் இலா விளக்கேற்றில் தொலையும் இருள் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

விளக்கு விளக்கு எனும் அதனால் : தீபம் தீபம் என்று வாயால் சொல்வதனால்

வெய்ய இருள் போய் விடுமோ : கொடிய இருளானது நீங்குமோ? நீங்காது

துளக்கம் இலா விளக்கு : அசைவற்ற தீபத்தினை

ஏற்றில் இருள் தொலையும் : ஏற்றுமிடத்து இருளானது நீங்கும்

என்றவரோ : என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

தீபம், தீபம் என்று வாயால் வார்த்தையினால் சொல்வதினால் கொடிய இருளானது நீங்குமோ; அதாவது நீங்காது. அசைவற்ற, பிரகாசமான தீபத்தினை ஏற்றுமிடத்து இருளானது நீங்கும் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

இருள் – ஒளி; நற்கருமம் – தீய கருமம் அறியாமை – அறிவு இவைகள் ஒன்றற்கொன்று விரோதமானது. இவற்றில் ஒன்றை நீக்க வேண்டுமானால் மாற்று உபாயத்தினைக் கைக்கொள்ளல் வேண்டும். அப்போது தான் அது நிவிர்த்தியாகும். இருள் போக வேண்டுமானால் அதற்கு விரோதியான பிரகாசம் வர வேண்டும் அதை விடுத்து இருள் நீங்க ஒளி ஒளி என்ற கர்மேந்திரியந்திரமாகிய வாக்கு இந்திரியத்தினால் உண்டான சப்தம் எங்ஙனம் பிரயோஜனப் படும்? பிரயோஜனப்படாது. அதாவது இருளைப் போக்காது. பரோட்ச ஞானம் பரோட்ச பிராந்தியைப் போக்குமே தவிர அபரோட்ச பிராந்தியைப் போக்காது என்பது கருத்து.

55. நெடுங்காலம் ஆத்மாவை நீங்காத அஞ்ஞானம்
விடும் காலம் எந்நாளோ மெய்ஞானத்தால் எனவே

இதன் பதப்பொருள் :

ஆத்மாவை நெடுங்காலம் : ஆத்மாவை நீண்ட காலமாக

நீங்காத அஞ்ஞானம் : விலகாமல் கூடவே இருந்த அறியாமையானது

மெய்ஞ்ஞானத்தால் விடும் காலம் : அபரோட்ச பிரஹ்ம ஞானத்தால் நீங்குகின்ற காலம்

எந்நாளோ எனவே : எக்காலமோ யான் அறிகிலேன் என்று அர்ஜுனன் கேட்க

பொழிப்புரை :

ஆத்மாவை நீண்ட காலமாக தொடர்ந்து விலகாமல் கூடவே இருந்த அறியாமையயானது அபரோட்ச பிரஹ்ம ஞானம் வந்த பின்பு நீங்குகின்ற காலம் எக்காலமோ யான் அறியேன் என்று அர்ஜுனன் கேட்க.

விளக்கம் :

நீண்ட காலமாக இருந்த அஞ்ஞானம் அபரோட்ச ஞானம் வந்த பின்பு நீண்ட காலத்திற்குப் பிறகு தான் போகுமோ? என்பது அர்ஜுனனது ஐயம். எனவே "விடும் காலம் எந்நாளோ?" என்று பகவானை அர்ஜுனன் வினாவினான். அநாதி கால அஞ்ஞானம் அநாதி கால ஞானத்தால் தான் நீங்குமோ? என்பது அர்ஜுனனது ஐயம்.

56. அந்தகாரம் குகையில் ஆயிரம் நாள் இருந்தாலும்
செம்தீபம் கண்டவுடன் தீர்வது போல் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

குகையில் அந்தகாரம் : மலையிலுள்ள குகையினிடத்து இருளானது

ஆயிரம் நாள் இருந்தாலும் : குகை தோன்றிய காலம் முதல் இருந்திருப்பினும்

செம்தீபம் கண்டவுடன் : சிறந்த பிரகாசமான விளக்கினைப் பார்த்த அக்கணமே

தீர்வது போல் என்றவரோ : நீங்குவது போல் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

மலையிலுள்ள குகையினிடத்து குகை தோன்றி காலம் தொட்டு (நீண்ட காலம்) இருளானது இருந்திருந்தாலும் நன்கு பிரகாசமான விளக்கு வந்து அந்த இருளைப் பார்த்த அக்கணமே

இருள் நீங்குவது போல ஆத்மாவினிடத்து அறியாமையானது நீண்ட காலமாக (அநாதியாக) இருந்தாலும் தத்துவ ஞானம் வந்தவுடன் நீங்கிவிடும் என்று அநுகிரகித்தப் பகவானோ (நீர்)

விளக்கம் :

இதனை அந்தகார தீப தர்சன நியாயம் என்பர். (இருளினை விளக்கு பார்த்தல் உதாரணம்) "செம்தீபம்" என்றதால் நன்கு பிரகாசமான விளக்கு என்பது பொருள். சென்ற செய்யுளில் "அஞ்ஞானம் விடும் காலம் எந்நாளோ?" என்று அர்ஜுனன் வினவ இச்செய்யுளில் "செம்தீபம் கண்டவுடன் தீர்வது போல" என்று பகவான் பகர்ந்துள்ளார். பிரகாசம் வந்த அக்கணமே இருள் மறைவது போல தத்துவ ஞானம் வந்த அக்கணமே அஞ்ஞானம் நிவிர்த்தியாய் விடும் என்பது கருத்து.

ஆத்மாவினிடத்து அஞ்ஞானம் உண்டு என்பதும் அதை நிவிர்த்தி செய்ய ஆத்ம ஞானம் வேனும் என்பதும் பொய். எதைப் போல் எனின் சொப்பனத்தில் வந்த பசியைப் போக்க சாக்கிரத்தில் உணவு உட்கொள்வதைப் போலவாம். ஆத்மாவினிடத்து அஞ்ஞானம் உண்டு என்பது உபச்சாரம்.

57. கருமயோகம் தவமே காரணம் ஆய் நீங்காமல்
அருமையா ஞானம் வந்தோ அஞ்ஞானம் போம் எனவே,

இதன் பதப்பொருள் :

அஞ்ஞானம் கருமம் : மூலஅவித்தையானது யாகாதி புண்ணிய கர்மங்கள்

யோகம் : அஷ்டாங்க யோகம்

தவமே : கிருச்சிர சாந்திராயனாதி தபசு இவைகளை

காரணமாய் நீங்காமல் : ஏதுவாகக் கொண்டு நிவிர்த்தி செய்யாமல்

அருமையா ஞாநம் : அடைதற்கரிய திடஅபரோட்ச ஞானம்

வந்தோ போம் எனவே : உண்டான பிறகுதான் போமோ? என்று அர்ஜுனன் வினவ.

பொழிப்புரை :

மூல அவித்தையானது யாகாதி புண்ணிய கர்மங்கள் அஷ்டாங்க யோகங்கள் கிருச்சிர சாந்திராயணாதி தபசு இவைகளை காரணமாகக் கொண்டு இவைகளை அனுஷ்டித்து நிவிர்த்திச் செய்யாமல் அடைதற்கரிய திடஅபரோட்ச ஞானம் உண்டான பிறகு தான் நீங்குமா? என்று அர்ஜுனன் வினவ.

விளக்கம் :

1. கர்மம் இரண்டு : 1.விகித கர்மம் 2. நிஷித கர்மம்

நிஷித கர்மம் : விலக்கப்பட்ட கர்மம். கள், காமம், பொய், கொலை, களவு இவை போன்ற பல தீய கர்மங்கள்

2. விகித கர்மம் 4 : 1.பிராயச்சித்தம் 2.காமியம் 3.நைமித்தியம் 4.நித்தியம்.

1. பிராயச்சித்த கர்மம் : பாப நாசத்தின் பொருட்டு விதிக்கப் பட்ட கர்மம்

2. காமிய கர்மம் : பலத்தின் (பயனின்) பொருட்டு விதிக்கப்பட்ட கர்மம்

3. நைமித்திய கர்மம் : எதைச் செய்யாததினால் பாபமுண்டாமோ செய்வதினால் புண்ணிய பலன் உண்டாவதில்லையோ எது எப்போதும் விதிக்கப்படாது ஒரு நிமித்தமாகக் கொண்டு விதிக்கப் பட்டதோ அந்தக் கர்மம் நைமித்திய கர்மம் எனப்படும்.

4. நித்திய கர்மம் : எதைச் செய்யாததினால் பாபமுண்டாமோ செய்வதினால் புண்ணிய பலன் உண்டாவதில்லையோ அக்கர்மம் எப்போதும் விதிக்கப் பட்டுள்ளதோ அது நித்திய கர்மம் எனப்படும். அவைகள் ஸந்தியாவந்தனாதிகளாம். இவைகள் அனைத்தும் கர்மங்கள் எனப்படுகின்றன. இக்கர்மங்கள் அஞ்ஞானம் நீங்குவதற்கு ஏதுவாக மாட்டா. பலனை எதிர்பாராமல் கர்மங்களை செய்வதும், அவரவர்

வர்ணாசிரம கர்மங்களை ஈசுவ அர்ப்பணமாக செய்வதும் நிஷ்காமிய கர்மம் எனப்படும். இந்த நிஷ்காமிய கர்மம் சித்த சுத்தி உண்டாக்கும். சித்த சுத்தியானது ஞானத்துக்கு தூரத்து சாதனமாம். இக்கர்மம் தேகாதி பிரபஞ்சம் சத்தியம் என்ற புத்தியையும் சேர்ந்துள்ளது. எனவே விகித கர்மம், நிஷித கர்மம் ஆகிய இவை அனைத்தும் அஞ்ஞானத்தை போக்காது. "அஞ்ஞானத்தை கர்மங்கள் பகை செய்யாது உறவாக்கும்" என்பது கைவல்லிய நவநீதம்.

2. யோகம் : அஷ்டாங்க யோகம். இதனது அங்கங்கள் எட்டு. 1.இயமம் 2.நியமம் 3.ஆசனம் 4.பிராணாயாமம் 5.பிரத்தியாகாரம் 6.தாரனை 7.தியானம் 8.சமாதி.

3. தவம் : அவரவர் வர்ணாசிரம கர்மங்களை தர்மப்படிச் செய்வது தவமாம். தவத்தில் கிருச்சிர சாந்திராயணா தவம் இரண்டு உள்ளன. 1.யவ மத்திய சாந்திராயணம் 2.பிபீலிகாமத்திய சாந்திராயணம்.

1. யவ மத்திய சாந்திராயணம் : சுக்கில பக்ஷம் (அமாவாசை முதல் பௌர்ணமி வரை) பிரதமை திதியில் ஒரு கவளம் உணவு உட்கொண்டு ஒவ்வொரு கவளமாக கூட்டிக் கொண்டு வந்து பௌர்ணமியன்று பதினைந்து கவளமும் கிருஷ்ணபக்ஷம் (பௌர்ணமி முதல் அமாவாசை வரை) ஒவ்வொரு கவளமாக குறைத்து அமாவாசை யன்று உபவாசம் இருப்பது யவமத்திய சந்திராயணம் எனப்படும்.

2. பிபீலிகா மத்திய சாந்திராயணம் : கிருஷ்ண பக்ஷத்தில் பிரதமையன்று பதினைந்து கவளம் உட்கொண்டு ஒவ்வொரு கவ்வளமாக குறைத்துக் கொண்டு அமாவாசையன்று உபவாசமும் சுக்கில பக்ஷத்தில் பிரதமை திதியிலிருந்து ஒவ்வொரு கவளமாக கூட்டிக் கொண்டு வந்து பௌர்ணமியன்று பதினைந்து கவளம் உட்கொள்வதுமாகிய தவம் பிபீலிகா மத்திய சந்திராயணம் எனப்படும்.

தவங்கள் காம புருடனுக்கு (காமிய) காமிய பலனும், பிராயச் சித்தமும் உண்டாக்கக் கூடியது. காமிய புருடனுக்கு கருமம்,யோகம், தவம் இவைகள் காமிய பலனையும் பிராயசித்தமும் தருமே தவிர சித்தசுத்தியையோ, சாந்தத்தையோ கொடுக்காது. நிஷ்காம புருடனுக்கு கர்மம், யோகம், தவம் இவை மூன்றும் சித்த சுத்தியும் சித்தத்தின் மன ஒருமைப் பாட்டையும் கொடுக்கும். இவைகள் ஞானத்திற்கு பரம்பரா சாதனமாம். கர்மங்கள், யோகம், தவம் இவைகள் அஞ்ஞானத்தை போக்காதா? என்பது அர்ஜுனனது ஐயம். "கரும யோக தவமே காரணமாய் நீங்காமல்" என்றான். நிஷ்காமிய கர்ம யோக தவம் மலம் விஷேப தோடத்தை நீக்கும் மலம் விக்ஷேப தோடம் நீங்கிய அந்தக்கரணத்தில் சாதன சதுட்டயம் உற்பத்தியாம். சாதுன சதுட்டயம் உண்டான பின்பு சிரவணாதிகள் உண்டாகும். பின்பு மகாவாக்கிய விசாரம் உண்டாம் பின்பு ஞானம் உண்டாகி அஞ்ஞானம் நிவிர்த்தியாம்

தூரத்து சாதனம் : நிஷ்காம கர்மம், நிஷ்காம பக்தி

அந்தரங்க சாதனம் : 1.நித்திய அநித்திய வஸ்து விவேகம் 2.இகபர போக விராகம் 3.சமாதி சட்க சம்பத்து 4.முமூட்சுத்துவம் 5.சிரவணம் 6.மனனம் 7.நிதித்தியாசனம் 8.மகாவாக்கிய விசாரம்

58. குத்து வெட்டும் படைகளினால் கூடுமோ இருள் துரக்க,
உத்தமமாம் ரவி உதித்தால் ஓடும் இருள் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

குத்து வெட்டும் படைகளினால் : குத்துவதற்குரிய ஈட்டி, கத்தி போன்ற ஆயுதங்களாலும் வெட்டுவதற்குரிய வாள், அரிவாள் போன்ற ஆயுதங்களாலும்

இருள் துறக்க : இருளை நிவிர்த்தி செய்ய

கூடுமோ : முடியுமா? முடியாது என்பது கருத்து

உத்தமம் ஆம் : உலகிற்கு எல்லா நன்மைகளையும் செய்விக்கும் உயர்வாகிய

ரவி உதித்தால் : சூரியன் உதயமானால்

ஓடும் இருள் என்றவரோ : இருள் நாசமாகும் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

குத்துவதற்குரிய ஈட்டி, கத்தி போன்ற ஆயுதங்களாலும், வெட்டுவதற்குரிய வாள், அரிவாள் போன்ற ஆயுதங்களாலும், இருளை நிவிர்த்தி செய்ய முடியுமா? முடியாது என்பது கருத்து. உலகிற்கு எல்லா நன்மைகளையும் செய்விக்கும் உயர்வாகிய சூரியன் உதயமானால் இருள் நாசமாகும் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

ஒன்றை நிவிர்த்தி செய்ய வேண்டுமானால் அதற்கு சமானமான விரோதியால் தான் மாற்ற முடியும். அதற்கு வேறான விரோதியால் மாற்ற முடியாது என்பது கருத்து.

தீய கர்மம் X நற்கர்மம்

அஞ்ஞானம் X ஞானம்

இருள் X ஒளி

இவைகளை அதனதற்கு சமான விரோதியால் நீக்க வேண்டுமே யல்லாமல் மாற்று விரோதியால் நீக்க முடியாது. கர்மத்தை ஞானத்தாலோ, பிரகாசத்தாலோ நீக்க முடியாமல் மாற்று விரோத கர்மத்தால் நீக்க முடியும். அங்ஙனம் அஞ்ஞானத்தை கர்மத்தினால் நீக்காமல் ஞானத்தால் தான் நீக்கமுடியும்.

கர்மத்திற்கு மாற்று விரோத கர்மம் உதாரணம் :

கண்ணாடியில் அழுக்கு படிந்திருந்தால் அழுக்கை துடைத்துத் தான் போக்க வேண்டும். புத்தியின் பிரகாசத்தினால் அழுக்கைப் போக்க முடியாது.

அறியாமையைப் போக்கக் கூடியது ஞானம் தான் என்பதற்கு உதாரணம் :

பளிங்குக்கல் சிவப்பாக தோன்றுவதை துடைத்துப் போக்க முடியாது. புத்தியின் பிரகாசத்தினால் தான் போக்க முடியும். எங்ஙனம் எனின் சிவப்பு நிறமாக தோன்றுவதற்குக் காரணம் அருகிலுள்ள செம்பருத்திப் பூவின் நிறம் தான் என்பதை தெரிந்து கொள்ள ஞானம் தான் வேண்டும்.

59. அஞ்ஞான இருள் துரக்க அறியாத நல்ல கன்மம்
மெய்ஞ்ஞானம் தனைப் பலிக்கும் விதம் எவ்வாறு என வினவ

இதன் பதப்பொருள் :

அஞ்ஞான இருள் துரக்க : அவித்தையாகிய இருளினை நிவிர்த்தி செய்யத்தக்க அறியாத நல்ல கன்மம் : தெரியாத புண்ணிய கர்மங்கள்

மெய்ஞ்ஞானம் தனைப் பலிக்கும் : உண்மையான தத்துவ ஞானத்தினை வாய்க்கும்படி செய்யும்

விதம் எவ்வாறு : வகை எங்ஙனம்

என வினவ : என்று அர்ஜுனன் கேட்க

பொழிப்புரை :

அவித்தையாகிய இருளை நிவிர்த்தி செய்யத்தெரியாத புண்ணிய கர்மங்கள் உண்மையான தத்துவ ஞானத்தினை வாய்க்கும்படி செய்வது எப்படி என்று அர்ஜுனன் கேட்க.

விளக்கம் :

புண்ணிய கர்மங்கள் : கோவில்கள் சாலைகள், அக்கிரகாரங்கள், பூந்தோட்டம், கிணறுகள், குளங்கள், தானம் வழங்குதல் போன்றவைகள்.

தானங்கள் : கோதானம், பூதானம், வஸ்திர தானம், தான்ய தானம், குள தானம், சுவர்ண தானம், அன்னதானம், வித்தியா தானம், புஸ்தக தானம், கிருக தானம்.

இந்த நல்ல புண்ணிய கர்மங்கள் அறியாமையைப்போக்க மாட்டாது. அறியாமையைப் போக்கக் கூடிய ஞானத்தைக் கொடுக்க தூரத்து சாதனமாக உள்ளது. "ஆன புண்ணியம் ஈசுரார்ப்பனஞ் செயின் அசுசிபோம்" என்பது கைவல்லிய நவநீதம்.

60. கருமம் இருவகையாங் காமிய நிஷ்காமியமென்று
இருவகையில் நிட்காமம் ஏது காண் என்றவரோ

இதன் பதப்பொருள் :

காமிய நிஷ்காமியம் என்று : காமிய கர்மம் என்றும் நிஷ்காமிய கர்மம் என்றும்

கருமம் இருவகையாம் : கர்மமானது இரண்டு வகையாக சொல்லப்படும்.

நிஷ்காமம் ஏது காண் என்றவரோ : நிஷ்காமிய கர்மமானது ஞானத்திற்கு காரணம் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

கர்மமானது காமிய கர்மம், நிஷ்காமிய கர்மம் என்று இரு பிரிவாகச் சொல்லப்படும். அதில் நிஷ்காமிய கர்மமானது ஞானத்திற்கு காரணமாய் அமையும் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

எல்லாக் கர்மங்களிலும், உலகியல் பொருட்களிலும், பயனையும், பற்றையும், முழுமையாகத் தியாகம் செய்துவிட்டு தமது வர்ணம் (ஜாதி) ஆசிரமம் (பிரம்மச்சர்யம், வானபிரஸ்தன், சந்நியாசி) முதலியவற்றில் எவ்வர்ண எவ்வாச்ரமத்தில் உள்ளனரோ அவ்வர்ண ஆச்ரம தர்மங்களை (சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட) செய்ய வேண்டும். இது தான் கர்மத்தை முக்கியமாகக் கொண்ட கர்மயோகம்.

நான் எனது என்ற அகங்காரம் மமகாரமின்றி பல அபேக்ஷையின்றி சகல பாப கர்மங்களையும் விட்டு புண்ணிய கர்மங்களைச் செய்தல் விடல் என்றும், நிஷ்காமிய கர்மம் என்றும் கூறுவர். ஜாதி பிராமணர், வைசியர், க்ஷத்திரியர், சூத்திரர்.

61. கருமமே காரணமாய்க் கட்டுரைத்தீர் இவ்வுலகை
யொருவும் வகையை எனக்கு ஓதென்று அடிபணிய

இதன் பதப்பொருள் :

கருமமே காரணமாய் : நிஷ்காமிய கர்மமே பிரஹ்ம ஞானத்திற்கு காரணம் என்று

கட்டுரைத்தீர் : தொகுத்து உரைத்தீர்

இவ்வுலகை ஒருவும் வகையை : ஆத்மாவானது இவ்வுலகத்தோடு சம்பந்தித்த முறையை

எமக்கு ஓது என்று : அடியேனுக்கு கூறியருள வேண்டும்

அடி பணிய : என்று அர்ஜுனன் பகவானின் திருவடியை வணங்கி விண்ணப்பிக்க

பொழிப்புரை :

நிஷ்காமிய கர்மமே பிரஹ்ம ஞானத்திற்கு காரணம் என்று தொகுத்து உரைத்தீர். ஆத்மாவானது இப்பிரபஞ்சத்தோடு சம்பந்தித்த முறையை அடியேனுக்கு கூறியருள வேண்டும் என்று அர்ஜுனன் பகவானின் திருவடியை வணங்கி விண்ணப்பிக்க.

விளக்கம் :

நிஷ்காமிய கர்மமானது சித்த சுத்திக்கு ஏதுவாகின்றது. சித்த சுத்தி வந்த பின்பு சகுண உபாசனை உண்டாகின்றது. சகுண உபாசனை சித்த ஏகாக்கிரத் தன்மையை (மன ஒருமைப்பாடு) உண்டாக்குகிறது. மன ஒருமைப் பாட்டால் சாதன சதுட்டயம் உண்டாகிறது. சாதன சதுட்டயத்தால் சிரவணமும், சிரவணத்தால் மனனமும், மனனத்தால் நிதித்தியாசனமும், நிதித்தியாசனத்தால் மகா வாக்கிய விசார ஜன்னிய ஞானமும் உண்டாகிறது. பின்பு திட அபரோட்ச ஞானம் உண்டாம். அதனால் ஜீவன் முத்தியும், பின்பு பிராரப்த முடிவில் விதேக முத்தியும் உண்டாம். இக்காரணத்தினால் தான் நிஷ்காமிய கர்மம் ஞானத்திற்கு காரணம் என்றார். அடுத்த சந்தேகம் அர்ஜுனனுக்கு இவ்வுலகத்தோடு பிரஹ்மம் பொருந்தியது எங்ஙனம்? என்பது.

62. இந்திர சாலம் போல இவ்வுலகை நம்மிடத்தில்
தந்திரமாய் தோற்றுவித்தோம் சத்யம் அல என்றவரோ

இதன் பதப்பொருள் :

இந்திர சாலம் போல : இந்திரசாலக்காரனது வித்தை சக்தியினால் தோன்றிய பொருட்கள் பொய்யாயிருப்பினும் தோற்றுவது போல

இவ்வுலகை நம்மிடத்தில் : இப்பிரபஞ்சத்தினை பிரம்மமாகிய தன்னிடத்தில்

தந்திரமாய் தோற்றுவித்தோம் : சாமர்த்தியமாக பொய்யானதை உண்மை போலத் தோற்றுவித்தோம்

சத்யம் அல என்றவரோ : ஆதலால் இவ்வுலகம் உண்மையல என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

இந்திர சாலக்காரனது வித்தையினால் உண்டாகிய பொருட்கள் பொய்யாய் இருப்பினும் உண்மையாய் தோற்றுவது போல, பொய்யாகிய இவ்வுலகினை சத்தியமான பிரஹ்மமாகிய தன்னிடத்தில் சாமர்த்தியமாக உண்மையல்லாத உலகை உண்மை போன்று உண்டாக்கினோம். ஆதலால் இச்சகம் உண்மையல என்று கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

இந்திரசாலக் காரனால் தோன்றிய இந்திர சாலம் பொய் மாயாவி (இந்திரசாலக் காரன்) உண்மை போல, பிரஹ்மத்தினது மாயா சக்தியினால் உற்பத்தியான இவ்வுலகம் பொய்; ஆத்மா உண்மையாம் என்பது கருத்து. "நம்மிடத்தில்" என்பது ஈங்கு பிரஹ்மத்தை குறிக்கின்றது. இந்திரசாலக்காரன், மாயாவி, மாயாசாலக் காரன், வித்தைக் காரன் எல்லாம் ஒரு பொருளை குறிக்கும் சொற்கள்.

திருஷ்டாந்தம்		தாஷ்டாந்தம்
மாயாவி	-	பிரம்மம்
மாயாவியின் வித்தை	-	பிரம்மத்தினது மாயா சக்தி
வித்தையினால் தோன்றிய பொருள்	-	உலகம்

"சத்தி சத்தனைத் தவிர வேறன்று காண் சத்தனாம் மாயாவி வித்தை காட்டிய விந்திர சாலம் பொய் வித்துவான் மெய் போல" என்பது கைவல்லிய நவநீதம்.

63. மித்தை யெனும் சகத்து நின்பால் விளங்குமோ என வினவச்
சுத்திதனிலே ரசதந்தோன்றுதல் போல் என்றவரோ

இதன் பதப்பொருள் :

மித்தையெனும் சகத்து : பொய்யென்று ஞானிகளும், சுருதியும் கூறும் இவ்வுலகம்

நின்பால் விளங்குமோ என வினவ : சத்தியமான பிரம்மத்தினிடத்து தோற்றுமோ என்று அர்ஜுனன் பகவானை கேட்க

சுத்திதனிலே ரசதம் : கிளிஞ்சலில் வெள்ளி

தோன்றுதல் போல் என்றவரோ : பிரதீதியாதல்போல் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

ஞானிகளும், சுருதியும் பொய்யென்று கூறும் இவ்வுலகம் சத்ரூபமான (உண்மையான இருப்புள்ள) பிரம்மத்தினிடத்து பொய்யாகத் தோற்றக் கூடுமோ என்று அர்ஜுனன் பகவானை கேட்க கிளிஞ்சலினிடத்து வெள்ளி தோன்றுதல் போல் தோன்றக்கூடும் என்றருளியப் பகவானோ (நீர்)

விளக்கம் :

வியாவகாரிக சத்தாகிய சுத்தியினிடத்து பிராதி பாசிக சத்தாகிய வெள்ளி தோன்றுதல் போல பாரமார்த்திக சத்தாகிய பிரம்மத்தினிடத்து வியாவகாரிக சத்தாகிய உலகம் தோன்றக் கூடும் என்றார்.

வியாவகாரிக சத்தான சுத்தி = உண்மை

பிராதிபாசிக சத்தான வெள்ளி = பொய்

வியாவகாரிக உண்மை (சத்து)

பாரமார்த்திக சத்தான பிரம்மம் = உண்மை

வியாவகாரிக சத்தான உலகம் = பொய்

பரமார்த்திக உண்மை (சத்து)

பிராதிபாசிக சத்து : தத்துவ ஞானமில்லாமல் பொய்யென்று சொல்லப்படுது பிராதிபாசிக சத்து கனவு, கயிற்றில் பாம்பு போன்றவை.

வியாவகாரிக சத்து : தத்துவ ஞானம் வந்த பின்பும் பொய்யென்று சொல்லப்படுவது வியாவகாரிக சத்து தேகாதி பிரபஞ்சம்

பரமார்த்திக சத்து : தத்துவ ஞானம் வந்த பின்பும் பொய்யாகாதது பரமார்த்திக சத்து சச்சிதானந்த சொரூபமாகிய பிரஹ்மம் பரமார்த்திக சத்தாம்.

"நின்பால்" என்பது இவ்விடத்து பிரஹ்மத்தைக் குறிக்கின்றது.

கிளிஞ்சல் = சுத்தி = காக்காசிப்பி

ரஜதம் = வெள்ளி

தோற்றுதல் = விளங்குதல் – பிரதீதியாதல்

64. அயல் வெள்ளி சுத்தியின் மேல் ஆரோபிதம் கூடும்
இயல் உள்ள சகமும் முன் வேறிருந்ததும் உண்டோ எனவே

இதன் பதப்பொருள் :

அயல் வெள்ளி : வியவகாரிக சத்தியமாக இருக்கின்ற வெள்ளிக்கு அன்னியமாக

சுத்தி மேல் : வியவகாரிக சத்தியமான சுத்தியினிடத்து

ஆரோபிதம் கூடும் : பொய்த்தோற்றம் தோன்றக்கூடும்.

இயல் உள்ள சகமும் : அது போல சத்தியத் தன்மை வாய்ந்த உலகமானது

முன் வேறிருந்ததும் உண்டோ : இந்த கற்பனையான உலகத்திற்கு முன்பு வேறு ஒன்று இருந்ததா?

எனவே : என்று அர்ஜுனன் வினவ

பொழிப்புரை :

வியவகாரிக சத்தியமாக இருக்கின்ற வெள்ளிக்கு அன்னியமாக வியவகாரிக சத்தியமான சுத்தியினிடத்து பொய்த் தோற்றம் தோன்றக் கூடும். இந்த கற்பனை தோற்றமான உலகிற்கு வேறாக சத்தியமான உலகம் ஒன்று இருந்ததா? என்று அர்ஜுனன் வினவ.

விளக்கம் :

உண்மையான சர்ப்பத்தை (பாம்பு) நாம் பார்த்திருந்தமை யால் கயிறை கண்ட விடத்து நமக்கு கயிறானது மயக்கத்தினால் பாம்பாக தோன்றுகிறது. உண்மையான பாம்பை பார்த்திராவிடில் கயிற்றினிடத்து பாம்பு தோன்றாது. சத்தியமான வெள்ளியை பார்த்திருந்தமையால் காக்கர் சிப்பி (சுத்தி) யை கண்டவிடத்து நமக்கு மயக்கத்தினால் வெள்ளி தோன்றுகிறது. உண்மையான வெள்ளியை பார்த்திராவிடில் சுத்தியினிடத்து வெள்ளி தோன்றாது. மெய்யான உலகத்தை அறிந்திருந்த ஞானத்தினால்தான் பொய்யான உலகம் தோன்றுகிறதோ? அதாவது பொய்யான உலகத்திற்கு வேறாக மெய்யான உலகம் ஒன்று இருந்ததா? என்பது அர்ஜுனனது ஐயம்.சத்ய வஸ்து ஐந்ய சம்ஸ்காரமே அத்தியாச காரணமாம் என்பது அர்ஜுனனது கேள்வி. அதாவது "கற்பனை பொருள் தோன்றுவதற்கு உண்மைப் பொருளின் நினைவுதான் காரணமோ" என்பது சந்தேகம்.

65. மனம் மயக்கம் பிடிக்கில் இல்லா வத்துவும் தோன்றிடும் அதுவோ
கனவில் விண்ணில் தான் பறக்கக் கண்டது போல் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

மனம் மயக்கம் பிடிக்கில் : மனமானது மோகத்தை அடையுமாயின்

இல்லாத வத்துவும் : மூன்று காலத்திலும் இல்லாத பொருளும்

தோன்றிடும் : கற்பனையினால் தோன்றக்கூடும்

அதுவோ : அது எது போலெனில்

கனவில் விண்ணில் தான் பறக்க : சொப்பன அவஸ்தையில் ஆகாயத்தில் தன்னை பறப்பதாக

கண்டது போல் என்றவரோ : பார்ப்பது போல் என்று அருளிச் செய்த பகவானோ (நீர்)

பொழிப்புரை :

உள்ளமானது மயக்கத்தை அடையுமாயின் மூன்று காலத்திலும் இல்லாத பொருளும் கற்பனையினால் தோன்றக் கூடும். அது எது போல் எனில் சொப்பன் அவஸ்தையில் ஆகாயத்தில் தன்னை பறப்பதாக பார்ப்பது போல் என்றருளிச் செய்த பகவானோ (நீர்)

விளக்கம் :

கற்பனைப் பொருள் தோன்றுவதற்கு காரணம் உண்மைப் பொருளின் அனுபவ அறிவின் நினைவு தான் காரணமோ என்ற அர்ஜுனனது சந்தேகத்திற்கு பகவான் உண்மைப் பொருளின் அனுபவ அறிவு இல்லாமலும் மயக்கத்தினால் கற்பனையான பொருள் தோன்றக்கூடும் என்றார்.

மயக்கம், பிராந்தி, மோகம், அறியாமை, திரிபு, விபரீதம் என்பன ஒரு பொருட் சொற்கள். "அவஸ்தை" என்றால் காலத்தை குறிக்கின்றது.

ஜாக்கிர அவஸ்தை – விழிப்பு காலம்

சொப்பன அவஸ்தை – கனவு காலம்

சுழுத்தி அவஸ்தை – தூக்க காலம்

சம்ஸ்காரம், வாசனை, ஸ்மரணை, நினைவு, அடங்கிய எண்ணங்கள், ஒரு பொருட் சொற்கள்.

66 . கனவு போல் பிரபஞ்சம் என்றீர் கண் விழித்தால் கனவு பொய்யாம்
வினவு சகம் தினமும் மெய்யாய் விளங்குவதென் சொல்லும் என.

இதன் பதப்பொருள் :

கனவு போல : சொப்பன உலகம் போல

பிரபஞ்சம் என்றீர் : சாக்கிரத்தில் க்ாண்கின்ற உலகமும் மித்தை என்று கூறினீர்.

கனவு கண் விழித்தால் பொய்யாம் : கனவில் காணப்படும் சொப்பன உலகமானது சாக்கிர அவஸ்தைக்கு வந்தவுடன் மித்தையாம்.

வினவு சகம் : நான் தங்களிடம் கேட்கின்ற விஷயம் இவ்வுலகமானது

தினமும் மெய்யா : நாள்தோறும் சத்தியமாக

விளங்குவதென் சொல்லுமென : தோற்றுவது யாது காரணம்? கூறியருளும் என்று அர்ஜுனன் கேட்க.

பொழிப்புரை :

சொப்பனவஸ்தையில் காண்கின்ற உலகம் எப்படி பொய்யோ அதே போல் சாக்கிர அவஸ்தையில் காண்கின்ற உலகம் பொய்யாம் என்று கூறியருளினீர். கனவில் காணப்படும் கனவு உலகமானது சாக்கிர அவஸ்தை வந்தவுடன் பொய்யாம். நான் தங்களிடம் கேட்கும் சந்தேகம். சாக்கிர அவஸ்தையில் தோன்றும் உலகமானது நாள்தோறும் உண்மையாகத் தோன்றுவதற்கு யாது காரணம்? கூறியருளுக என்று அர்ஜுனன் கேட்க.

விளக்கம் :

கனவு உலகம் தோன்றுவம் சூட்சும பூதத்தின் காரியம்

கனவு உலகம் காணப்படுவது சொப்பன அவஸ்தையில்

கனவு உலகம் பிராதி பாசிக சத்து

கனவு உலகம் பொய்யாவது சாக்கிர அவஸ்தைக்கு வந்தவுடன்

நனவு உலகம் தோன்றுவது தூல பூதத்தின் காரியம்

நனவு உலகம் தோன்றுவது சாக்கிர அவஸ்தையில்

நனவு உலகம் வியாவகாரிக சத்து

நனவு உலகம் பொய்யானது ஞானவிழிப்பு வந்தவுடன்

வியாவகாரிக சத்தாகிய தூல பிரபஞ்சத்திற்கு வந்தவுடன் பிராதி பாசிக சத்தாகிய சூட்சு பிரபஞ்சம் பொய்யாய்ப் போவது போல பரமார்த்திக சத்தாகிய ஞானவிழிப்பு நிலை (பிரம்ம நிலை) க்கு வந்ததும் வியாவகாரிய சத்தாகிய தூல பிரபஞ்சம் பொய்யாம். பிரம்ம நிலை = திட அபரோட்ச ஞானம் பிரபஞ்சம், உலகம், ஜகம், பார் முதலியன ஒரு பொருட் சொற்கள்.

கனவில் காணும் சொப்பன உலகம் தினந்தோறும் மாறி மாறி வருகிறது. சாக்கிரத்தில் காணப்படும் இவ்வுலகம் தினமும் மாறாமல் இருப்பதனால் அர்ஜுனன் "தினமும்" என்றான். அர்ஜுனன் பகவானிடம் சந்தேகத்துடன் கேட்ட கேள்வியை "வினவு" என்றார். இது ஐயுறு வினாவுடன் சேர்ந்தது. வினா மூன்று வகை. 1.அறிவினா 2.அறியா வினா 3.ஐயுறு வினா.

1. அறி வினா : தனக்குத் தெரிந்து கொண்டே கேட்பது

2. அறியா வினா : தான் தெரிந்து கொள்ளும் பொருட்டு கேட்பது

3. ஐயுறு வினா : தான் தெரிந்து கொண்டது சரியா தவறா என்ற சந்தேகத்துடன் கேட்பது.

67. மெய்யாக விளங்குவது மெய்ஞ்ஞானம் வரும் அளவும்
பொய்யாம் பின்கனவது போல் போதம் வரில் என்றவரோ

இதன் பதப்பொருள் :

மெய்ஞ்ஞானம் வரும் அளவும் : தத்துவ ஞானம் வருகின்ற வரைக்கும்

மெய்யாக விளங்குவது : இந்த உலகம் உண்மையாகத் தோற்றும்

போதம் வரில் பின் : திட அபரோட்ச பிரஹ்ம ஞானம் வந்த பின்னர் சாக்கிர உலகமானது

கனவது போல் பொய்யாம் : சொப்பன உலகம் போன்று மித்தையாகத் தோன்றும்

என்றவரோ : என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

தத்துவ ஞானம் வருகின்ற வரைக்கும் இவ்வுலகமானது உண்மையாகத் தோன்றும். திட அபரோட்ச பிரஹ்ம ஞானம் வந்த பின்பு சாக்கிர பிரபஞ்சமானது சொப்பன பிரபஞ்சம் போன்று சொப்பனத்திற்கு சமானமாக மித்தையாக தோன்றும் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

மெய்ஞ்ஞானம், தத்துவ ஞானம், ஆத்ம ஞானம், பிரஹ்ம ஞானம், திடஅபரோட்ச ஞானம், தன்னை அறிதல், வேதாந்தம், ஆத்ம போதம், உத்தர மீமாம்சை இவை அனைத்தும் ஒரு பொருட் சொற்கள்.

68. முன்பு கண்ட கனவு பொய்யாம் முழிசாக்ரம் போல என்றீர்,
பின்பு முத்தித் தசை யடைந்தும் பிரபஞ்சம் நிற்பது ஏதெனவே

இதன் பதப்பொருள் :

முழி சாக்ரம் : விழித்துக் கொண்டிருக்கிற வியவகாரிக சாக்கிர வஸ்தையில்

முன்பு கண்ட கனவு : பூர்வம் பார்த்த சொப்பனமும்

பொய்யாம் போல என்றீர் : மித்தையாவது போல ஞானவிழிப்பு வந்தவுடன் வியவகாரிக பிரபஞ்சமும் மித்தையாம் என்று கூறினீர்.

பின்பு முத்தி தசையடைந்தும் : மெய்ஞ்ஞானம் வந்த பின்னர் மோக்ஷ நிலையினை சேர்ந்திருந்தும்.

பிரபஞ்சம் நிற்பது : வியாவகாரிக உலகம் முன்பு போல தோன்றிக் கொண்டிருப்பது.

ஏதெனவே : யாது காரணம் என்று அர்ஜுனன் பகவானை வினவ.

பொழிப்புரை :

சொப்பனத்திலிருந்து விழித்துக் கொண்டு சாக்கிரவஸ்தைக்கு வந்த பின்னர் முன்பு சொப்பனத்தில் பார்த்த சொப்பன பிரபஞ்சம் மித்தையாக தோன்றுவதைப் போல மெய்ஞ்ஞான விழிப்பு வந்தவுடன் சாக்கராவஸ்தையில் காணப்படும் தூல பிரபஞ்சம் மித்தையாம் என்று கூறியருளினீர். மெய்ஞ்ஞானம் வந்து மோட்ச நிலை அடைந்த பின்னரும் வியாவகாரிக பிரபஞ்சம் முன்போல தோன்றிக் கொண்டிருப்பது யாது காரணம் என்று அர்ஜுனன் பகவானை வினவ.

விளக்கம் :

மனதானது சுழுத்தியில் இருதயத்திலும், சொப்பனத்தில் கண்டத்திலும் (கழுத்து) சாக்கிரத்தில் புருவ மத்தியிலும் இருந்து செயல்படும். புருவ மத்தியில் விளங்கும் மனது கண்டத்திற்கு சென்று பின்பு இருதயத்திற்கு செல்லும். அப்போது தூக்கம் வரும். விழிப்பு நிலைக்கு வரும்போது இருதயத்திலிருந்து கண்டத்திற்கு வந்து புருவ மத்திக்கு வரும். புருவமத்திற்கு வந்த நிலை சாக்கிரம். சொப்பனத்தி லிருந்து சாக்கிரத்திற்கு வந்ததால் "முன்பு கண்ட கனவு" என்றார். மனம் இருதயத்திற்கு சென்றவுடன் கழுத்து நேராக இராது. கழுத்து சாய்ந்து விடும். தியானத்தில் மனம் புருவமத்தியில் இருப்பதால் கழுத்து நேராய் இருக்கும். இதிலிருந்து தியானத்திருக்கிறோமோ, தூங்குகிறோமா என்று தெரிந்து கொள்ளலாம். சொப்பனத்திலிருந்து சாக்கிரத்திற்கு விழித்துக் கொண்டதை "முழி" என்றார்.

69 . தெரிந்தவர்க்குத் தோற்றுவது தெத்த படம் போல்வதல்லால்
பரந்த சகம் காரியத்தில் பயன்படாது என்றவரோ

இதன் பதப்பொருள் :

தெரிந்தவர்க்கு : பிரஹ்ம அபின்ன ஆத்ம ஞானிகளுக்கு
பரந்த சகம் : விரிந்துள்ள இந்த வியாவகாரிக உலகம்

தோற்றுவது : தோன்றிக் கொண்டிருப்பது

தெத்த படம் : தீயினால் எரிக்கப்பட்ட வஸ்திரம்

போல்வதல்லால் : உடுத்தல் முதலிய காரியங்களுக்கு பயன்படாமல் தோற்றம் மாத்திரமாய் இருப்பது போல

காரியத்தில் : ஜனன மரணத்தைக் கொடுத்தலாகிய காரியத்திலே

பயன்படாது என்றவரோ : அற்பமும் பிரயோஜனத்தைக் கொடுக்காது என்று கூறியருளிய பகவானோ (நீர்.)

பொழிப்புரை :

பிரஹ்ம அபின்ன ஆத்ம ஞானிகளுக்கு விரிந்துள்ள இந்த வியாவகாரிக உலகம் தோன்றிக் கொண்டிருப்பது தீயினால் எரிக்கப் பட்ட வஸ்திரம் உடுத்தல் முதலிய காரியங்களுக்கு பயன் படாமல் தோற்றம் மாத்திரமாய் இருப்பது போல ஜனன மரணத்தைக் கொடுத்தலாகிய காரியத்தினிடத்து அற்பமும் பிரயோஜனத்தைச் கொடுக்காது. அதாவது ஜனன மரணத்தை ஏற்படுத்தாது என்று கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

எது ஆத்மா எது அநாத்மா என்று விசாரித்து தெரிந்த பின்னர் பிரம்மமும் ஆத்மாவும் ஒன்று என்று அறிந்த ஞானியை "தெரிந்தவர்" என்றார். கடாகாயமும், மகாகாயமும் ஒன்றானது போல ஆத்மாவும் பிரம்மமும் ஒன்று என்று அறிந்த ஞானியை "தெரிந்தவர்" என்றார். அக்கினியினால் எரிக்கப் பட்ட வஸ்திரம் பார்வைக்கு வஸ்திரமாக தோன்றினாலும் உடுத்தவோ, போர்த்திக் கொள்ளவோ, மற்ற உபயோகத்திற்கு பயன் படாதது போல ஞானிக்கு உலகம் தோன்றிக் கொண்டிருந்தாலும் ஜனன மரணத்தை கொடுத்தலாதியாகிய காரியத்தில் பயன்படாது என்றார். கானல் நீரானது எப்படி தாகத்தைப் போக்காதோ அதைப்போல உலகத்தோற்றமும் தெரிந்தவர்க்கு (ஞானிக்கு) காமம், கர்மம், பிறப்பு, இறப்பு, போகம் முதலியவற்றை கொடுக்காது. உலக விஷயங்கள் மாயா ஜாலம் போன்று பயன்படாது. இதனை தக்த பட நியாயம் (கொளுத்திய வேட்டி திருஷ்டாந்தம்) என்பர்.

70. கன்ம வினை அஞ்ஞானம் கடந்தும் அதன் காரியமாம்
புன்மை யுறு மெய் உடனே போகாதது ஏதெனவே.

இதன் பதப்பொருள் :

கன்ம : அளவில்லாத பிறவி உண்டாவதற்கு காரணமாய் இருக்கின்ற சஞ்சித கர்மமும்

வினை : இம்மானிட சரீரத்தில் சம்பாதிக்கக் கூடிய நல்வினை தீவினைகளாகிய ஆகாமிய கர்மமும்

அஞ்ஞானமும் கடந்தும் : பிறவிக்கு மூலமான அஞ்ஞானமும், நீங்கியும்

அதன் காரியமாம் : அஞ்ஞானத்தின் காரியமாகிய

புன்மையுறு : இழிவு பொருந்திய

மெய் உடனே : தூல சரீரம் அப்பொழுதே

போகாதது ஏதெனவே : நீங்காதது யாது காரணம் என்று அர்ஜுனன் பகவானை வினவ.

பொழிப்புரை :

அளவில்லாத பிறவி உண்டாவதற்குக் காரணமாக இருக்கின்ற சஞ்சித கர்மமும், இம்மனித பிறவியில் சம்பாதித்துக் கொண்டிருக்கும் நல்வினை, தீவினைகளாகிய ஆகாய கர்மமும், பிறவிக்கு மூலமான அஞ்ஞானமும் பிரஹ்ம ஞானத்தினால் நீங்கியும் அஞ்ஞானத்தின் காரியமாகிய இழிவு பொருந்திய தூல சரீரம் ஞானம் வந்த அப்பொழுதே நீங்காதது யாது காரணம்? என்று அர்ஜுனன் பகவானை வினை.

விளக்கம் :

பிறவிக்குக் காரணம் அஞ்ஞானம், காமம், கர்மம் ஆகிய மூன்றுமாம். பிரஹ்ம ஞானத்தினால் அஞ்ஞானம் நீங்கிவிடும். பிரஹ்ம ஞானத்தினால் சஞ்சித கர்மங்கள் நாசமாகிவிடும். பிரஹ்ம ஞானமாகிய தன்னை யறிதலால் காமமும் இல்லாமல் போய்விடும். "பஞ்சினை ஊழித் தீ போல் பல ஜன்ம விவித வித்தாம் சஞ்சிதமெல்லாம் ஞான தழல் சுட்டு

வெண்ணீராக்கும்" என்பது கைவல்லிய நவநீதம் "அஞ்ஞானம்" என்பது தன்னை மறந்த அறியாமையேயாம். ஈங்கு "கர்மம்" என்பது சஞ்சித கர்மமாம். "காமம்" என்பது ஆசை. மரண தறுவாயில் யார் எதை நினைக்கிறார்களோ அதையே யடைவர் என்று பகவான் அருளியது போல் காமமும் பிறவியைக் கொடுக்க வல்லது. அஞ்ஞானம், காமம், கர்மம் இம்மூன்றில் ஒன்று இருக்குமாயின் பிறவி தொடரும். பிரஹ்ம ஞானத்தினால் தான் இம்மூன்றும் நீங்கும். தூல சரீரமானது கருத்தரித்தல், பிறத்தல், வளர்தல், பருத்தல், குறைதல், மாய்தல் என்று ஆறு வேறுபாடுடையது. தூல சரீரமானது தோல், மாமிசம், எலும்பு நரம்பு, ரத்தம், மூளை இவைகளால் ஆனது. எனவே இத்தூல உடம்பை "புன்மை யுறு மெய்" என்றார்.

71. வெட்ட விழும் மரம் பசந்து விளங்குவது போல் சிலகாலம்
நட்ட கன்மம் மாய்ந்தும் அங்கம் நடித்திடும் காண் என்றவரோ

இதன் பதப்பொருள் :

வெட்ட விழும் : கோடரி முதலியவற்றால் வெட்ட சாய்கின்ற

மரம் பசந்து : மரமானது காயாமல் பசுமையாக

சில காலம் விளங்குதல் போல் : கொஞ்ச காலம் தோற்றுதலுக்கு ஒப்ப

நட்ட கன்மம் மாய்ந்தும் : சஞ்சித கர்மங்கள் நாசமாகினும்

அங்கம் நடித்திடும் காண் : தூல சரீரம் சிலகாலம் பிராரப்தம் தீரும் வரை உலாவும்

என்றவரோ : என்று அருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

கோடரி முதலியவற்றால் வெட்ட சாய்கின்ற மரமானது கொஞ்ச காலம் பசுமையாக சிறிது நாட்கள் காயாமல் இருந்து தோன்றுவதைப் போல சஞ்சித கர்மங்கள் பிரஹ்ம ஞானத்தினால் நாசமாயினும் சில காலம் (பிராரப்தம் நாசமடையும் வரை) தூல சரீரம் சஞ்சரிக்கும் என்றருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

இச்சரீரம் வந்ததற்கு காரணம் சஞ்சித கர்மம். சஞ்சித கர்மத்தின் ஒரு பகுதியே பிராரப்த கர்மம். பிராரப்த கர்மத்தினால் லாபம், நஷ்டம், வெற்றி, தோல்வி, இன்ப, துன்பங்கள் உண்டாகின்றன. இவை அனைத்திற்கும் காரணம் சஞ்சித மாகையால் இதனை "நட்ட கன்மம்" என்றார். நட்ட கன்மம் என்றால் தோற்றுவித்த கர்மம் எனப்படும்.

72. சென்மம் போய் முத்தியினைச் சேர சிலர் இருக்கத்
தொன்மை ஆன்மா பலவோ சொரூபம் பகரும் என

இதன் பதப்பொருள் :

சிலர் சென்மம் போய் : சிறுபான்மையோர் பிறப்பிறப்புனின்றும் நீங்கி

முத்தியினைச் சேர : மோட்சத்தினை அடைய

இருக்க : ஏனையோர் எல்லாம் மோட்சமடையாமல் பந்தமுடையோராக இருப்பதற்கு ஏற்ப

தொன்மை ஆன்மா : அநாதியாயிருக்கின்ற ஆத்மா

பலவோ : நாநாவா?

சொரூபம் பகரும் என : ஆத்மாவினது உண்மை ஸ்வரூபத்தினை (நிலையை) கூறியருளும் என அர்ஜுனன் பகவானை வினவ.

பொழிப்புரை :

பிரஹ்ம ஞானிகளாகிய சில பேர் பிறப்பு இறப்பினின்றும் விடுபட்டு மோட்சத்தினை அடைய, ஏனைய அஞ்ஞானிகள் அனைவரும் மோட்சத்தினை யடையாமல் பந்தமுடையோராக இருப்பதனால் அநாதியாக உள்ள ஆத்மா பலவோ? ஆத்மாவினது உண்மை ஸ்வரூபத்தினை (நிலையை) கூறியருளும் என அர்ஜுனன் பகவானை வினவ

73. பிரம்மம் என்றும் ஈசன் என்றும் பெருகு பல சீவர் என்றும்,
உரை மயக்கம் அலது ஆன்மா ஒருவனே என்றவரோ

இதன் பதப்பொருள் :

பிரம்மம் என்றும் : தத்பத லட்சியார்த்தம் பிரம்மம் என்றும்

ஈசன் என்றும் : தத்பத வாச்சியார்த்தம் ஈசன் என்றும்

ஆன்மா : துவம் பத லட்சியார்த்தம் ஆன்மா என்றும்

பெருகு பல சீவர் என்றும் : துவம் பத வாச்சியார்த்தம் அளவற்ற நாநா ஜீவர்கள் என்றும்

உரை மயக்கம் அலது : கூறுவது மயக்கத்தினால் அல்லாமல்

ஒருவனே என்றவரோ : பிரம்மமானது ஏகம் (ஒன்று) தான் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

தத்பத லட்சியார்த்தம் "பிரம்மம்" என்றும், தத்பத வாச்சியார்த்தம் "ஈசன்" என்றும், துவம் பத லட்சியார்த்தம் "ஆன்மா" என்றும் துவம் பத வாச்சியார்த்தம் பலவிதமான "சீவர்கள்" என்றும் சொல்லப்படுவது மயக்கத்தினால் அல்லாமல் பிரம்மமானது ஒன்று தான் உள்ளது என்று கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

விருத்தி : பதத்திற்கு அர்த்தத்தோடு உள்ள சம்பந்தம் விருத்தி எனப்படும். கேட்கப்பட்ட குடம் என்னும் சொல் குடமாகிய பொருளின் நினைவை உண்டு பண்ணுவதால் நினைப்பூட்டுவதும், நினைப்பூட்டுவதால் குடமாகிய பொருள் நினைக்கப் படுவதுமாகிய இயல்பு "விருத்தி" எனப்படும்.

விருத்தி மூவகைப்படும் : 1.சக்தி விருத்தி 2.இலட்சணா விருத்தி 3.வீஞ்சனா விருத்தி

1. சக்தி விருத்தி : நெருப்பின் கண் கொளுத்தும் ஆற்றலும் நீரின் கண் நனைக்கும் ஆற்றலும் இருப்பது போன்று சொல்லின் கண் கேட்பவனுக்குப் பொருளின் உணர்வை உண்டு பண்ணும் ஆற்றல் உண்டு. இதனைச் சக்தி விருத்தி என்பர். சக்தி விருத்தியால் அறியப்படும் பொருள் சக்கியார்த்தம் என்றும் வாச்சியார்த்தம் என்றும் சொல்லப்படும்.

2. இலட்சணா விருத்தி : சக்தி விருத்தியினால் அறியப்பட்ட அர்த்தத்தின் வாயிலாக அதன் பரம்பரா சம்பந்தம் இலட்சணா விருத்தி எனப்படும். இலட்சணா விருத்தியினால் அறியப்படும் பொருள் இலக்கியார்த்தம் எனப்படும். (உதாரணம்) இருவர் நடந்து செல்ல அவர்களைப் பார்த்த ஒருவன் முன்னால் செல்பவன் நல்லவன் என்று சொல்ல பின்னால் செல்பவன் தீயவன் என்று மற்றொருவன் சொல்லாமல் தெரிந்து கொள்வது இலட்சியார்த்தம். முன்னால் செல்பவன் நல்லவன் என்ற சொல் சக்தி விருத்தி. பின்னால் செல்பவன் தீயவன் என்று சொல்லாமல் தெரிந்து கொள்வது இலட்சணா விருத்தி. இலட்சிணா விருத்தியினால் அறியப்பட்ட அவன் தீயவன் என்னும் பொருள் இலட்சியார்த்தம் எனப்படும். யாதொரு அர்த்தத்தின் ஞானம் பதத்தின் சக்தியினால் உண்டாகாமல் இலட்சணையால் உண்டாகுமோ அது பதத்தினது இலட்சியார்த்தம் எனப்படும். (மற்றொரு உதாரணம்) நீலம் சூடினாள் என்றான் ஒருவன். இங்கு நீலம் ஏன்னும் சொல்லிற்கு வாச்சியார்த்தம் நீல நிறமாகும். இதன் சம்பந்தம் உற்பலம் என்னும் புஷ்பத்தில் (மலர்) உள்ளது. இதனை இலட்சணை என்பர். இலட்சணையால் உணரப்படும் பொருள் உற்பலம் என்னும் நீல நிறமுடைய மலராம். நீலநிறமுடைய மலரானது இலட்சியார்த்தம் எனப்படும்.

3. வீஞ்சணா விருத்தி : குறிப்புப் பொருளால் உணர்த்தப்படுவது வீஞ்சணா விருத்தி எனப்படும். (உதாரணம்) இரு நண்பர்கள் ஒரு பாதையில் நடந்து செல்ல அந்தப் பாதையானது இரு பிரிவாக பிரிந்து (இரண்டாக) இருக்கும்போது தான் செல்ல வேண்டிய இடத்திற்கு பாதை (வழி) தெரியாத ஒருவன் மாற்று வழியில் செல்ல, வழி தெரிந்த மற்றொருவன் "ஊகும்" என்ற சொல்லால் அந்தப் பாதை நாம் செல்ல வேண்டிய இடத்திற்கானது அல்ல என்று தெரியப்படுத்தினான் இதனை வீஞ்சணா விருத்தி என்பர்.

இலட்சணை (இலக்கணை) மூவகைப்படும். 1.விட்ட இலக்கணை 2.விடாத லக்கணை 3.விட்டு விடாத லக்கணை.

விட்ட லக்கணை : ஒருவனை எங்கிருந்து வருகிறாய்? என்று வினவ கங்கையிலிருந்து வருகிறேன் என்று கூறினான். கங்கை பிரவாகத் (வெள்ளம்) திலிருந்து வருகிறான் என்று பொருள் கொள்ளல் முடியாது. கங்கை என்ற பதத்தை விட்டு அதிக அர்த்தம் கங்கைக் கரையிலுள்ள கிராமத்தை எடுத்துக் கொள்ளுதல் விட்ட லக்கணையாம்.

விடாத லக்கணை : சிவலை நின்றது, வெள்ளை போயிற்று என்று ஒருவன் கூறினான். சிவப்பு, வெண்மை என்பது நிறம் (குணம்). குணமானது தனியாக இருக்காது; செல்லாது; குணம் குனியின் மேல் ஏறித்தான் இருக்கும். அவன் சொன்ன நிறத்தையும் விடாமல் அதிக அர்த்தம் எடுத்துக் கொள்வது விடாத லக்கணை எனப்படும். "சிவலை நின்றது" என்ற வாக்கியத்தில் சிவப்பு நிறமுடைய குதிரை நிற்கின்றது என்னும், "வெள்ளை போயிற்று" என்ற வாக்கியத்தில் வெண்மை நிறமுடைய பசு போயிற்று என்றும் அர்த்தம் எடுத்துக் கொள்வது விடாத லக்கணை எனப்படும்.

விட்டு விடாத லக்கணை : இரு நண்பர்கள் காசிக்கு சென்று காசியிலுள்ள ராஜாவை அரண்மனையில் பார்த்து வந்தார்கள். சில வருடங்களுக்குப் பின்னர் காசிராஜா வேற்று ஓர் நாட்டு அரசனின் படையெடுப்பால் நாட்டை இழந்து ஆண்டியாய் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் சாமியார்களுடன் சேர்ந்து சாமியாராக இருந்தான். மூன்று வருடங்களுக்கு பின்பு காசிராஜனை பார்த்து வந்த இருவர்களும் சுவாமி தரிசனத்திற்கு மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு சென்றிருந்தனர். அவர்களில் ஒருவன் அந்த ஆண்டியைப் பார்த்து இவர் காசிராஜன் என்றான். மற்றொருவன் ராஜா எங்கே? சாமியார் எங்கே? காசி எங்கே? மதுரை எங்கே? ராஜா கோலம் என்ன? ஆண்டிக் கோலம் என்ன? இது எவ்வாறு பொருந்தும் என்றான். அதற்கு மற்றொருவன் ராஜா கோலத்தையும், ஆண்டிக் கோலத்தையும், காசியையும் மதுரையையும் அந்தக் காலத்தையும் இந்தக் காலத்தையும் விட்டு விட்டு இரண்டு இடத்திலும் இருக்கின்ற உடலை மாத்திரம் ஆராய்ந்து பார்

என்றான். அதற்கு அவன் ஆமாம் அந்த ராஜாவே இந்த ஆண்டி என்றான். விரோதமுடைய பாகத்தை விட்டு விரோதமில்லாத பாகத்தை எடுத்துக்கொள்வது விட்டு விடாத லக்கணை எனப்படும்.

"தத்துவமசி" என்ற மகாவாக்கியம் சாமவேதம் சாந்தோக்கிய உபநிஷத்தில் உத்தாலக முனிவர் சுவேதகேதுவுக்கு ஒன்பது முறை உபதேசித்து அருளியுள்ளார். "தத்துவமசி" என்பது அது நீ ஆனாய் என்று பொருளாம். "அது" என்ற பதத்தில் பிரம்மம், மாயை (பிரம்மத்தினது சக்தி) மாயையில் பிரதிபிம்பித்த பிரம்மத்தின் பிரதி பிம்பமாகிய ஈசுவரன். அது என்ற பதத்தில் பிரம்மம், மாயை, ஈசுவரன் ஆகிய மூன்றும் உள்ளது. "அது" என்ற பதத்தின் வாச்சியார்த்தம் ஈசுவரன் "அது" என்ற பதத்தின் இலட்சி யார்த்தம் பிரம்மம்.

"துவம்" என்ற பதத்தில் ஆன்மா, அவித்தை, அவித்தையினிடத்து பிரதி பிம்பித்துள்ள ஆன்மாவின் பிரதிபிம்பமாகிய ஜீவன்; அவித்தையில் பிரதி பிம்பித்துள்ள பிரதி பிம்பமமே ஜீவன் எனப்படும். "துவம்" என்ற பதத்தின் வாச்சியார்த்தம் ஜீவன்; "துவம்" என்ற பதத்தின் இலட்சியார்த்தம் ஆன்மா.

"அசி" என்ற கிரியா பதமானது (செயல் புரியும் வார்த்தை) தத்பத லட்சியார்த்தமாகிய பிரம்மமும் துவம் பத லட்சியார்த்தமாகிய ஆன்மாவும் ஏகம் (ஒன்று) என்ற ஐக்கியத் (சேர்தல்) தை குறிக்கின்றது.

தத்பதத்தின் வாச்சியார்த்தமாகிய ஈசுவரனும் துவம் பதத்தின் வாச்சியார்த்தமாகிய ஜீவனும் பேதமாவார்கள். (வேறுபாடு) இவ்விருவர் களுக்கும் ஐக்கியம் (சேர்தல்) கூடாது.

ஈசுவரன் :-

சர்வக்ஞத்துவம் (எல்லாவற்றையும் அறிபவன்)

பரோட்சம் (கண்ணுக்கு புலப்படாதவன்)

விபுத்துவம் (எங்கும் உள்ளவன்)

ஈசுத்துவம் (எல்லாவற்றையும் தன்வசப் படுத்துபவன்)

சுதந்திரத்துவம் (எதிலும் கட்டுப்படாதவன்)

புந்தமோட்ச அபாவத்துவம் (புந்தமோட்ச மற்றவன்)

அகண்டம் (எல்லைக்கு உட்படாதவன்)

ஜீவன் :-

அற்பஞ்ஞன் (அற்ப அறிவுடையவன்)

அபரோட்சம் (அனுமானத்தினால்) பிரத்தியட்சத்தினால் அறியப்படுபவன்

பரிச்சின்னத்துவம் (தேக அளவில் உள்ளவன்)

அநீசத்துவம் (எல்லாவற்றிற்கும் கட்டுப்பட்டுவன்)

கர்மாதீனத்துவம் (கர்ம வினைக்கு கட்டுப்பட்டவன்)

பந்த மோட்சத்துவம் (பந்த மோட்சமுடையவன்)

இன்னும் அநேக பேதங்கள் ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் உண்டு. எனவே ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் என்றும் ஐக்கியம் (சேர்தல்) என்பது கூடாது. தத்பத்தின் லட்சியார்த்தமாகிய பிரம்மமும், "துவம்" பதத்தின் லட்சியார்த்தமாகிய ஆன்மாவும் ஒன்று என்பதை "அசி" பதம் குறிக்கின்றது. ஆன்மா மூன்று அவஸ்தைகளுக்கும் சாட்சி பிரம்மம் சர்வத்திற்கும் சாட்சி. இங்ஙனம் இருக்க பகவான் அர்ஜுனனிடம் பிரம்மம் என்றும் ஈசன் என்றும், பலசீவர்கள் என்றும், ஆன்மா என்றும் சொல்வது ஒரே பொருள் என்றார். எப்போதும் பிரம்மமும் ஆன்மாவும் ஒன்று. ஈசுவரனும் ஜீவனும் மாயத் தோற்றம். எனவே "ஆன்மா" ஒருவனே என்றார்.

திருஷ்டாந்தம் (உதாரணம்) ஒரே ஆகாயத்தை மகா ஆகாயம் என்றும், மேக ஜல பிரதி பிம்ப ஆகாயம் என்றும், குடாகாயம் என்றும், குடஜல பிரதிபிம்ப ஆகாயம் என்றும் கூறுவர்.

மகாகாயம் = பிரம்மம்

மேக ஜல பிரதிபிம்ப ஆகாயம் = ஈசுவரன்

குட ஆகாயம் = ஆன்மா

குட ஜல பிரதிபிம்ப ஆகாயம் = ஜீவன்

ஈசுவரனும், ஜீவனும் பிரதிபிம்பமாகையால் சத்தியமல்ல. பிரம்மமும், ஆன்மாவும் உண்மையானதால் சத்தியமானதும், ஏகமானதுவாம். மகாகாயமும், குடாகாயமும் ஒன்று போல. ஏகாத்மா வாதமே (அத்வைதம்) உண்மை என்று பகவான் கூறியுள்ளார். பிரம்மம் ஒன்றே சத்தியம். பலவாக தெரிவது பிராந்தியினால் (மயக்கம்) என்றார். வேதாந்தத்தின் முடிவான கருத்து இருப்பது பிரம்மமே. நாம ரூபமாகி ஜக ஜீவ பரமாகிய (உலகம், ஜீவர்கள், ஈசுவரன்) அனைத்தும் மாயத் தோற்றமே என்பதாகும்.

74. ஏகம் தான் ஆன்மா எனும் வகையே மெய்யானால்
ஆகம் தோறும் பலவாய் அமர்ந்த தென்னோ சொல்லும் என.

இதன் பதப்பொருள் :

ஆன்மா ஏகம் தான் : ஆத்மா ஒன்று தான்

எனும் வகையே : எனக்கூறும் கொள்கையே

மெய் ஆனால் : உண்மையாய் இருக்குமாயின்

ஆகம் தோறும் : சரீரங்கள் தோறும்

பல ஆய் : நாநா (வேறு வேறாய்) வரக

அமர்ந்தது என்னோ : பொருந்தியது யாது காரணம்

சொல்லும் என : கூறியருளும் என்று அர்ஜுனன் பகவானை வினவ.

பொழிப்புரை :

ஒரே ஆத்மா தான் இருக்கின்றது எனக்கூறும் கொள்கையே உண்மையாய் இருக்குமாயின் ஒவ்வொரு உடம்பு தோறும் ஆன்மாக்கள் பலவாறாக பொருந்தியிருப் பதற்கு யாது காரணம்? என அர்ஜுனன் பகவானை வினவ.

விளக்கம் :

ஆத்மா "ஏகம்தான்" என்று அழுத்தமாக குறிப்பிட்டுள்ளார். அங்ஙனம் இருக்க நாநா ஆத்மா வாத காரணம் யாது என்பது அர்ஜுனனது ஐயம்.

75. பல கடத்தில் சலத்தூடு பானுவிம்பம் தோன்றுதல் போல்
தொலைவில் புத்தி தொறும் ஆன்மா தோன்றுதல் காண் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

பல கடத்தில் சலத்தூடு : நாநா குடங்களில் உள்ள நீரினிடத்து

பானு விம்பம் : ஒரே சூரியனது பிரதிபிம்பம்

தோன்றுதல் போல் : நாநா சூரியனாகக் காணப்படுவது போன்று

தொலைவில் : அளவற்ற

புத்தி தொறும் : அந்தக் கரணங்கள் தோறும்

ஆன்மா தோன்றுதல் : ஏகமான ஆத்மா பலவாக தோன்றுதல்

காண் என்றவரோ : கூடும் என்பதை தெரிந்து கொள் என்றருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

பலவாயுள்ள குடங்களில் உள்ள தண்ணீரிடத்து ஒரே சூரியனது பிரதிபிம்பங்களானது பல சூரியன்களாக தோன்றுவது போல, அளந்து அறியப்பட முடியாத அந்தக் கரணங்கள் தோறும் ஏகமான ஆத்மா பலவிதமான ஆத்மாக்களாக போல் தோன்றக் கூடும் என்றருளிய பகவானோ நீர்.

விளக்கம் :

ஒரே சூரியனானது எப்படி நீர் உள்ள அநேக குடங்களில் மற்றும் நீர் உள்ள இடங்களில் அநேக சூரியன்களாக தோன்றுவது போல ஒரே ஆன்மாவானது அளவற்ற அந்தக் கரணத்தில் அளவற்றதாக தோன்றுகிறது. இதனை பிம்பப் பிரதிபிம்ப (நிழல்) நியாயம் என்பர்.

<u>பிம்பம்</u>		<u>பிரதி பிம்பம்</u>
ஆத்மா	=	அவித்தையினிடத்து பிரதிபிம்பித்துள்ள ஆன்மாவின் பிரதி பிம்பம் (ஜீவன்)

சூரியன் = ஜலத்தில் பிரதிபிம்பித்துள்ள பிரதிபிம்ப சூரியன்

பிம்ப பிரதிபிம்ப நியாயத்தால் ஒரே பொருள் நாநாவாகத் தோன்றக் கூடும் என்பது கருத்து.

76\. ஆதித்தன் போல் ஆன்மா அளவில் புத்திதொறும் தோன்றில்
சாதிக்கும் முத்தி எவர் தமக்கு அதனைச் சாற்றும் என.

இதன் பதப்பொருள் :

ஆதித்தன் போல் : ஒரே சூரியன் பல குடத்திலுள்ள ஜலங்களில் பல சூரியனாக தோன்றுவது போல

ஆன்மா அளவில் : ஒரே ஆத்மாவானது அளவில்லாத

புத்தி தொறும் : அந்தக் கரணங்கள் தோறும்

தோன்றில் : பலவாகத் தோன்றுமாயின்

சாதிக்கும் முத்தி : சிரவணாதி சாதனங்களால் சித்திக்கின்ற மோக்ஷம்

எவர் தமக்கு : அந்தக் கரணத்துக்கா? ஆத்மாவுக்கா?

அதனை சாற்றும் என : இவ்விஷயத்தினை கூறியருளும் என அர்ஜுனன் வினவ.

பொழிப்புரை :

ஒரே சூரியனானது பல குடங்களில் உள்ள ஜலங்களில் பல சூரியனாக தோன்றுவது போல ஒரே ஆத்மாவும் அளவில்லாத அந்தக்கரணங்கள் தோறும் பலவாகத் தோன்றுமாயின் சிரவண, மனன, நித்தியபாசனங்களால் (கேட்டல், சிந்தித்தல், தெளிதல்) சித்திக்கின்ற மோட்சம் ஆத்மாவுக்கா? அந்தக்கரணத்துக்கா? அவ்விஷயத்தினை அடியேனது சந்தேகம் நீங்கும் பொருட்டு கூறியருளும் என அர்ஜுனன் வினவ.

விளக்கம் :

மோட்சமானது பிம்பத்திற்கா? அல்லது பிரதி பிம்பத்திற்கா? அதாவது ஆத்மாவுக்கா? அந்தக்கரணமாகிய புத்திக்கா? என்பது அர்ஜுனனது வினா.

77. பந்த முத்தி தானும் அந்தப் பரந்த புத்தி தனக்கேயாம்
அந்த பிம்பம் தனக்கிலை என அறிவு வரச் சொன்னவரோ.

இதன் பதப்பொருள் :

பந்த முத்தி : அஞ்ஞானமும் (கட்டு) மோட்சமும் (விடுதலை)

அந்த பரந்த புத்தி தனக்கேயாம் : முன்னர் கூறிய அளவற்ற விரிந்த அந்தக்கரணத்திற்கேயாம்.

அந்த பிம்பம் தனக்கிலை : பிம்ப ரூப ஆத்மாவிற்கு பந்த மோட்சங்கள் இல்லை

என்று அறிவு வரச்சொன்னவரோ : என்று விவேகம் உண்டாகும் வண்ணம் கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

அஞ்ஞானத்தினையும் (முடிச்சு) மோட்சமும் (விடுதலை) முன் சொல்லிய அளவற்ற விரிந்துள்ள ஆபாசத்தோடு கூடிய அந்தக் கரணத்திற்கேயாம். பிம்ப ரூபமான ஆத்மாவிற்கு பந்த மோட்சங்கள் கிடையாது என்ற விவேக ஞானம் உண்டாம் வண்ணம் கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

அந்தக்கரணத்திற்கே பந்தமும் மோட்சமும் தவிர ஆத்மாவுக்கு இல்லை என்பது கருத்து. இங்கு அந்தக்கரணம் என்றாலும் புத்தி என்றாலும், ஜீவன் என்றாலும் ஒரே பொருள்.

78. பரம் ஏகமாயும் அதில் பல சீவர் ஏதெனவே
ஒரு கடலில் பலகுமிழி உதிப்பது போல் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

பரம் ஏகமாயும் : பிரஹ்ம சைந்தியம் ஒன்றாக இருந்தும்

அதில் பல சீவர் : அப்பிரஹ்மத்தின் கண் நாநா சீவ சைதந்திரியங்கள்

ஏது எனவே : தோன்றுவதற்கு யாது காரணம் என்று அர்ஜுனன் வினவ

ஒரு கடலில் : ஏகமாயிருக்கின்ற சமுத்திரத்தில்

பல குமிழி உதிப்பது போல் : நாநா குமிழிகள் உண்டாதல் போன்று

என்றவரோ : உண்டாகக் கூடும் என்றவரோ.

பொழிப்புரை :

பிரஹ்ம சேதனம் ஒன்றாக இருந்தும் அதனிடத்து பலப்பல சீவ சேதனங்கள் தோன்றுவதற்கு யாது காரணம்? என்று அர்ஜுனன் வினவ. அதற்கு பகவான் ஒன்றாயுள்ள சமுத்திரத்தின் கண் பற்பல குமிழிகள் உண்டாதல் போல் ஒரே பிரஹ்மத்தில் பற்பல சீவர்கள் உண்டாகக் கூடும் என்று அருளிச் செய்த பகவானோ (நீர்)

விளக்கம் :

சமுத்திரத்தின்கண் வாயுவால் பற்பல குமிழிகள் தோன்றுவது போல அவித்தை, காமம், கர்மங்களினால் பல சீவர்கள் தோன்றுதல் கூடும்.

1. அவித்தை - ஆத்மாவாகிய தன்னுடைய நிஜ வடிவத்தை மறந்த மறதியாம்.

2. காமம் - ஆசை

3. கர்மம் - சஞ்சித கர்மங்கள் இவைகளில் ஒன்று இருப்பினும் பிறவி தொடரும்.

1. ஆசையிருந்தால் பிறவி உண்டு. யாரொருவர் மரணத்துறுவாயில் எதை நினைக்கிறார்களோ அதை அடைவர் என்பது பகவானின் வாக்கு. எனவே மரணத்தறுவாயில் ஏதாவது ஒரு ஆசையிருந்தால் அதையடைய பிறவி எடுத்தாக வேண்டும்.

2. நாம் சம்பாதித்து சேர்த்து வைத்திருக்கின்ற பாவ புண்ணியங் களாகிய சஞ்சித கர்மங்கள் தீரும் வரை பிறவி எடுத்தாக வேண்டும்.

3. அஞ்ஞானமானது நீங்காத வரை ஆசையும், சஞ்சித கர்மமும் போகாது. எனவே அஞ்ஞானமும் பிறவிக்குக் கரணம். சேதனம் = சைதந்நியம் = அறிவு = சித்து = உணர்வு = ஞானம்.

79. சீவனது தான் என்றும் சேரும் பிரமம் என்றும்
ஆவதுவோ பேர் இன்பம் ஆங்கது எனக்கு ஓதும் என.

இதன் பதப்பொருள் :

தான் சீவன் என்றும் : தனது சொரூபம் சீவ வடிவம் எனவும்

அது சேரும் : அந்த சீவன் வழிபட்டு அடையத் தகுந்தது

பிரமம் என்றும் : பிரம்ம சொரூபம் எனவும்

ஆவதுவோ பேரின்பம் : உண்டாவதுவோ பேரானந்தம் (பிரஹ்மானந்தம்)

அது எனக்கு ஓதும் என : அவ்விஷயத்தினை அடியேனுக்கு கூறியருளும் என்று அர்ஜுனன் வினவ.

பொழிப்புரை :

தனது வடிவம் சீவ வடிவம் எனவும், அந்த சீவன் வழிபாட்டினால் அடைவது பிரஹ்ம சொரூபம் எனவும், பிரஹ்ம சொரூபத்தை சேர்ந்தவுடன் உண்டாவதுவோ பிரம்மானந்தம் (பேரின்பம்) அவ்விஷயத்தினை அடியேனுக்குக் கூறியருளும் என அர்ஜுனன் பகவானை வினவ.

விளக்கம் :

சீவன் பக்தி செய்து அடைவது சாலோகம், சாமிப்பியம், சாரூப்பியம், சாயுச்யம் என்ற பதவி முத்திகளாம். அதைப் போல சீவர்கள் வழிபட்டு அடைவதுவோ பிரஹ்ம சொரூபம் அதுவோ பேரானந்தம் என்பது அர்ஜுனனது ஐயம். ஆண்டான் அடிமைத் திறமா மோட்சம்? என்பது கேள்வியாம்.

80. ஏகம் பிரம்மம் இரண்டில நீ வேறும் அவ
சோகம், உறும்பேதம் அறில்தோன்றும் இன்பம் என்றவரோ.

பிரம்மம் ஏகம் : பிரஹ்மம் ஒன்றே உள்ளது

இரண்டிலை : துவைதம் அல்ல (இரண்டு அல்ல)

நீ வேறு அல : நீயும் அந்த பிரஹ்மத்திற்கு அந்நியமாக அல்ல

சோகம் உறும் : துக்கம் வந்து பொருந்துதற்கு ஏதுவாகிய

பேதம் அறில் : பேதபுத்தி நீங்கிவிட்டால்

இன்பம் தோன்றும் : பிரஹ்மானந்தம் உண்டாம்

என்றவரோ : என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

பிரஹ்மம் ஒன்றே உள்ளது. இரண்டு பொருள் அல்ல. நீயும் அந்த பிரம்மத்திற்கு அந்நியமாக அல்ல. துக்கம் வந்து பொருந்துவதற்கு காரணமாகிய பேத புத்தி நீங்கிவிட்டால் பிரஹ்மானந்தம் வந்து உதிக்கும் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

ஏகம் ஏவ அத்வைதம் என்பது சுருதி

ஏகம் : ஏகம் எனும் சொல் ஐக்கியத்தைக் குறிக்கும்

ஏவ : ஏவ எனும் சொல் தெளிவை குறிக்கும்

அத்வைதம் : அத்வைதம் எனும் சொல் துவித விலக்காக பொருள்படும்.

பேதம் 5 : 1.ஈசுர ஜீவபேதம் 2.ஈசுர ஜடபேதம் 3.ஜீவ சடபேதம் 4.ஜீவ ஜீவபேதம் 5.ஜட ஜடபேதம்.

81. சீவ பேதம் போமோ சித்தொன்றாமோ எனவே
ஆவல் மனம் அறும் சுழுத்தி யவத்தையில் பார் என்றவரோ.

ஜீவ பேதம் போமோ : சீவர்களது வேற்றுமை நீங்குமோ?

சித்து ஒன்றாமோ எனவே : அப்படி வேற்றுமை நீங்கி சுயம்பிரகாச வஸ்து ஏகமாக விளங்குமோ? என அர்ஜுனன் வினவ.

ஆவல் மனம் அறும் : விஷய ஆசையினையுடைய அந்தக்கரணம் அடங்கியிருக்கும்

சுழுத்தியவஸ்தையில் பார் : தூக்கக் காலத்தின் கண் பேதம் நீங்கி சேத நம் ஏகமாக விளங்குவதை உணர்வாயாக

என்றவரோ : என்றருளிச் செய்த பகவானோ (நீர்)

பொழிப்புரை :

சீவர்களது வேற்றுமை நீங்குமோ; அப்படி வேற்றுமை நீங்கி சுயம்பிரகாச வஸ்து ஏகமாக விளங்குமோ? என அர்ஜுனன் வினவ. விஷய ஆசையினையுடைய அந்தக்கரணம் தூக்கக் காலத்தில் ஒடுங்கி பேதம், நீங்கி பிரம்மம் ஏகமாக விளங்குவதை உணர்வாயாக.

விளக்கம் :

ஒவ்வொரு சரீரம் தோறும் இருக்கின்ற சீவர்கள் வேற்றுமையாய் இருப்பினும் சீவர்கள் தோற்றத்திற்கு ஆதாரமாயிருக்கின்ற ஆத்மா ஒன்றாம் என்பது கருத்து. மனமானது பெரும்பாலும் உலக போக போக்கியங்களை நோக்கி சென்று கொண்டே இருப்பதால் அதனை "ஆவல் மனம்" என்றார்.

எல்லா மனிதர்களும் தூக்கத்தில் பிரஹ்ம சுகத்தை அனுபவிக்கின்றன. அந்த பிரஹ்மம் ஏகமாய் இருக்கின்றது. பிரஹ்மம் ஒன்றாய் இருப்பதால் ஒவ்வொருவருக்கும் தூக்கத்தில் அனுபவிக்கின்ற ஒன்றும் அறியாமல் சுகமாய் தூங்கினேன் என்ற அனுபவம் சமமாய் உண்டாவதால் பிரஹ்மானந்தம் ஒன்றேயாம். தூக்கத்தில் அனுபவிக்கின்ற ஆனந்தம் எல்லா ஜீவ ராசிகளுக்கும் (மனுடர், விலங்குகள், பறவைகள்) பொதுவாய் உள்ளது. சுழுத்திய வஸ்தையில் உள்ள ஆனந்தம் பிரஹ்மானந்தம். இவற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்வது எல்லா ஜீவராசிகளிடம் உள்ள ஆன்மா ஏகம் (ஒன்று) தான் என்ற தெளிவு. இதனையே பகவான் "சித்து ஒன்றாமோ" என்ற வினாவிற்கு "சுழுத்தியவஸ்தையில் பார்" என்றார்.

82. பேதமல இவ்வுலகம் பிரமமயம் என்றறிந்தும்
பூதமயமாய்த் தோற்றல் போகாதது ஏதெனவே

இதன் பதப்பொருள் :

இவ்வுலகம் : பிரத்தியட்சமாய் (கண்கூடாக) தோற்றுகின்ற இப்பிரபஞ்சம்

பேதம் அல : பிரம்மத்திற்கு அன்னியமன்று

பிரம்ம மயம் : பிரம்ம சொரூபமே

என்றறிந்தும் : என்று உணர்ந்தும்

பூதமயமாய் : பஞ்ச பூத வடிவமாய்

தோற்றல் : தோன்றிக் கொண்டிருக்கும் தோற்றமானது

போகாதது ஏதெனவே : நீங்காமல் யிருப்பது யாது காரணம் என அர்ஜுனன் வினவ.

பொழிப்புரை :

பிரத்தியட்சமாக தோன்றுகின்ற இவ்வுலகம் பிரம்மத் திற்கு அந்நியமன்று. பிரம்ம சொரூபமே என்று உணர்த்தும் பஞ்சபூத வடிவமாய் தோன்றிக் கொண்டிருக்கும் தோற்றம் நீங்காமல் இருப்பது யாது காரணம் என அர்ஜுனன் வினவ.

விளக்கம் :

மரத்தினால் செய்யப்பட்ட யானை உருவம் தூரத்தி லிருந்து பார்க்கும் போது மரம் தெரியாமல் யானையாகத் தெரிந்தது. அருகில் சென்று பார்க்கும்போது யானை தோன்றாமல் மரம் தெரிந்தது. தோன்றிய யானை எங்கே போயிற்று. மரத்திற்குள் ஒடுங்கியது. அதாவது பொய்த் தோற்றமான யானை மெய்யான மரத்தைப் பார்க்கும் போது யானை தோன்றவில்லை என்பது கருத்து. அது போல பிரமத்திலிருந்து உண்டான பஞ்சபூத மயமான உலகம் அறியாமையோடு இருக்கும்போது பிரம்மம் தெரியாமல் பஞ்சபூதமாக தெரிகிறது. ஆத்ம அநாத்ம விசாரணை செய்து பார்க்கும்போது பஞ்ச பூதம் தோன்றாமல் பிரம்மம் தெரியும்.

தோன்றிய பஞ்ச பூதம் எங்கே காணவில்லை என்றால் பிரம்மத்திற்குள் ஒடுங்கியது. அதாவது பொய்த்தோற்றமான உலகம் மெய்யான பிரம்மத்தை தரிசிக்கும்போது உலகம் தோன்றாமல் பிரம்மம் தோன்றும என்பது கருத்து.

83. கானலை நீர் என்றோடிக் கண்டவர்க்குத் தீர்ந்த பின்னும்
வானுலகி நீர் ஆகி வயங்குதல் போல் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

கானலை : பாலைவனத்தில் தோற்றும் உஷ்ணக்கதிர்களை

நீர் என்று ஓடி கண்டவர்க்கு : உண்மையான தண்ணீர் எனக்கருதி விரைந்து சென்று பார்த்துஇது கானல் தான். நீர் அல்ல என்று தெரிந்து கொண்டவர்க்கு

தீர்ந்த பின்னும் : சந்தேகம் விபரீதங்கள் நீங்கி நீர் அல்ல கானல் தான் என்று தெளிந்த பின்னரும்

வானுலகு : வெளியில் செல்லுகின்ற

நீராகி : ஆற்றுச் சலமாய்

வயங்குதல் போல் : தோன்றுவது ஒப்ப

என்றவரோ : என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

பாலை வனப் பூமியில் தோற்றும் வெப்பக் கதிர்களை உண்மையான நீர் எனக்கருதி விரைந்து சென்று பார்த்து இது கானல் தான் ஜலம் அன்று என்று சந்தேக விபரீதம் எல்லாம் நீங்கி பிரத்தியட்சமாக தெரிந்து கொண்டவர்க்கும், வெளியில் செல்கின்ற ஆற்றின் கண் உள்ள ஜலம் போல கானல் ஜலம் மீண்டும் தோன்றுவதைப் போல இவ்வுலகம் பிரமம் என்றறிந்த பின்னரும் பூதமயமாய்த் தோற்றக்கூடும் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

பாலைவனத்தில் தோன்றும் சூரிய கதிர்களின் வெப்ப கதிர்கள் உண்மையான நீர் போல் தோன்றும் அதனை "கானல் நீர்" என்பர்.

வான் – வெளியில்; உலவு – செல்லுகின்ற

வயங்குதல் – தோன்றுதல்; உஷ்ணம் – வெப்பம்

கானலைப் பார்த்து இது கானலா? அல்லது நீரா? என்பது சந்தேகம் கானலைப் பார்த்து இது நீரே என்பது விபரீதம். சந்தேக விபரீதம் இரண்டும் பிரத்தியட்சமாக பார்த்த பின்னர் நீங்கியும் கானல் தோன்றுதலால் "தீர்த்த பின்னர்" என்றார். இதனை "மரு மரீசிகா நியாயம்" (பாலைவனம்) சூரிய கிரணம் திருஷ்டாந்தம் என்பர். இதனை மிருக திருஷ்ணிகா நியாயம் (மான் ஜலம் கானல் திருஷ்டாந்தம்) என்பர்.

84. அறிவானும் நல்லறிவும் அறியப்படும் பொருளும்
பிறிவாய் மூன்றாய் இருத்தல் பேதம் அலவோ எனவே

இதன் பதப்பொருள் :

அறிவானும் : ஞாதாவும் (அந்தக்கரணமும்)

நல்லறிவும் : விஷய ஆவரணத்தை நீக்கும் சிறந்த ஞானமும்

அறியப்படும் பொருளும் : ஞானத்தினால் அறியப்பட்ட விஷயமும் (ஞேயமும்) என்று

மூன்றாய் பிறிவாய் : மூன்றுவிதமாக வேறுபாடுடையதாய்

இருத்தல் பேதமலவோ : இருப்பது வேற்றுமை அல்லவா

எனவே : என்று அர்ஜுனன் வினவ.

பொழிப்புரை :

அந்தக்கரணமும், அந்தக்கரணத்தினிடத்து உள்ள விஷயத்தின் மறைப்பை நீக்கும் சிறந்த ஞானமும், அந்த ஞானத்தினால் அறியப்பட்ட விஷயமும் (பொருளும்) என்று மூன்றுவிதமாக வேறுபாடுடையதாய் இருப்து வேறுபாடுடையது அல்லவா? என்று சந்தேகமுற்று பகவானை அர்ஜுனன் வினவ.

விளக்கம் :

அறிவான் = ஞாதா = அந்தக்கரணம்

அறிவு = ஞானம் = அந்தக்கரணத்தின் விருத்தி ரூப ஞானம்

அறியபடும் பொருள் = ஞேயம் = விருத்தி ஞானத்தினால் அறியப்பட்ட விஷயம் (பொருள்)

காண்பான் = காட்சி = காணப்படும் பொருள்

ஞாதா = ஞானம் = ஞேயம்

அறிவான் = அறிவு = அறியப்படும் பொருள்

இவைகளை திரிபுடி என்பர் பெரியோர்.

பிரம்மம் ஏகமாயின் (ஒன்றாயின்) திரிபடிகளாக (மூன்றுவித பேதமாக) தோன்றுகின்றனவே அது வேறுபாடு உடையதல்லவா? என்பது அர்ஜீனனது ஐயம்.

85. சொப்பனத்தில் தனித்து ஒருவன் தோற்றம் வேறில்லை அங்கே
கற்பனையாம் பொருள் அறிவு காண்பவன் போல் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

தனித்தொருவன் : தனியாக நித்திரை செய்கின்ற ஒரு புருஷனது

சொர்பனத்தில் வேறு : சொப்பன அவத்தையில் அப்புருஷனுக்கு அந்நியமாக

தோற்றம் இல்லை : தோற்றுகின்ற திரிபுடிகள் உண்மையாக இல்லை

அங்கு பொருள் அறிவு காண்பவன் : அங்ஙனமாயினும் அவ்விடத்து ஞேயம், ஞானம், ஞாதா எனும் திரிபுடி

கற்பனையாம் : பொய்யபாக தோற்றுவதாம்

போல என்றவரோ : அது போல சாட்சிக்கு (ஆன்மர்) அந்நியமாகத் தோன்றும் ஞாதா, ஞான, ஞேயம் பேதத்திரிபுடித் தோற்றம் கற்பனையாம் (மித்தையாம்) உண்மையல்ல என்றருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

தனியாக நித்திரை செய்கின்ற ஒரு புருஷனது சொப்பன அவஸ்தையில் அப்புருஷனுக்கு அந்நியமாக தோன்றுகின்ற திரிபுடிகள் உண்மையாக இல்லை உண்மையாக அவ்விடத்து (அப்புருஷனது சொப்பன வஸ்தையில்) திரிபுடிகள் இல்லையாயினும் ஞாதா, ஞான, ஞேயமாகிய திரிபுடிகள் தோற்றுகின்றன. அது போன்று

ஆன்மாவுக்கு அந்நியமாக தோன்றும் அறிவான் அறிவு, அறியப்படும் பொருள்களாகிய திரிபுடிகள் கற்பனையாம். உண்மையல்ல என்று கூறியருளிய பகவானோ நீர்.

விளக்கம் :

சொப்பனத்தில் திரிபுடியைக் கண்ட ஒரு புருடனுக்கு அந்நியமாக திரிபுடிகள் இருக்கின்றன. அப்புருஷன் எப்படி அந்த திரிபுடிகளுக்கு அந்நியமோ, அங்ஙனம் சாட்சிக்கு (ஆன்மா) விஷயமாகும் ஞாதா, ஞாந ஞேயமாகிய (திரிபுடி)கள் ஆன்மாவுக்கு அந்நியமாகவும் பொய்யாகவும் இருக்கின்றது. திரிபுடிகளை அறிகின்ற ஆன்மா சத்தியமாம்.

86. கற்பனையாம் பேதங்கள் காணாமல் போம் வகையை
விற்பநமாம் நான் அறிய விளம்பும் எனவே வணங்க

இதன் பதப்பொருள் :

கற்பனையாம் பேதங்கள் : பொய்யாகிய ஞாதா, ஞான, ஞேயமாகிய வேறுபாடுகள்

காணாமல் போம் வகையை : தோன்றாமல் நீங்கும் தன்மையினை

விற்பனமாம் நான் அறிய : அடியேன் தெளிவாக உணர்ந்து கொள்ளும் பொருட்டு

விளம்பு எனவே : கூறியருளும் என்று அர்ஜுனன்

வணங்க : விண்ணப்பித்து நமஸ்காரம் செய்ய

பொழிப்புரை :

பொய்யாகிய ஞாதா ஞாந ஞேயமாகிய வேறுபாடுகள் தோன்றாமல் நீங்கும் தன்மையினை அடியேன் தெளிவாக உணர்ந்து கொள்ளும் பொருட்டு கூறியருளும் என்று அர்ஜுனன் பகவானை வணங்கி விண்ணப்பம் செய்ய.

87. துரியமாம் யோகத்தால் தூய மனம் லயமானால்
அரிய மூவகை விகற்பம் அழியும் என்று சொன்னவரோ

இதன் பதப்பொருள் :

துரியமாம் யோகத்தால் : நான்காம் பூமியாகிய ஞாந நிஷ்டையின் பரிபக்குவத்தால்

தூய மனம் : பரிசுத்தமான பிரஹ்மாகாரமான மனோ விருத்தி

லயமானால் : பிரஹ்ம ஸ்வரூபமாக அடங்குமாயின்

அரிய மூவகை : நீங்குவதற்கு கடினமான மூன்று விதமான

விகற்பம் அழியும் : (ஞாதா, ஞான, ஞேய) பேதங்கள் நாசமாகும்

என்று சொன்னவரோ : என்று கூறியருளிய பகவானோ நீர்

பொழிப்புரை :

நான்காம் பூமியாகிய ஞாந நிஷ்டையின் பரிபக்குவத்தால் பரிசுத்தமான பிரஹ்மாகாரமான மனோ விருத்தி பிரஹ்ம ஸ்வரூபமாக அடங்குமாயின் நீங்குவதற்கு அருமையாகிய மூன்றுவிதமான (ஞாதா, ஞான, ஞேய) பேதங்கள் நாசமாகும் என்று கூறியருளிய பகவானோ நீர்.

விளக்கம் :

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரிய ஆதீதம் என்று ஐந்து அவஸ்தைகள் உள்ளன.

1. சாக்கிரம் : சொப்பன, சுழுத்திகளுக்கு வேறாய் இந்திரிய ஜன்னிய ஞானத்திற்கும், இந்திரிய ஜன்னிய ஞானத்தின் சம்ஸ்காரத்திற்கும் (வாசனை) ஆதார காலம் சாக்கிராவஸ்தை எனப்படும். அதாவது இந்திரியங்களால் உற்பத்தியாகும் ஞானத்திற்கும், இந்திரியங்களினால் உற்பத்தியாகிய அந்தக்கரணத்தின் கண் அடங்கியிருக்கும் வாசனையாகிய ஞானத்திற்கும் ஆதார காலம் சாக்கிராவஸ்தையாம். சாக்கிரம் – நனவு; ஜன்னிய – உற்பத்தியாகிய; வாசனை–மனதின்கண் அடங்கியுள்ள எண்ணங்கள்.

2. சொப்பனம் : இந்திரியத்தினால் உண்டாகாத விஷய கோசர அந்தக் கரணத்தின் அபரோட்ச விருத்தி யாதோ அதன் அவஸ்தையினை சொப்பனாவஸ்தை என்பர். இந்திரியத்தினால்

உண்டாகாததும் முன்பு அனுபவித்த விஷயத்தின் அனுபவ ஞானத்தினால் உண்ாகிற விருத்தியின் அவஸ்தையை சொப்பனம் என்பர். சொப்பனத்தில் ஞேயமும் (அறியப்படும் பொருளும்) ஞானமும் (அறிவும்) அந்தக் கரணத்தின் பரிணாமமாம்.

3. சுழுத்தி : சுககோசரமும் அவித்தியா கோசரமுமான சாட்சாத் அஞ்ஞானத்தின் பரிணாம ரூப விருத்தியின் அவத்தையை சீ சுழுத்தி என்பர். ஆன்ம சொரூப சுகத்தின் அனுபவமும், அஞ்ஞானத்தின் அனுபவமுமான அவத்தை சுழுத்தியவஸ்தையாம். சுழுத்தியில் அவித்தியா விருத்தியின்கண் ஆரூடமான சாட்சி அவித்தையையும் சொரூப சுகத்தையும் பிரகாசிப்பிக்கின்றது. சுழுத்தியில் சுக ஆகார அவித்தியாகார பரிணாமமாக எவ்வஞ்ஞானக் கூறுண்டோ? அவ்வஞ்ஞானக் கூற்றில் அப்புருடனுடைய அந்தக் கரணம் லீனமாகி நிற்கும். ஒன்றும் அறியாமல் சுகமாய் தூங்கினேன் என்பது அனுபவம். “அறியாமல்” என்பது அஞ்ஞானத்தையும் “சுகமாய் தூங்கினேன்” என்பது ஆன்ம சுகத்தையும் அறிவது ஆனந்தமய கோசமாம். அந்த ஆனந்தமய கோசத்தில் அந்தக்கரணம் ஒடுங்கியிருக்கும்.

சுகாகார = சுக வடிவ; அவித்தியாகார = அஞ்ஞான வடிவ;

ஆருடமான = சேர்ந்திருக்கின்ற; லீனம் – அடங்கியிருத்தல்

சாக்கிர சொப்பனத்தில் அந்தக்கரண விருத்தியுண்டு சுழுத்தியில் அஞ்ஞான விருத்தியுண்டு.

4. துரியம் : ஜாக்கிரவஸ்தையின் கண் தேகாதி பிரபஞ்ச மனோ வியாபாரமின்றியதாயும், பிரஹ்ம சொரூபத்தினிடத்து தைல தாரை போன்று மனத்தின் ஏகாக்கிர விருத்தி துரியமாம். அதாவது தேகம் முதல் உலக விவகாரம் அனைத்தும் மனத்தின் கண் தோன்றாமல் பிரஹ்ம சொரூபத்தினிடத்து மனம் நிலைத்திருத்தல் துரியம்.

துரியம் = நனவில் சுழுத்தி = சமாதி

5. துரியாதீதம் : பிரம்மத்தின் கண் அந்தக்கரணம் ஒன்றாய் விடுதல் துரியாதீதம் என்பர். தூங்கினவன் கையில் உள்ள பதார்த்தம் நழுவுவதைப் போல அந்தக்கரணம் பிரம்மத்தினிடத்தில் நன்றாய் சேர்தல் துரியாதீதமாகும். எங்ஙனம் நீரில் கரைக்கப்பட்ட லவனம் (உப்பு) நீரோடு கலந்து ஒன்றாவது போன்று அந்தக்கரணம் பிரம்மத்தினிடத்து ஒன்றாதல் துரியாதீதமாம்.

ஜீவன் முத்தர்கள் நால்வர் : 1. பிரஹ்ம வித்து, 2.வரன் 3.வரியான் 4. வரிட்டன். இந்நான்கு ஜீவன் முத்தர்கள் அடைவது மோட்சமாம். நால்வரின் ஜீவன் முத்தி சுகத்தில் ஏற்றத் தாழ்வு உண்டு. ஆனால் விதேக முத்தியில் வேறுபாடில்லை.

ஞானபூமி ஏழு : 1. சுபேட்சை, 2.விசாரணை, 3.தனுமாநசி, 4.சத்துவாபத்தி, 5.அசம்சத்தி, 6.பதார்த்த பாவனை, 7.துரியம்.

1.	சுபேட்சை	உலகம் சாக்கிரம் போல் தோன்றும்	அப்பியாசிகள்	
2.	விசாரணை			
3.	தநுமாநசி			
4.	சத்துவாபத்தி	உலகம் சொப்பனம் போல் தோன்றும்	பிரம்மவித்து	ஞானிகள்
5.	அசம்சத்தி	உலகம் சுழுத்தி போல் தோன்றாது	வரன்	
6.	பதார்த்தபாவனை	துரியம்	வரியான்	
7.	துரியம்	துரியாதீதம்	வரிட்டன்	

"பிரம்ம வித்து" கிரகஸ்தர்களாகவும் இருக்கக் கூடும். "வரன்" நிலையில் உள்ள ஞானிகள் பிச்சையெடுத்து உண்பவர். "வரியான்" நிலையில் உள்ள ஞானிகள் அந்நியர்கள் உணவு கொண்டு வந்து கொடுத்தால் உண்பவர்கள். "வரிட்டன்" தானாக உணவு உட்கொள்ளாமல் மற்றவர்களின் பிரயத்தனத்தினால் புசிக்க செய்து வாழ்பவர். இவர் எப்போதும் நிர்விகற்ப சமாதியில் இருப்பர்.

மூவகை பேதங்கள் நமக்கு நீங்க வேண்டுமேயானால், சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்த பாவனை, துரியம் என்ற ஞான பூமிகள் நான்கில் ஒன்றை அடைய வேண்டும்.

88. சிறந்திருக்கும் ஆன்மாவும் செகம் எல்லாம் நிறைந்திருந்தும்
மறைந்தெனக்குத் தோன்றாத வகை ஏது சொல்லும் என.

இதன் பதப்பொருள் :

சிறந்திருக்கும் : சச்சிதானந்தமாகிய சிறப்பு இயல்பு பொருந்தியிருக்கின்ற

ஆன்மா = ஆத்மா

செகமெல்லாம் : பிரபஞ்சம் முழுவதும்

நிறைந்திருந்தும் : பூரணமாய் இருந்தும்

எனக்கு மறைந்து : அடியேனுக்கு ஒழிந்து

தோன்றாத வகை : விளங்காத (புலப்படாது) விதம்

ஏது சொல்லும் என : கூறியருளும் என்று அர்ஜுனன் கேட்க.

பொழிப்புரை :

சச்சிதானந்தமாகிய சிறப்பு இயல்பு பொருந்தியிருக்கின்ற ஆன்மா பிரபஞ்சம் அனைத்தும் பூரணமாய் இருந்தும், அடியேனுக்கு மறைந்து விளங்காமைக்கு யாது காரணம்? கூறியருளுக என்று அர்ஜுனன் பகவானை வினவ.

விளக்கம் :

சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம்,பூரணம், ஏகம் இன்னும் அளவற்ற விதி குணங்கள் உள்ளதாயும், அசல, நிரஞ்சன, அமிர்தம், நிர்அவயவம் இன்னும் அளவற்ற விலக்குக் குணங்கள் உள்ளதாயும் இருக்கின்றமையால் “சிறந்திருக்கும்” என்றார். குறைவற்று எங்கும் பூரணமாய் ஆகாயம் போன்று இருப்பதால் “நிறைந்திருந்தும்” என்றார். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் இல்லை என்றாலும் விளங்கவில்லை எனலாம். எங்கும் நிறைந்திருந்தும் எனக்கு விளங்கவில்லையே அதற்குக் காரணம் யாது? என்பதை “தோன்றாத வகையேது” என்றார்.

89. சத்துத் சித்தா நந்தம் தாம் மூன்றும் அதனுடனே
ஒத்துற்று நாம வுருவஞ் சகமாகி

இதன் பதப்பொருள் :

சத்துசித்து : இருப்பும், விளக்கமும்

ஆனந்தம் மூன்றும் : ஆனந்தமுமாகிய ஆகிய மூன்றும் ஆன்ம சொரூபமாம்

அதனுடனே : அந்த மூன்றோடு

நாம உருவம் : பெயர், வடிவம் எனும் இரண்டும்

ஒத்துற்று : ஒன்றாகப் பொருந்தி

சகமாகி : பிரபஞ்சமாய் விளங்குகிறது

பொழிப்புரை :

இருப்பும், சொப்பிரகாச அறிவும், பிரியமும் ஆகிய மூன்று தன்மையும் ஆன்மாவின் சொரூபமாம். அந்த மூன்றோடு பெயரும், உருவமும் ஆகிய இரண்டும் ஒன்றாகப் பொருந்தி அநான்ம பொருளாகிய பிரபஞ்சமாகத் தோன்றிற்று.

விளக்கம் :

சக்தி சித்து ஆனந்தம் = அஸ்தி பாதி பிரியம் = இருப்பு அறிவு பிரியம் சத்து சித்து ஆனந்தம் எதிர் பதம் அநிர்த சடம் துக்கம்

அநிர்த = அநித்தியம்

சத்து 3 : 1.பிராதிபாசிக சத்து 2.வியாவகாரிக சத்து 3.பரமார்த்திக சத்து.

1. பிராதி பாசிக சத்து : தத்துவஞானமில்லாமல் பொய்யென்று சொல்லப்படுவது. உதாரணம் கனவு, கயிற்றரவு, கானல் நீர்.

2. வியாவகாரிக சத்து : தத்துவ ஞானம் வந்த பின்பு பொய்யாகத் தோன்றுவதுத் தேகாதி பிரபஞ்சம்.

3. பரமார்த்திக சத்து : தத்துவ ஞானம் வந்த பின்பும் பொய் என்று சொல்ல முடியாதது பரமார்த்திக சத்து அது பிரம்மம். அது மூன்று காலத்திலும் இருப்பது.

சித்து 4 : 1.சீவ சைதந்நியம் 2.ஈசுர சைதந்நியம் 3.ஆன்ம சைதந்நியம் 4. பிரஹ்ம சைதந்நியம்.

உதாரணம் :

1. சீவ சைதந்தியம் = குட ஜல பிரதிபிம்ப ஆகாயம்

2. ஈசுர சைதந்தியம் = மேக ஜல பிரதிபிம்ப ஆகாயம்

3. ஆன்ம சைதந்தியம் = குடாகாயம்

4. பிரம்ம சைதந்தியம் = மகாகாயம்

குடா காயமும், மஹாகாயமும் குடமாகிய உபாதியை நீக்கினால் ஒன்றாவது போல ஆன்மாவும் பிரம்மமும் ஒன்றாம்.

சைதந்நியம் = அறிவு = சேதனம் = சித்து

ஜடம் = அறிவற்றது

ஆனந்தம் 8 : 1.விஷயாநந்தம் 2.பிரஹ்மானந்தம் 3.வாசனானந்தம் 4.முக்கியாநந்தம் 5.நிஜாநந்தம் 6.ஆன்மாநந்தம் 7.அத்துவிதாநந்தம் 8.வித்தியாநந்தம்

1. விஷயாநந்தம் : ஸ்திரி (பெண்) முதலிய பஞ்ச விஷயங்களினால் உண்டாவது விஷயாநந்தம்.

2. பிரஹ்மாநந்தம் : சுழுத்தியவஸ்தையில் உண்டாவது

3. வாசனாநந்தம் : நித்திரையிலிருந்து எழுந்து நனவுக்கு வருமுன் இடைப்பட்ட காலத்தில் உண்டாகும் ஆனந்தம்.

4. முக்கியாநந்தம் : இன்ப, துன்பம், வெறுப்பு, விருப்பு இன்றி உபேட்சா (சமமான) புத்தியினிடத்து உண்டாவது முக்கியாநந்தம்.

5. நிஜாநந்தம் : தியானத்தின் பரிபாக அவஸ்தையாகிய சமாதியில் உண்டாவது நிஜாநந்தம்.

6. ஆன்மா நந்தம் : பிரிய வஸ்துக்களில் மிகப்பிரிய வஸ்துவாய் இருப்பதால் ஆன்மாநந்தம்.

7. அத்துவிதாநந்தம் : விரிந்திருக்கின்ற பிரபஞ்சம் அனைத்தும் மித்தையாம். ஆன்மாவே சத்தியமாம் என்னும் விவேக காலத்தில் உண்டாவது அத்துவிதா நந்தம்.

8. வித்தியாநந்தம் : அருமையான உபநிஷத்தில் உள்ளதாகிய மகாவாக்கியத்தினால் உற்பத்தியான அபரோட்ச ஞானத்தினால் உண்டாவது வித்தியாநந்தமாம்.

ஆன்மாவே பரமார்த்திக சத்து (இருப்பு)

ஆன்மா ஒன்றே சைதந்நியம் சித்து (அறிவு)

ஆன்மா ஒன்றே ஆனந்த சொரூபம் (பிரியம்)

ஆன்மா சத்து சித்து ஆனந்தம். ஒளி, உஷ்ணம், சிவப்பு என்று அக்கினியை மூன்றாகச் சொன்னாலும் அக்கினி ஒன்றேயாவது போல, சத்து சித்து ஆனந்தம் என்று மூன்றாகச் சொன்னாலும்

பிரம்மம் ஏக வஸ்து (ஒரே பொருள்) சைதந்நியம் நான்காக இருப்பினும் ஒரே சைதந்நியம். ஆனந்தம் எட்டாக இருப்பினும் ஆன்நத சொரூபம் ஒன்றேயாம். அதுவே பிரம்மம்.

90. இருக்கையினில் தோன்றாது இவை மூன்றும் பிரம்மம் என
மரிக்கில் வரும் பின் இரண்டும் மறிசகம் என்று உரைத்தவரோ

இதன் பதப்பொருள் :

இருக்கையினில் : சச்சிதானந்தமும் நாம ரூபமும் கலந்து இருக்கின்ற படியினால்

தோன்றாது : ஆத்மா விளங்காது

இவை மூன்றும் பிரம்மம் என : சத்து சித்து ஆனந்தமான இவை மூன்றும் பிரம்ம ஸ்வரூபம் என்றும்

பின் இரண்டும் : பின்னர் கூறப்பட்ட நாம ரூபமாகிய இரண்டும் அநாத்மா பொருள் என்றும்

மறிசகம் என்றும் : நாசமாகின்ற பிரபஞ்சம் என்றும்

மரிக்கில் : விசாரம் செய்து பகுத்துப் பார்க்கில்

வரும் என்றுரைத்தவரோ : சச்சிதானந்த ஸ்வரூபமாகிய ஆத்மா தோற்றும் என்று கூறியருளிய பகவானோ நீர்

பொழிப்புரை :

ஆத்மா அநாத்மாவாகிய இரண்டும் கலந்து இருக்கின்றமை யினால் ஆத்மா விளங்காது. சத்து சித்து ஆனந்தமான இவை மூன்றும் நித்தியமாகிய ஆத்மஸ்வரூபம் என்றும், பின்னர் சொல்லப் பட்ட நாமரூபமாகிய பிரபஞ்சம் நாசமாகின்ற அநாத்மப் பொருள் என்றும், விசாரம் செய்து பகுத்துப் பார்க்கில் சச்சிதானந்த ஸ்வரூபமாகிய ஆத்மா தோன்றும் என்று கூறியருளிய பகவானோ நீர்

விளக்கம் :

காய்ச்சிய பாலில் நெய்யானது கலந்திருப்பது போன்று ஆத்மாவும் அநாத்மாவும் கலந்திருக்கின்றது. பாலிலிருந்து கடைந்து வெண்ணெய் எடுப்பது போன்று அநாத்மாவிடமிருந்து ஆத்மாவை விசாரம் செய்து பிரித்து பார்க்கில் ஆத்மாவானது தோற்றும் பஞ்ச கோசங்களையும், சூன்யத்தையும் அநாத்மா என்றும்

இவைகளை அறிவது யாதோ. அந்தச் சைதந்நியம் ஆத்மா என்றும் வேறு பிரித்து அறிவதே ஆத்ம அநாத்ம விசாரணையாம். இந்த விசாரணையால் உண்டாவது ஆத்ம ஞானம்.

91. அறிந்து கொள் ஞானத்தாலே ஆந்மாவை என்றுரைத்தீர்
சிறந்தொளிரும் ஆத்மாவும் திரிசியமாமோ எனவே

இதன் பதப்பொருள் :

ஞானத்தால் : தத்துவ ஞானத்தால்

ஆத்மாவை அறிந்து கொள் : ஆத்மாவினை உணர்ந்து கொள்வாயாக

என்றுரைத்தீர் : என்று முன்னர் கூறியருளினீர்

சிறந்து ஒளிரும் : சிறப்புடன் பிரகாசிக்கின்ற

ஆத்மாவும் திருசியமாமோ : ஆத்மாவும் அறியப்படும் உலகத்தைப் போன்று அறியப்படும் பொருளோ

எனவே : என்று அர்ஜுனன் பகவானை வின்வ.

பொழிப்புரை :

அபரோட்ச ஞானத்தினால் ஆத்மாவை உணர்ந்து கொள் என்று முன்னர் கூறியருளினீர். சச்சிதானந்தமாகிய அளவற்ற சிறப்புடன் பிரகாசிக்கின்ற பிரத்தியகபின்ன பரமான்மாவானது அறியப்படும் பொருளாகிய உலகத்தைப் போன்று அறியப்படும் பொருளா என்று பகவான்ன அர்ஜுனன் வினவ

திரிசியப்பொருளாகிய தேகாதி பிரபஞ்சத்தைப் போன்று ஆத்மாவும் திரிசியப் பொருளா? என்பது அர்ஜுனனது ஐயம். தத்துவ ஞானம் = ஆத்ம ஞானம் = அபரோட்ச ஞானம் = தன்னையறிதல்

திருக்கு = காண்பவன்

திரிசியம் = காணப்படும் பொருள்

92. முந்திய ஞானத்தாலே முதிரும் அஞ்ஞானம் துரக்கில்
சிந்தையில் ஆத்மாச் சுயமாய்த் திகழும் என்று சொன்னவரோ.

இதன் பதப்பொருள் :

முந்திய ஞானத்தால் = முதன்மை வாய்ந்த ஆன்ம ஞானத்தினால்

முதிரும் அஞ்ஞானம் : கடினமான அஞ்ஞானத்தினை

துரக்கில் : நீ நிவிர்த்திப்பாயின்

சிந்தையில் : உனது சித்தத்தின் கண்

ஆன்மாச் சுயமாய் : ஆத்மா தானாகவே உனது ஸ்வரூபமாக

திகழும் என்று : விளங்கும் என்று

சொன்னவரோ : கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

முதன்மையும் சிறப்பு பொருந்தியதுமாகிய ஆத்மா அபரோட்ச ஞானத்தினால் வலிமையுள்ள அஞ்ஞானத்தை நீ நிவிர்த்திப்பாயாயின் உனது அந்தக்கரணத்தின் கண் ஆத்மா தானாகவே உனது ஸ்வரூபமாக விளங்கும் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

ஆத்மாவினை மறைத்திருக்கின்ற அஞ்ஞானத்தினை ஆத்ம ஞானத்தினால் நிவிர்த்தி செய்யின் ஆன்மா தான் தானாக விளங்கும். எப்படி குடத்தினால் மறைக்கப்பட்டுள்ள தீபமானது குடத்தை விலக்கியதும் எப்படி பிரகாசிக்குமோ அங்ஙனம் அஞ்ஞானமானது ஆன்மாவை விட்டு நீங்கியதும் ஆன்மா சுயமாய் பிரகாசிக்கும். குடத்தை நீக்குவதே நமது செயல் அல்லாமல் தீபத்தைப் பிரகாசிப்பது நமது காரியமல்ல. அது போன்று ஆத்ம ஞானமானது அஞ்ஞானத்தை நிவிர்த்தி செய்யுமே தவிர ஆத்மாவை அறியாது. ஆத்ம ஞானத்தினால் அஞ்ஞானத்தைப் போக்குவதே தன்னையறிதல் என்பதாம்.

ரஜோ தமோ குணத்தோடு உள்ள அந்தக்கரணம் மனம் எனப்படும். சத்துவ குணம் மாத்திரம் உள்ள அந்தக் கரணத்தை அருள் என்பர் பெரியோர். சத்துவகுணம் மாத்திரம் உடைய சாதுக்கள் அருளாளர்கள் சத்துவ குணத்தோடு தத்துவ ஞானமும் இருக்குமாயின் அந்தக்கரணத்தில் ஆன்மா சுயமாய் திகழும். நீரில் கரைந்துள்ள உப்பு போல் ஆன்மாவில் அந்தக்கரணம் லீனமாகும் (ஒடுங்கும்)

93. இனியமுத்தி சுகம் இருப்பது எப்படி என்றே வினவ
அனுபவத்தில் அறி விடயாநந்தம் போல் என்றவரோ

இதன் பதப்பொருள் :

இனிய முத்தி சுகம் : எல்லோரும் விரும்பும் மோட்சாநந்தம்

இருப்பது எப்படி என்றே வினவ : எவ்வாறு இருக்கும் என அர்ஜுனன் வினவ

விடயாநந்தம் போல : விஷய சுகத்தை அனுபவித்து அறிவது போன்று

அநுபவத்து அறி என்றவரோ : மோட்சாநந்தத்தையும் அனுபவத்தினால் அறிந்து கொள்வாயாக என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

யாவரும் விரும்பும் மோட்சாநந்தம் எவ்வாறு இருக்கும் என்று அர்ஜுனன் பகவானைக் கேட்க விஷய சுகத்தினை அனுபவித்து அறிவது போன்று மோட்சாநந்தத்தையும் அனுபவித்து அறிந்து கொள் என்று கூறியருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

மோட்சம் என்றால் சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்த பிராப்தியாம். அதாவது நிரதிசய ஆநந்தமாம். அதாவது எல்லையற்ற பரிபூரண ஆநந்தமாம். ஒப்பற்ற சுகம். குறைவற்ற சுகம். பஞ்ச இந்திரியங்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி) மூலமாக பஞ்ச விஷயங்களை (பரிசம், ரசம், ரூபம், கந்தம், சப்தம்) அனுபவித்து அறியக் கூடிய ஆனந்தம் விஷயானந்தமாம். இந்த பஞ்ச விஷயங்களை அந்தந்த இந்திரியங்களினால் அந்தந்த விஷயங்களை அனுபவித்து அறிவது போன்று மோட்சா நந்தாந்தத்தையும் அனுபவித்து அறிந்துக்கொள் என்றார். வெல்லம் இனிக்கிறது என்று ஒருவன் கூறுவனாகின் அதைக் கண்ணால் பார்த்து எப்படி அறிந்து கொள்ள முடியாதோ நாக்கினால் சுவைத்துத் தான் அறிந்து கொள்ள முடியுமோ அங்ஙனம் மோட்சா நந்தத்தையும் அனுபவித்துத் தான் அறிந்து கொள்ள முடியும். வினயாநந்தத்தையே அனுபவித்து அறிந்து கொள்ள வேண்டியிருக்கும் போது மோட்சா நந்தத்தை எங்ஙனம் அனுபவிக்காமல் அறிய முடியும். நான் கர்த்தா நான் போக்தா என்ற இரண்டு போக்துருத்துவ கர்த்திருத்துவ வேற்றுத் தன்மைகளை விட்டு தனது யதார்த்த (ஆன்ம) சொரூபத்தில் மனம் நிலைத்திருத்தல் மோட்சா நந்தமாம்.

94. மனலயம் வந்தவர் அலது மற்றிலரோ முத்தர் எனச்
சநகனைப் போல் சீவன் முத்தர் தாமும் உளர் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

மனலயம் : சமாதியினால் மனோவிருத்தி அடக்கம்

வந்தவர் அலது : கைவரப்பெற்று மோட்சமடைந்தவர்கள் அல்லாமல்

மற்றுமுத்தர் இலரோ : மனோவிருத்தி அடங்கப் பெறாத பேர்கள் மோட்சம் அடைவது இல்லையா?

என : என அர்ஜுனன் வினவ

சநகனைப் போல் : ஜனக மகாராஜனைப் போல

சீவன் முத்தரும் : மனோலயம் அடையாத ஜீவன் முத்தர்களும்

உளர் என்றவரோ : இருக்கின்றனர் என்றருளிச் செய்த பகவானோ (நீர்)

பொழிப்புரை :

தியானத்தின் பரிபக்குவத்தினால் மனோவிருத்தி அடக்கம் கைவரப் பெற்று மோட்ச மடைந்தவர்கள் அல்லாமல் மனோ விருத்தி அடங்கப் பெறாத பேர்கள் மோட்சம் அடைவது இல்லையா? என்று அர்ஜுனன் வினவ, ஜனக மகாராஜனைப் போல மனோலயம் அடையாத ஜீவன் முத்தர்களும் இருக்கின்றனர் என்றருளிச் செய்த பகவானோ (நீர்)

விளக்கம் :

ஆத்ம ஞானமும் வைராக்கியமும் இருந்தால் தான் மோட்சம் கிட்டும். பற்றற்ற நிலையாகிய வைராக்கியம் இல்லாமல் தத்துவ ஞானம் மட்டும் இருந்தால் திட அபரோட்ச ஞானம் உண்டாகாது திட அபரோட்ச ஞானம் இல்லையாயின் முத்தி கிட்டாது. மனோலயமானது சகுணத்தியானத்தினாலும் அல்லது நிர்குணத் தியானத்திலும் அடையலாம். இந்த மனோலயத் (மன ஒடுக்கம்) தினால் உண்டாவது ஆனந்தம். மனோலயம் எப்போது இல்லையோ அப்போது துக்கம்

உண்டாம். ஞானமோ அங்ஙனம் இல்லாமல் எப்போதும் ஆனந்தம், மனநிறைவு, திருப்தி, சாந்தம், விடுதலை இவைகளைக் கொடுக்கக் கூடியது. மனோலயமானது ஜீவன் முத்தர்களிடத்தில் இருக்கவும் கூடும். இல்லாமல் இருக்கவும் கூடும். ஆனால் ஜீவன் முத்தரிடத்து தத்துவ ஞானம் இருக்க வேண்டும். மனோலயம் அல்லாத ஜீவன் முத்தர்கள் பிரம்ம வித்தாம். பிரம்ம வித்தாகிய ஜீவன் முத்தர்கள் திருஷ்ட துக்கம் அனுபவிக்கக் கூடும். அத்துக்கமானது ஞானத்திற்கு பங்கம் இல்லை.

95. சீவன் முத்தி அடைந்தோர்கள் செயலும் அவர் தம் குணமும்,
நாஉரைக்கும் வாசகமும் நானறியச் சொல்லும் என

இதன் பதப்பொருள் :

சீவன் முத்தி : ஜீவன் முத்தியினை

அடைந்தோர்கள் செயலும் : அடைந்தவர்களது தொழிலும்

அவர் குணமும் : அவர்களது பண்பும்

நா உரைக்கும் : அவர்களது நாக்கு (வாக்கு இந்திரியம்) சொல்லுகின்ற

வாசகமும் : வசனமும்

நானறிய : அடியேன் உணர்ந்து கொள்ளும்படி

சொல்லும் என : கூறியருளும் என்று அர்ஜுனன் வினவ

பொழிப்புரை :

ஜீவன் முத்தியினை அடைந்தவர்களினது தொழிலும், அவர்களது பண்பும் அவர்களது வாக்கிந்திரியமாகிய நாக்கு சொல்லுகின்ற வசனங்களும் அடியேன் உணர்ந்து கொள்ளும்படி கூறியருளும் என்று அர்ஜுனன் பகவானை வினவ.

விளக்கம் :

ஞானிகளது திரிகரணச் செயல்கள் எங்ஙனம்? என்பது அர்ஜுனனது கேள்வி. மனம், வாக்கு, காயம் இவைகள் திரிகரணங்கள் மனத்தினது செயல்பாடுகளை குணமாகவும் வாக்குனுடைய செயல்பாடுகிளை நாவுரைக்கும் வாசகமாகவும் காயத்தினது செயல் பாடுகளை செயலாகவும் குறிப்பிட்டுள்ளார்.

96. வரும் கருவு பிறப்பினொடு வளர்தல் பருத்தல் குறைதல்
ஒருங்கலும் மெய்க்கென்று அதனை ஒறுத்திருப்பார் என்றவரோ

இதன் பதப்பொருள் :

வரும் : சஞ்சித கர்மத்தினால் வந்ததும்

கருவு : தாயின் கருப்பத்தில் இருத்தலும்

பிறப்பினொடு வளர்தல் : ஜனித்தலொடு, விருத்தியாததும்

பருத்தல் : பெரியதாகுதலும்

குறைதல் : தேய்தல் (சுருங்குதல்)

ஒருங்கலும் : நாசமடைதுமாகிய ஷட்பாவ விகாரமும் (ஆறு இருப்பு வேறுபாடுகளும்)

மெய்க்கென்று : தூல சரீரத்திற்கு எனக்கருதி

அதனை : ஆறுவிதமான வேறுபாடுகளை

ஒறுத்திருப்பார் : ஜீவன் முத்தர்கள் ஆத்மாவாகிய தமக்கு இல்லை என நீக்கியிருப்பார்.

என்றவரோ : என்று அருளிச் செய்த பகவானோ (நீர்)

பொழிப்புரை :

சஞ்சித கர்மத்தினால் வந்ததும் தாயின் கர்ப்பத்தில் இருத்தலும் ஜனித்தலொடு விருத்தியாதலும் பெரிதாதலும் சுருங்குதலும் நாசமடைதலும் ஆகிய ஷட்பாவ (ஆறு இருப்பு) விகாரமும் (வேறுபாடுகளும்) தூல சரீரதத்திற்கு எனக்கருதி ஜீவன் முத்தர்கள் இந்த ஆறுவிதமான வேறுபாடுகள் ஆன்மாவாகிய தமக்கு இல்லை என நீக்கி யிருப்பர் என்று அனுக்கிரகித்தப் பகவானோ (நீர்)

விளக்கம் :

தோல், மாமிசம், ரத்தம், நரம்பு, எலும்பு, மூளை என்ற ஆறு தத்துவத்தை உடையது தூல சரீரம். இந்த தூல சரீரம் கருப்பையில் இருத்தல், பிறத்தல், வளர்தல், பருத்தல், குறைதல், நாசமடைதல் என்ற ஆறுவிதமான வேறுபாடுகளை

யுடையதுமாம். இந்த ஆறு வகை தத்துவமும், ஆறு வகை வேறுபாடுகளையும் உடையதாகவும் தூல சரீரம் இருக்கின்றது. தூல சரீரத்தை அறிகின்றவன் தூல சரீரத்திற்கு வேறாக இருந்து அறிகின்ற படியினால் இந்த தூல சரீரம் நானல்ல இவைகளை அறிகின்ற சொப்பிரகாச ஆத்மாவே நான் என்று தூல சரீரத்தில் நான் என்கிற அபிமானத்தை நீக்கி இருப்பார்கள். ஜீவன் முத்தர்கள் தேகாத்ம புத்தியை நீக்கி சச்சிதானந்தமாகிய ஆத்மாவே நான் என்று இருப்பர் ஜீவன் முத்தர் என்பது கருத்து.

ஜீவன் முத்தர்களை ஞானி என்றும், அதிவர்ணாச்சிரமி என்றும், பிராஹ்மணன் என்றும், திடப்பிரஞ்ஞன் என்றும். பகவத் பத்தன் என்றும் சாஸ்திரங்களில் நாமம் சொல்லப்படும். சொப்பிரகாசம் = சுயம்பிரகாசம்.

97. பார்ப்பதுவும் கேட்பதுவும் பகர்வதுவும் செல்வதுவும்
ஏற்பதுவும் கரண தன்மம் எனத் துணிவார் என்றவரோ.

இதன் பதப்பொருள் :

பார்ப்பதுவும் : சட்சு இந்திரியத்தினால் ரூபத்தினை காண்பதுவும்

கேட்பதுவும் : சுரோத்திரியத்தினால் சப்தத்தினை கேட்டதும்

பகர்வதுவும் : வாக்கிந்திரியத்தினால் சொல் பொருள்களை கூறுதலும்

செல்வதுவும் : பாத இந்திரியத்தினால் நடத்தலும்

ஏற்பதுவும் : பாணீ இந்திரியத்தினால் கொடுத்தல் வாங்குதலுமாகிய எல்லாம்

கரண : ஞானேந்திரிய கர்மேந்திரியங்களின்

தன்மம் என : தருமங்கள் (இயல்பு) என்று

துணிவார் : ஜீவன் முத்தர்கள் நிச்சயம் செய்வார்

என்றவரோ : என்று கூறியருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

சட்சு இந்திரியத்தினால் ரூபத்தினை காண்பதும், சுரோத்திரிந்தியத்தினால் சப்தத்தினை கேட்டலும், வாக்கு இந்திரியத்தினால் சொல் பொருள்களை கூறுதலும், பாத இந்திரியத்தினால் நடத்தலும், பாணீ இந்திரியத்தினால் கொடுத்தல் வாங்குதலுமாகிய இவை அனைத்தும் ஞானேந்திரிய கர்மேந்திரியங்களின் தர்மங்கள் என்று ஜீவன் முத்தர் நிச்சயம் செய்வார் என்று கூறியருளிய பகவானோ நீர்.

விளக்கம் :

"தண்டி செல்கிறான்" என்ற வாக்கியத்தில் "தண்டி" என்ற சொல் தண்டத்தை (கம்பு) உடையவனை குறிக்கின்றது. தண்டம் (கம்பு) தர்மம். தண்டி தர்மி, பார்ப்பது கேட்பது இரண்டும் ஞானேந்திரியச் செயல். பேசுதல், நடத்தல், கொடுவாங்கல் செய்தல் (கையினால் செய்யும் செயல்கள்) ஆகிய இவை அனைத்தும் கர்மேந்திரிய தொழிலாம். பார்த்தல், கேட்டல், பேசுதல், நடத்தல், கையினால் செய்தல் ஆகிய செயல்கள் அனைத்தும் இந்திரியங்கள் செயல்களாம். அதாவது இந்திரியங்களின் தர்மங்களாம். ஆத்மாவின் செயலன்று.

கரணம் = கருவி; சட்சு = கண்; ரூபம் = உருவம்

சுரோத்திரம் = காது; வாக்கு = பேசுதல்; பாதம் = கால்

பாணி = கை.

98. பசி தாகம் உயிர்க்கெனவே பயம் துக்கம் சுகம் காமம்,
வசி கோபம் மதிக்கெனவே மகிழ்ந்திருப்பார் என்றவரோ

இதன் பதப்பொருள் :

பசி தாகம் : பசியும், தாகமும்

உயிர்க்கெனவே : பிராணனுக்கே தனக்கில்லை என்றும்

பயம் துக்கம் சுகம் காமம் : அச்சமும், துன்பமும், இன்பமும், ஆசையும்

வசிகோபம் : குற்றம் பொருந்திய கோபமும்

மதிக்கு : அந்தக்கரணத்திற்கே தமக்கில்லை

என மகிழ்ந்து : என்று கருதி சந்தோஷித்து

இருப்பார் : ஞானிகள் இருப்பார்கள்

என்றவரோ : என்று அருளிச் செய்த பகவானோ.

பொழிப்புரை :

பசியும், தாகமும், பிராணனுக்கே, தமக்கில்லை என்றும், அச்சமும், துன்பமும், இன்பமும், ஆசையும் குற்றம் பொருந்திய கோபமும், அந்தக் கரணத்திற்கே, ஆத்மாவாகிய தனக்கில்லை யென்று கருதி சந்தோஷித்து ஜீவன் முத்தர்கள் இருப்பார்கள் என்று அருளிச் செய்த பகவானோ (நீர்)

இச்செய்யுள் ஜீவன் முத்தர்களது குணத்தைக் குறிக்கிறது.

99. வீடும் தாரமும் உறவு மேவி என்றும் இருந்தாலும்
நீடும் தாமரையிலை நீர் நிகர் ஆவார் என்றவரோ

இதன் பதப்பொருள் :

வீடும் தாரமும் உறவும் : மனையையும், மனைவியையும் சுற்றத்தார்களையும்

என்றும் மேவி : சதா காலமும் ஜீவன் முத்தர்கள் பொருந்தி இருந்த போதிலும்

நீடும் தாமரையிலை : விரிந்த தாமரையிலுள்ள

நீர் நிகர் ஆவார் : தண்ணீர் தாமரையில் இருந்தும் அதனில் பற்றாது இருத்தல் போல் பற்றாது இருப்பார்கள்

என்றவரோ : என்று அருளிச் செய்த பகவானோ (நீர்)

பொழிப்புரை :

வீட்டையும், மனைவியையும், சுற்றத்தார்களையும், எப்போதும் சீவன் முத்தர்கள் பொருந்தி இருந்த போதிலும் விரிந்த தாமரையிலையிலுள்ள தண்ணீர் தாமரையிலையில் இருந்தும் அதனை பற்றாது இருத்தல் போல் மனை, மனைவி, சுற்றத்தாரோடு சேர்ந்திருந்தும் அவற்றில் பற்றாது இருப்பவர்கள் ஆவார்கள் என்று அருளிச் செய்த பகவானோ (நீர்)

விளக்கம் :

தாமரையிலையில் நீரானது பொருந்தியிருந்தாலும் அந்த இலையில் பற்றாமலும், இலையில் இருந்து கொண்டும் இருப்பது போல் ஜீவன் முத்தர்களாகிய ஞானிகள் ஏடணாதிரயத்திரயங்களோடு சேர்ந்திருந்தாலும் பற்றாது இருக்கக் கூடும் என்பது கருத்து. ஏடணாத்திரயம் = மூவேடனை = மூவகை = மனைவி, மக்கள், பொருள் மனைவியைத் தாரமாகவும், மக்களை உறவாகவும், பொருளை மனையாகவும் (வீடு) குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

இதனை கமல பத்ர (தாமரை இலை) உதக (நீர்) நியாயம் (திருஷ்டார்தம்) என்பர். இது ஞானியின் செயலாம்.

100. பற்றிடும் காயமும் தானும் பன்னாள் ஒன்றாயினும் பின்
உற்ற புளியம் பழமும் ஓடும் ஒப்பார் என்றவரோ

இதன் பதப்பொருள் :

பற்றிடும் : கர்ம அதீனமாக பொருந்தும்

காயமும் தானும் : சரீரமும் ஆத்மாவாகிய தானும்

பல் நாளும் : பலகாலம் அதாவது அஞ்ஞான காலத்தில் (அஞ்ஞானம் வந்தது முதல் ஞானம் வரும் வரை)

ஒன்றாயினும் : ஐக்கியமாயினும் (சேர்ந்தே யிருப்பினும்)

பின் : ஞானம் வந்த பின்னர்

உற்ற : பிஞ்சிலே பிரிவுபடாமல் ஐக்கிய முற்றிருந்து (ஒன்றாயிருந்தும்) பின் முதிர்தலை பொருந்திய (கனிந்த பின்பு)

புளியம் பழமும் ஓடும் : புளியம் பழமும் அதனது தோலும்

ஒப்பார் : போல முன்னுள்ள இயல்பு நீங்கி வேறுபட்டு விளங்குவது போல விளங்குவார் ஜீவன் முத்தர்.

என்றவரோ : என்று அருளிச் செய்தப் பகவானோ (நீர்)

பொழிப்புரை :

கர்மாதீனமாக பொருந்திய சரீரமும் ஆத்மாகிய தானும் பல காலம் அதாவது அஞ்ஞான காலத்தில் (அஞ்ஞானம்

தோன்றி ஞானம் வரும் வரை) சேர்ந்தே இருப்பினும், ஞானம் வந்த பின்னர் பிஞ்சிலே பிரிவு படாமல் ஒன்றாயிருந்தும் பின் கனிவு பொருந்திய புளியம் பழம் அதனது தோலும் போல முன்னுள்ள இயல்பு நீங்கி வேறுபட்டு விளங்குவது போல விளங்குவார் ஜீவன் முத்தர் என்று அருளிய பகவானோ (நீர்)

விளக்கம் :

கர்ம அதீனம் : நாம் முன்னுள்ள எத்தனையோ மானிடப் பிறவியில் சம்பாதித்த நற்கரும், தீயகருமங்களினால் மனதின்கண் வாசனை வடிவமாக பொருந்தியுள்ள புண்ணிய பாவமானது இப்பிறவிக்கு காரணமானதால் கர்ம அதீனமாம்.

101. கூறும் உலக இயற்கையுடன் கூடினும் மெய்ஞ்ஞானம் வந்தோர்
சேறும் பிள்ளைப் பூச்சியும் போல் திரிவார்காண் என்றவரோ

இதன் பதப்பொருள் :

கூறும் : அசுத்தம், துக்கம், அநித்தியம் என்று சொல்லுகின்ற

உலக இயற்கையுடன் : பிரபஞ்ச சுபாவத்தோடு

கூடினும் : பொருந்தி இருப்பினும்

மெய்ஞ்ஞானம் : திட அபரோட்ச தத்துவ ஞானம்

வந்தோர் : கைவரப்பெற்ற பெரியோர்

சேறும் : நீரினால் இளகிய தன்மையுடைய மண்ணாகிய சேறும்

பிள்ளைப் பூச்சியும் போல் : அதன் கண் சேறு ஒட்டாமல் சஞ்சரிக்கும் பிள்ளைப் பூச்சியினையும் போல

திரிவார் : இவ்வுலகின் கண் இவ்வுலக இயற்கையோடு பற்றின்றிச் சஞ்சரிப்பார் ஜீவன் முத்தர்.

என்றவரோ : என்றருளிச் செய்த பகவானோ (நீர்)

பொழிப்புரை :

அசுத்தம், துக்கம், அநித்தியம் என்று சொல்லுகின்ற பிரபஞ்ச சுபாவத்தோடு பொருந்தியிருப்பினும் திட அபரோட்ச தத்துவ ஞானம் கைவரப் பெற்ற பெரியோர் நீரினால் இளகிய

தன்மையுடைய சேறும் அதன் கண் சேறு ஒட்டாமல் சஞ்சரிக்கும் பிள்ளைப் பூச்சியினையும் போல, இவ்வுலகின் கண் இவ்வுலக இயற்கையோடு பற்றின்றி சஞ்சரிப்பவர் சீவன் முத்தர் என்று அருளிச் செய்த பகவானோ (நீர்)···→

விளக்கம் :

அநித்தியம் = நித்தியமில்லாதது = நிலையில்லாதது அசம்பாவனை, விபரீத பாவனையில்லாமல் உண்டாகும் பிரஹ்மாத்ம ஐக்கிய நிச்சயம் திட அபரோட்ச தத்துவ ஞானமாம்.

1. அசம்பாவனை : 1.பிரமாணகத சந்தேகம் 2.பிரமேயகத சந்தேகம்.

1.பிரமாணகத சந்தேகம் : வேதாந்தத்தில் ஜீவப்பிரம்மங்களின் பேதம் சொல்லப்பட்டிருக்கிறதா? அல்லது அபேதம் சொல்லப் பட்டிருக்கிறதா என்பது பிரமாண கத சந்தேகம்.

2. பிரமேய கத சந்தேகம் : ஜீவப்பிரம்மங்களின் பேதம் சத்தியமா? அபேதம் சத்தியா? என்பது பிரமேய கத சந்தேகம்.

2. விபரீத பாவனை : ஜீவப்பிரம்மங்களின் பேதம் சத்தியம் தேகாதி பிரபஞ்சம் சத்தியம் என்ற விபரீத பாவனை

விபரீதம் = திரிவு = மயக்கம் = ஆரோபம் = அத்தியாசம்

சஞ்சரித்தல் = நடமாடிக் கொண்டிருத்தல்

இது ஞானியின் செயல்களாம். இதனை பங்க (சேறு) கீடக (பிள்ளை பூச்சி – புழு) நியாயம் என்பர்.

102. ததி யூடு கடைந்த வெண்ணெய் தான் மோரில் கிடப்பது போல்
மதியோடு கூடினும் பின் மயங்கார் காண் என்றவரோ

இதன் பதப்பொருள் :

ததி யூடு : அபேதமாக கலந்திருக்கின்ற தயிரினிடத்து

கடைந்த வெண்ணெய் : கடைதல் செய்து எடுக்கப்பட்ட வெண்ணெய்

மோரில் : மோரினிடத்து (அதாவது கடையப்பட்ட அத்தயிரினிடத்து)

கிடப்பது போல் : பின்னர்ச் சேர்க்கப்படினும் அதனோடு கலவாது வேறுபட்டு இருப்பது போல

பின் : ஞானம் வந்த பின்னர்

மதியோடு கூடினும் : ஞானிகள் அந்தக்கரண வியவகாரத்தோடு கூடினும்

மயங்கார் என்றவரோ : மயக்கத்தினை அடைய மாட்டார்கள் என்று அருளிய பகவானோ (நீர்)

பொழிப்புரை :

ஒன்றாயிருக்கிற தயிரினிடத்து கடைதல் செய்து எடுக்கப் பட்ட வெண்ணெய் மோரினிடத்து (அதாவது கடையப்பட்ட அந்தத் தயிரினிடத்து) பின்னர்ச் சேர்க்கப் படினும், அதனோடு கலவாது வேறுபட்டு இருப்பது போல ஞானம் வந்த பின்னர் ஞானிகள் அந்தக் கரண விவகாரத்தோடு சேரினும் மயக்கமடைய மாட்டார்கள் என்று அருளிய பகவானோ (நீர்)

இதனை தக்ர (மோர்) நவநீத (வெண்ணெய்) நியாயம் என்பர்.

103. அருச்சுனன் தன் பொருட்டாக அனைவருக்கும் ஞானம் வரப்
பொருந்திய தேசிக வடிவாம் புண்ணியரே கண் வளரீர்

இதன் பதப்பொருள் :

அர்ச்சுனன் தன் பொருட்டாக : அர்ஜுனனது நிமித்தமாக

அனைவர்க்கும் : எல்லா ஜிஞ்ஞாசுகளுக்கும்

ஞானம் வரப் பொருந்திய : ஞானம் வரும்படி உபதேசிப்பதற்காக அமைந்த

தேசிக வடிவாம் : ஆசார்ய ரூபமாகிய

புண்ணியரே கண் வளநீர் : புண்ணியமே உருவமானவரே நித்திரை கொள்வீராக (நீர்)

பொழிப்புரை :

அர்ஜுனனது நிமித்தமாக எல்லா ஜிஞ்ஞாசுகளுக்கும் ஞானம் வரும்படி உபதேசிப்பதற்காக ஆசார்ய ரூபமாக அமைந்த புண்ணியமே உருவமானவரே நீர் நித்திரை கொள்வீராக

விளக்கம் :

ஞானபூமி ஏழு : 1.சுபேட்சை 2.விசாரணை 3.தனுமாநசி 4.சத்துவாபுத்தி 5.அசம்பத்தி 6.பதார்த்த பாவனை 7.துரியம் முதல் மூன்று பூமியினுள் இருப்பவர்கள் அப்பியாசிகள். அவர்களே ஜிஞ்ஞாசு அப்பியாசம் = பயிற்சி. அர்ஜுனனக்கு மட்டும் ஞானம் வருவதற்காக சொல்லப்பட வில்லை. அர்ஜுனனை நிமித்தமாகக் கொண்டு அனைத்து ஜிஞ்ஞாசு களுக்கும் ஞானம் பெற்று உய்வதற்காகச் சொல்லப்பட்டது என்பது கருத்து.

104. ஆயர் குல மாதர் அளவிலோரைப் புணர்ந்தும்
தூய பதின் ஆறாயிரவருடன் தோய்ந்திருந்தும்

இதன் பதப்பொருள் :

ஆயர் : இடையர்

குல மாதர் அறவிலோரை : குலத்திலுள்ள அளவற்ற பெண்களை

புணர்ந்தும் : சேர்ந்தும்

தூய பதின் ஆறாயிரவருடன் : பரிசுத்தமான பதினாயிரம் தேவ ஸ்திரிகளோடு

தோய்ந்திருந்தும் : பொருந்தியிருந்தும்

பொழிப்புரை :

இடையர் குலத்திலுள்ள அளவற்ற பெண்களைச் சேர்ந்தும் பரிசுத்தமான பதினாயிரம் தேவ ஸ்திரிகளோடு பொருந்தியிருந்தும்.

விளக்கம் :

பூர்வ ஜென்மத்தில் தேவர்கள் அனைரும் திருமாலை நோக்கி தவம் செய்து தரிசனம் பெற்று அவரிடம் ஒரு வரம் கேட்டனர். பகவானே தங்களது லீலைகளையும், தர்சனங்களையும், நாங்கள் தெரிந்து கொள்ளல் வேண்டும் என பிரார்த்தித்தனர். தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி

பகவான் அருளியது யாதெனின் நான் பூலோகத்தில் கிருஷ்ணனாக அவதாரம் எடுப்பேன். அப்போது தேவர்களாகிய நீங்களும் இடையர் குலத்தில் பிறந்து எனது லீலைகளை அறிந்து கொள்வீர்கள் என்றார். அங்ஙனம் தேவர்கள் இடையர் குலத்தில் பெண்களாக பிறந்தார்கள். கிருஷ்ண அவதாரமும் நடந்தது. ஆங்கு ஆயர்குலமாதராகிய பதினாறாயிரம் தேவ ஸ்திரிகளோடு சேர்ந்திருந்தார். இதனையே இங்கு "பதின் ஆறாயிர வருடன் தோய்ந்திருந்தும்" என்றார். (இச்செய்யுள் குளகம்.)

இடையர் = காடும் காடு சார்ந்த இடத்தில் வசிப்பவர்

ஸ்திரி = பெண்

இச்செய்யுளின் கருத்து இச்செய்யுளுடன் முடிவடையாமல் இருக்க; செய்யுளுடன் தொடர்ச்சியாக இருப்பதால் இச்செய்யுள் குளகம்.

105. பரம முநிவன் முன்னே பரிச்சித்தைத் தீண்டி அன்று
பிரமசரியம் செலுத்தும் பேர் ஒளியே கண்வளரீர்

இதன் பதப்பொருள் :

பரம முனிவர் முன் : மேலான ஞானிகள் சந்நிதியில்

பரிசித்து : பரிசித்து மகாராஜாவை

தீண்டி : திருக்கரத்தால் பரிசித்து

அன்று : அப்போது

பிரமசர்யம் : நான் நித்திய பிரம்மச்சாரி என்று பிரம்மச்சரிய ஆச்ரமத்தினை

செலுத்தும் பேர் ஒளியே : நடத்திய பூரணப்பிரகாசரே

கண் வளரீர் : நீர் நித்திரை செய்து அருள்வீராக.

பொழிப்புரை :

மேலான ஞானிகள் சந்நிதியில் பரிசித்து மகாராஜாவை திருக்கரத்தால் பரிசித்து அப்போது நான் நித்திய பிரஹ்மச்சாரி என்று பிரஹ்மசரிய ஆசிரமத்தினை நடத்திய பூரண பிரகாசரே நீர் நித்திரை செய்து அருள்வீராக.

விளக்கம் :

மகாபாரத யுத்தம் முடிந்ததும் அசுவத்தாமா பிரம்ம அஸ்திரத்தை பிரயோகித்தார். அந்த பிரம்ம அஸ்திரமானது கர்ப்பமாயுள்ள ஸ்திரிகளின் கர்ப்பத்தைக் கலைக்கக் கூடியது. அவ்வஸ்திரத்தை உபயோகித்ததும் அர்ஜுனனின் புத்திரனான அபிமன்யுவின் மனைவியான உத்தரையின் கர்ப்பமும் கலைந்தது. அவர் உயிரற்ற ஒரு பிண்டத்தை ஈன்றாள். பாண்டவர் வம்சத்திலே ஒரு வாரிசாக இருக்கக் கூடிய அக்குழந்தையும் உயிரற்றுக் கிடந்தது. அப்போது திரௌபதி, பஞ்ச பாண்டவர் மற்று எல்லோரும் கிருஷ்ண பகவானை வேண்டிக் கொண்டனர். தங்களது குலத்துக்கே வம்ச வழியாய் இருக்கின்ற அந்த குழந்தையும் இறந்து போய்விட்டதே. தாங்கள் தான் உயிர் பெற்று எழச்செய்து வம்சத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அதற்குப் பகவான் குழந்தை உயிர்பெற்று எழ வேண்டுமாயின் ஒரே ஒரு உபாயம் உண்டு. அதைச் செய்தால் அக்குழந்தை உயிர் பெற்று எழும் என்றார். அனைவரும் அந்த உபாயம் யாது? என்று கேட்க அதற்கு பகவான் பரிசுத்தமான பிரம்மச்சாரியின் பரிசம் பட்டால் உயிர் பெற்று எழும் என்றார். எல்லாச்சாது, சந்நியாசி, பிரம்மச்சாரிகளை அழைத்து வந்து எல்லோரிடமும் இவ்விஷயத்தினை சொல்ல ஒருவரும் அக்குழந்தையை தொட முன் வரவில்லை. ஏனென்றால் நாம் தொட்டு உயிர்பெற்று எழவில்லை யெனில் நாம் பிரம்மச்சரிய விரதம் சரியாக கடைபிடிக்கவில்லை என்று எல்லோரும் ஏளனம் செய்வர் என்று நினைத்து தத்தமது பிரம்மச்சரிய விரதத்தில் சந்தேகம் கொண்டவராய் ஒருவரும் அந்த உயிரற்ற குழந்தையைத் தொடுவதற்கு முன் வரவில்லை.

அதன்பின் பஞ்ச பாண்டவர், திரௌபதி, அபிமன்யுவின் மனைவி (உத்தரை) அனைவரும் கவலையுற்று கிருஷ்ணரிடம் முறையிட்டு வேண்டிப் பிரார்த்தித்தனர். பகவான் தானே முன் வந்து அந்தப் பிண்டத்தை தமதுத் திருக்கரத்தினால் "நான் பிரம்மச்சாரியாய்

இருப்பது சத்தியமானால் இக்குழந்தை உயிர் பெற்று எழக் கடவது" என்று திருவாய் மலர்ந்து கொண்டே அக்குழந்தையைத் தொட்டார். கிருஷ்ண பகவானின் பரிசம் பட்டவுடன் உயிர் பெற்று எழுந்தது. அதனால் அக்குழந்தைக்கு பரிசித் என்று நாமம் சூட்டப்பட்டது. அக்குழந்தை தான் பின்பு பரிசித் மகாராஜாவாம்.

அளவில்லாத மாதர்களோடு சம்பந்தத்திருந்தும் (சேர்ந்திருந்தும்) கிருஷ்ண பகவானானவர் "நான் நித்தியப் பிரம்மச்சாரி" என்று திருவாய் மலர்ந்தருளியது எங்ஙனம் பொருந்தும்? என்பது சந்தேகம். நான் பருத்தேன், நான் இளைத்தேன், நான் பார்த்தேன், நான் கேட்டேன், நான் போகித்தேன், நான் புசித்தேன், நான் சிந்தித்தேன், நான் செய்தேன் என்று அஞ்ஞான நிலையில் நானாக விளங்குகின்ற தூல சூட்சும சரீரங்களும், ஞானம் வந்தவுடன் என் சரீரம் பருத்தது. என் சரீரம் இளைத்தது என் கண் பார்த்தது, என் காது கேட்டது, என் இந்திரியம் போகித்தது, எனது நாக்கு ருசித்தது, எனது புத்தி சிந்தித்தது எனது கர்மேந்திரியங்கள் செயல் புரிந்தது என்று அறிந்து கொள்வது தான் தத்துவ ஞானம். தூல சூட்சும சரீரங்களின் செயல்கள் ஆத்மாவாகிய தனக்கில்லை என்று நிச்சயித்து திடப்படத் தேறி கவலையற்று இருக்கின்றவனே ஜீவன் முத்தன்.

கிருஷ்ண பகவான் "சர்வ சாட்சியாகிய பிரம்மமே நான்" என்றும் தேகாதி பிரபஞ்சங்கள் அனைத்தும் என்னிடத்து கற்பனையினால் மாயத்தோற்றமாகத் தோற்றிக் கொண்டிருக்கிறது என்றும் தெளிவான திடமுடன் இருந்ததனால் அபிமானமற்று இருந்தார். பிரம்மமே நான் எனும் ஸ்திர -நிலையுடன் இருந்து பிரம்ம மயமாய் இருந்ததினால் "நான் நித்தியப் பிரம்மச்சாரி" என்று திருவாய் மொழிந்து கொண்டே குழந்தையைத் தொட்டார். குழந்தை உயிர் பெற்று எழுந்தது. பகவான் தேகாதிகளில் நான் என்ற அபிமானமில்லாமல் பிரம்மமே நான் என்ற நிஷ்டையில் இருந்தார் என்பது கருத்து.

மனோ மய கோசம் இச்சா சக்தியுடைய காரண வடிவம். பிராண மய கோசம் கிரியா சக்தியுடைய காரிய வடிவம். விஞ்ஞான மய கோசம் ஞான சக்தியாகிய கர்த்தா வடிவம், ஆனந்த மய கோசம் இன்பத்தை அனுபவிக்கும் போக்தா வடிவம். இன்பத்தை அனுபவிக்கும் ஆனந்த மய கோசத்தை நான் அனுபவிக்கிறேன் என்று அபிமானிப்பது விஞ்ஞான மய கோசமாம். இச்சா சக்தியுடைய காரண வடிவமும், கிரியா சக்தியுடைய காரிய வடிவமும், ஞான சக்தியுடைய கர்த்தா வடிவமும், இன்பத்தை அனுபவிப்பது போக்தா வடிவவுமாகிய இவை அனைத்தும் பஞ்ச கோசத்தின் செயல்களாம். இவை அனைத்தும் பிரம்மமாகிய தனக்கில்லை என்று கிருஷ்ணர் பிரம்ம நிஷ்டையில் இருந்ததினால் "நான் நித்தியப் பிரம்மச்சாரி" என்றார். பகவானின் திருவாக்கு பலித்து பரிசித் உயிர் பெற்று எழுந்தான்.

சீவர்கள் மாயையின் வசப்பட்டவர்கள். அவர்கள் ஆத்ம ஞானத்தை அடைந்து மாயையிலிருந்து விடுபட வேண்டும். பகவான் மாயையை தன் வசப்படுத்தியவர். எனவே மாயையானது பகவானிடம் இல்லை. தண்ணீரில் படகு உள்ளது. படகில் தண்ணீர் இல்லாதது போல. ஆனால் ஜீவர்கள் படகினுள் தண்ணீர் இருப்பது போல.

106 . ஆதிமூலம் விசயற்கு ஆதி மறையின் பொருளை
ஓதியுணர்த்தும் இந்த உண்மைதனைக் காதலுற்று
கற்றோரும் கேட்டோரும் காசினியில் வாழ்ந்து முத்தி
பெற்றோர்கள் முத்தர் பெறும் பேறு.

இதன் பதப்பொருள் :

ஆதி மூலம் விசயற்கு : ஆதி காரணனாகிய பகவான், விசயற்கு

ஆதி மறையின் : முதன்மையான வேதத்தின்

பொருளை : பொருளாகிய பிரம்மத்தினை

ஓதி உணர்த்தும் : உபதேசித்து அறிவிக்கும்

இந்த உண்மைதனை : இச்சத்தியமான கீதாச்சாரத்தினை

காதல் உற்று கற்றோரும் : விருப்பம் பொருந்தி படித்தோரும்

கேட்டோரும் : ஆசாரியரிடம் சிரவணம் செய்தோரும்

காசியினில் : இவ்வுலகில்

வாழ்ந்து : ஆனந்தமாக வாழ்ந்து

முத்தர் பெறும் பேறு : ஞானிகள் அடைகின்ற பிரயோசனமாகிய

முத்தி பெற்றோர்கள் : மோட்சத்தை அடைந்தவர்களே ஆவர்.

பொழிப்புரை :

ஆதி காரணனாகிய பகவான் அர்ஜுனனுக்கு முதன்மையான வேதத்தின் முடி பொருளாகிய பிரம்மத்தினை உபதேசித்து அறிவிக்கும் இந்த சத்தியமான கீதாச்சாரத்தினை சிரத்தையோடு படித்தோரும் ஆசாரியரிடம் சிரவணம் செய்தோரும் இவ்வுலகத்தில் ஆனந்தமாக வாழ்ந்து ஞானிகள் அடைகின்ற மோட்சத்தினை அடைந்தவர்களே ஆவர். மோட்சத்தினை அடைவார்கள் என்பது திண்ணம்.

விளக்கம் :

மனைவி, மக்கள், செல்வம், புகழ், பதவியுடன் சிறப்பாக வாழ்வதே உயர் வாழ்க்கை என்று உலக மக்கள் அனைவரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவை யாவும் உயர் வாழ்வு என்று சொல்லவும் கூடாது சொல்லவும் முடியாது. யாரொருவர் ஆத்ம ஞானத்துடன் கூடி தன்னையறிந்து தெளிவாக ஆனந்தத்துடன் வாழ்கின்றாரோ அதுவே உண்மையான வாழ்வாம். அவர்களைத் தான் “வாழ்ந்தவர்கள் என்றும் வாழ்கின்றவர்கள்” என்றும் சொல்லலாம்.

கீதாச்சாரத் தாலாட்டு உரை முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.



ஆசிரியரைப் பற்றி,

இந்நூல் உரையாசிரியர் பெ.ராதாகிருஷ்ணன் அவர்கள் தேனி மாவட்டம் வீரபாண்டிக் கிராமத்தில் வசித்து வருகிறார். அவர்கள் தமிழ் மரபில் இருந்து வருகின்ற கோவிலூர் பரம்பரையில் வந்த சொரூபானந்த சுவாமி களிடம் வேதாந்தத்தை முறையாகக் கேட்டு ஞான தீட்சை பெற்றுள்ள ார். வேதாந்த பாடமும் நடத்தி வருகின்றார்.

இதற்கு முன்பு இந்து மதத்தைப் பற்றிய முகவுரையாக இகபர இந்துமத சிந்தனை என்ற தலைப்பில் நூல் ஒன்றை அமைத்துள்ளார். அந்நூல் கேள்வி பதிலாக அமைந்துள்ளது. அந்நூல் ஆன்மீக நாட்டமுடையவர்களுக்கு அடிப்படையான விஷயங்களைத் தெரிந்து கொள்ள உதவும் என்பது உறுதி.

இங்ஙனம்
சொரூபானந்த சுவாமிகளின்
மாணாக்கர்களின் ஒருவராகிய
மு.கிருஷ்ணசாமி
ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம்.